

ரா காந்தி

(ஒரு சத்தியாகிரகியின் கதை)

மதுரை காந்தி

(அமரர் நா.ம.ரா. சுப்பராமன் வாழ்க்கை வரலாறு)

ஆசிரியர்
பா.சி. சந்திரபிரபு M.A., M.Phil.,

வெளியீடு
காந்திய இலக்கியச் சங்கம்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-625 020

Sourashtra Vidya Vallari

காந்திய இலக்கியச் சங்க வெளியீட்டு எண் : 36

புத்தகத்தின் பெயர்	:	மதுரை காந்தி
ஆசிரியர் பெயர்	:	பா. சி. சந்திரபிரபு
பொருள்	:	வாழ்க்கை வரலாறு நா. ம. ரா. சுப்பராமன் வாழ்க்கை வரலாறு
வெளியிட்டோர் & பதிப்புரிமை	:	காந்திய இலக்கியச் சங்கம், மதுரை-625 020
அச்சிட்டோர்	:	வைகை அச்சகம், மதுரை-625 001
பதிப்பு & பிரதிகள்	:	முதற்பதிப்பு செப்டம்பர் '86 2000
விலை	:	ரூ. 5-00

Name of the Book	:	Madurai Gandhi
Author	:	P. S. Chandraprabhu
Publisher & Copyright	:	Gandhian Literature Society Madurai-625 020
Subject	:	Life History N. M. R. Subbaraman
Printer	:	Vaigai Achagam Madurai-625 001
Edition & Copies	:	First, September '86 2000 Copies
Price	:	Rs. 5-00

பதிப்புரை

நாம் காந்தியுகத்தில் வாழ்கின்றோம். அண்ணலின் வாழ்க்கை நெறியின் தாக்கத்தால் வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து சிறந்தவர்கள் சிலர். அவர்களது வாழ்க்கை மற்றவர்களுக்கு வழிகாட்டும் இலக்கியமாகத் திகழ்கின்றது. அத்தகைய போற்றுதற்குரிய ஒரு காந்தியப் பெரியவரின் வாழ்க்கை வரலாற்றை வெளி யிடுவதில் பெருமைப்படுகின்றோம்.

'மதுரை காந்தி' என்று மதிக்கப்பெற்ற 'மதுரை ஐயா உயர்திரு நா.ம.ரா. சுப்பராமன் அவர்களை நேரில் கண்டவர்கள், பழகியவர்கள், பண்பாட்டின் இமயமாக விளங்கிய அவர்களை என்றும் மறக்க முடியாது.

துரும்பினும் மெலிந்த தேகம். துலங்கிடும் குளிர்ந்த பார்வை. கரும்பினும் இனிய சொற்கள். கனிவினைக் காட்டும் நோக்கு. தேசத்தின் நலமே பேச்சு-திக்கற்றோர் வாழுதற்கு தினம், தினம் தொண்டு செய்தார். தன்னலம் சிறிதுமின்றி தரணியில் வாழ்ந்தார். இன்று — நம் இதயத்தில் வாழுகின்றார்.

நமது காலத்தில் வாழ்ந்தவர் என்றாலும் மதுரை ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முறைப்படி தொகுத்து, எழுதுவதென்பது ஓர் அரிய பணியாகும். இந்தப் பணியைச் செய்தவர் திரு. பா.சி. சந்திரபிரபு எம்.ஏ., எம்.பில். இந்த இளைஞர் தனது எம்.பில். ஆய்வுக்காக உயர்திரு. நா.ம.ரா. சுப்பராமன் அவர்

களின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டு, பெரிதும் முயன்று செய்திகளைச் சேகரித்திருக்கின்றார். வாழ்க்கை வரலாற்றுச் செய்திகளைத் தேடிக் கண்டு பிடித்து தொகுப்பது, கடலில் மூழ்கி முத்துக்களை எடுப்பதைப் போன்றது. அந்தப்பணியை அருமையாகச் செய்திருக்கும் திரு பா. சி. சந்திரபிரபு அவர்களைப் பாராட்டி, நன்றி கூறுகின்றோம். இதே போன்ற பணிகளை அவர் தொடர்ந்து செய்ய வாழ்த்துகின்றோம்.

திரு பா. சி. சந்திரபிரபு எழுதிய நூல், அவரது முதல் நூல் என்ற வகையில் பட்டை தீட்டாத வைரக்கல்லைப் போன்று இருந்தது. அதனைப் பட்டை தீட்டி, அழகுக்கு அழகு சேர்த்து வடிவமைக்கும் பணியை தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, தமிழ்நாடு சர்வோதய சங்கம் ஆகியவற்றின் தலைவரும், 'கிராமராஜ்யம்' ஆசிரியரும் முதுபெரும் பண்பட்ட காந்திய எழுத்தாளருமான உயர்திரு. வீ. செல்வராஜ் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்களுக்கேயுரிய முத்திரைகள் மின்ன, இந்நூலை சரிபார்த்து, திருத்தி, மெருகூட்டித் தந்த அவர்களுக்கு எங்களது இதயம் கனிந்த நன்றி.

இந்நூலை ஒரு முற்றும்பெற்ற நூலென்று கூற 'முடியாது. இதில் சேர்க்க வேண்டிய செய்திகள், புகைப்படங்கள் இன்னும் ஏராளமாக இருக்கலாம். அவற்றை அறிந்தவர்கள் கூறினால், அடுத்த பதிப்பில் முயன்று அவற்றையும் சேர்த்துக் கொள்வோம். மதுரை ஐயாவோடு தொடர்புடைய பெரியவர்கள் இந்நூல் அடுத்த பதிப்பில் சிறப்பாக வெளிவர தங்களது கருத்துக்களைக் கூறி உதவ வேண்டுகின்றோம்.

மதுரை ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாறு சிறப்பாக வெளிவர வேண்டுமென்று எங்களைத் தூண்டி வழி காட்டியவர்கள் அகில இந்திய காந்தி நினைவு நிதித் தலைவர் உயர்திரு. க. அருணாசலம் அவர்களும் 'கோவை ஐயா' உயர்திரு தி.சு. அவினாசிலிங்கம் அவர்களும் ஆவர். அவர்களுக்கும் எங்களது நன்றிகள்.

நூலை ஓரளவு குறைந்த விலையில் வெளியிட நிதி உதவி செய்த சீதாபாய் பார்வதவர்த்தனி அம்மாள் டிரஸ்ட், திரு. தி. சு. அவினாசிலிங்கம், திரு. ஜி. பி. சங்கோாயி ஆகியோர்களுக்கும் எங்களது நன்றிகளைப் படைக்கின்றோம்.

தமிழ்கூறும் நல்லுலகம் இந்நூலுக்கு ஆதரவும், ஆக்கமும், ஊக்கமும் தந்து, நாங்கள் இதனைப் போல பல நூற்கள் வெளியிட உதவுமென்று நம்புகின்றோம்.

மதுரை
11-9-86

மா. பா. குருசாமி
தலைவர்
காந்திய இலக்கிய சங்கம்

நான்முகம்

''சத்தியமே கடவுள்'' என்றார் காந்தியடிகள். சத்தியம் தேங்கிய குட்டை போன்றதல்ல; நாள்தோறும் பயனளிக்கும் ஜீவநதி போன்றது; நிகழ்காலப் பாங்குடையது. தேங்கி நிற்கும் சமுத்திர நீர் சூரிய வெப்பத்தால் நீராவியாகி, வானவெளியில் மேகமாகப் பறந்து சென்று, குளிர்ந்து மழையாகப் பொழிந்து, உயிரினங்களை வாழ்வித்து மீண்டும் சமுத்திரம் சென்றடையும் ஜீவநதியின் ஆற்றல் எத்தகையது? அதுபோல் சத்தியம் ஒரு மாபெரும் சக்தியாக உருவெடுத்து உலகை மேம்படுத்தும் அற்புத ஆற்றலை சத்தியாகிரகம் என்கிறோம். ''சத்தியாகிரகம்'' காந்தியுகத்தில் தோன்றியதொரு நூதனச் சொல், அதனைச் சாதித்த முதல் சத்தியாகிரகி காந்தியடிகள்.

காந்தியடிகளின் சத்தியாகிரக வழிமுறையில் தமது இளமைப்பிராய முதல் இறுதி வரை வாழ்ந்து காட்டிய வள்ளல் அமரர் தியாகி நா.ம.ரா.சுப்பராமன் அவர்கள். இந்த லட்சிய சத்தியாகிரகியின் கதையை இந்நூல் அழகுபட வருணிக்கிறது.

நூலாசிரியர் திரு P. S. சந்திரபிரபு இளைஞர். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பிறந்தவர். ஐயா சுப்பராமன் அவர்களை நேரில் பார்த்திராதவர் ஆயினும் இவ் வரலாற்றை எழுதும் அதிர்ஷ்டம் பெற்றவர். மதுரை-காமராஜர் பல்கலைக்கழகத்தில் M.Phil பட்டப்படிப்பின் ஆய்வுக்காக அவர் திருநெல்வேலிச் சீமையிலிருந்து மதுரை வந்தார். மதுரை ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்யுமாறு பேராசிரியர்கள் பலர் அவருக்குப் பரிந்துரை செய்தனர். தயக்கத்தோடு இதனை ஏற்றார் இந்த மாணவர். ஆய்வு செய்யப் புகுந்த ஒரு சில நாட்களிலேயே தியாகச் செம்மல் ஒருவரின்

சுவையான பொக்கிஷப் பெட்டகத்தினுள் நுழைந் திருப்பதை அவர் உணர்ந்தார். ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் இடம் பெற்ற நிலையங்கள், இயக்கங்கள், ஆவணங்கள், கடிதங்கள் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டபோது ஒரு மாபெரும் சத்தியாகிரகி அங்கு தோன்றுவதை அவர் கண்டு பிரமித்தார். கிணறு வெட்டப்புதையல் கிடைத்தாற் போலாயிற்று. ஆராய்ச்சி மாணவராகச் சென்ற அவர் ஒரு புனிதயாத் திரையை மேற்கொண்டவரைப் போன்று ஐயா அவர் களின் ஆழ்ந்த பக்தராகப் பரிணமித்தார். இத்தனை பெரியதொரு மாமனிதர் மதுரையில் வாழ்ந்திருக்க அவரை நேரில் தரிசிக்க வாயிப்பில்லாது போனது பற்றி அவர் வருந்தினர். இந்த அற்புதமான வாழ்க்கை வரலாற்றினை இளைஞர்கள் முன் அறிமுகப்படுத்தத் தமிழகம் தவறியதேன் என்று அவர் ஏங்கினர். உலக வரலாறு இதுவரை கண்டிராத நூதனமான சத்திய சோதனையாக விளங்கும் காந்தி வழி பயின்ற சத்தியா கிரகமான இந்திய சுதந்திரப் போராட்டத்தின் செய்தி களைக் கூட இன்றைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தத் தவறிய ஆட்சியாளர்களின் அலட்சியப் போக்கை இந்த அப்பாவி இளைஞர் அறியார் போலும்!

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சத்தியாகிரக வரலாறு அற்ப சொற்பமான நிகழ்ச்சியா? உலக வரலாற்றில் இதுவரை நிகழ்ந்த அற்புதங்களில் இது சிகரம் அல்லவா! இன்றைய அணுயுகத்தின் இடிபாடு களுக்கிடையில் ஜீவ நீரூற்ருக முகிழ்ந்து உலகத்தை உய்விக்க வந்த ஆன்மீக சக்தியின் கல்கி அவதாரம் இது என்பதை உலகநாடுகள் வியந்த கண்களுடன் இந்தியா வை எதிர்நோக்கி நிற்க, சத்தியாகிரகம் பிறந்த இந்த

நாட்டிலோ இலட்சிய சத்தியாகிரகிகளின் வாழ்க்கை வரலாறு இளைய சமுதாயத்தின் சிந்தனைக்கு அளிக்கப் பெறாதது பரிதாபத்துக்குரியதாகும். இந்நிலையில் ஒரு ஆராய்ச்சி மாணவர் ஐயா அவர்களின் வரலாற்றை பக்தி உணர்வுடன் சமர்ப்பணம் செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

உன்னதமான சத்தியாகிரகியின் இவ்வரலாற்றுக்கு நல்லதொரு நூல் வடிவமைத்து அதனை மக்கள் மன்றத்துக்கு அறிமுகப்படுத்த முன்வந்துள்ள காந்திய இலக்கியச் சங்கம் நமது நன்றிக்குரியதாகும். ஒருவகையில் காந்திய இலக்கியச் சங்கமே ஐயா அவர்களின் படைப்புகளில் ஒன்றாகும். அவர்கள் தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் காரியதரிசியாகப் பொறுப்பேற்று அரிய பல நிறுவனங்களை உருவாக்கிக் கொண்டிருந்த காலத்தில் காந்தியடிகளின் வாழ்வு வாக்கு பற்றிய செய்திகள் அனைத்தையும் தமிழில் திரட்டி அளிக்க காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தை நிறுவினார். இந்நிறுவனம் அவற்றைப் பதினேழு தொகுதிகளாகத் திரட்டி தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அரியதொரு பொக்கிஷமாக்கித் தந்து அதன் பணியை நிறைவுபடுத்திற்று. காந்திய இலக்கியப் பணி இத்துடன் நின்றுவிடாமல் தொடரவேண்டும் என்ற நோக்கத்தோடு காந்திய இலக்கியச் சங்கம் நிறுவப் பெற்று அரிய சாதனைகள் பல ஆற்றிவருகிறது. அவற்றுள் ஒன்றாக ''ஒரு சத்தியாகிரகியின் வரலாறு'' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள ''மதுரை காந்தி'' என்ற இந்நூல் அணி சேர்க்கிறது.

நூலின் ''கோபுர வாசல்'' ஆலயத்துக்குள் நுழையு முன்னரே மூலநாயகரின் முழுமையான புனித ஆளுமையின் சாரத்தை சுவைபடத் தருகிறது.

ஐயா அவர்களின் வரலாற்றைத் தொகுத்தளிப்பதோடு அவரது பல்வேறு காந்தியப் பணிகளை சுதந்திரப் போராட்ட தியாகியாகவும், நகர் மன்றத் தலைவராகவும், சட்டமன்ற பாராளுமன்ற அங்கத்தினராகவும், காந்திய நிர்மாண திட்டச் செயல் வீரராகவும் பல்சுவைப் பாங்கில் அவர் ஆற்றிய அற்புதத்தை இந்நூல் நமக்குத் தரிசனம் செய்விக்கிறது.

ஐயா அவர்களின் முழு வரலாற்று நிகழ்ச்சிகளும் இந்நூலில் இடம் பெற்றுவிட்டன என்று கூறுவதற்கில்லை. அது பாற்கடல் போன்றது. அதன் படித்துறை ஒன்றில் இறங்கிச் சுவைத்து மகிழுவதற்கு ஏதுவாக இந்நூல் உதவுகிறது. ஐயா அவர்களை அறிந்த அன்பர்கள் மாத்திரம் அன்றி குறிப்பாக இன்றைய இளைஞர் உலகம் இதனைப் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் ஒரு இளைஞரால் எழுதப்பெற்றதொரு ஆய்வுக் கட்டுரை இந்நூல். கற்கண்டுக் கட்டியின் ஒரு சிறு துணுக்கும் கூட முழுமையின் சுவையைச் சுவைக்கும் மன நிறைவை அளிப்பது போல் இந்நூல் ஆலயதரிசனத்துக்கு ஒரு கோபுர வாயிலாகும்.

இந்நூன்முகத்தின் நோக்கம் ஐயா அவர்களை அல்ல, இந்நூலாசிரியரையும் இந்நூலையும் அறிமுகப்படுத்துவதாகும். கோபுர வாயில் மூலம் ஆலயத்துள் புகுந்து மூல விக்கிரகத்தை நேயர்கள் தரிசித்து மகிழ்வார்களாக! ஐயா அவர்களின் ஆதர்சம் பெற்ற ஆயிரமாயிரம் தொண்டர்களில் ஒரு சிறுத்தொண்டன் என்ற உரிமையில் இந்நூன்முகம் அளிக்கும் வாய்ப்பினை எமக்களித்த காந்திய இலக்கியச் சங்கத்துக்கு நன்றி கூறி இதனை பக்தி விநயத்துடன் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவேனாகவும்.

மதுரை-20
2-10-1986

வீ. செல்வராஜ்
தலைவர்
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி

முன்னுரை

''மதுரை காந்தி'' என்று மிகவும் பிரியமுடன் அழைக்கப்படும் மதுரை ஐயா அமரர் நா. ம. ரா. சுப்பராமன் அவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்து நமக்கு உதாரண புருஷராக விளங்கிய தன்னலமற்ற தியாகி, அன்பு, அகிம்சை, சத்தியம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற சிறந்த காந்தியவாதி. அமைதி தவழும் சாந்தமான முகம், கனிவான பார்வை, மென்மையான குரல், மெலிந்த உடல், தூய்மையான கதராடை போன்றவை அமரர் சுப்பராமனின் தோற்றம். அவர் இரக்க சிந்தனை மிக்கவர், ஏழை எளியோருக்கு உதவுவதில் விருப்பமுள்ளவர், சிறந்த பக்திமான், மிகுந்த கலைஞானம் படைத்தவர். எப்பொருள் எவ்விடத்தில் இருக்க வேண்டும், எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணம் படைத்தவர். ஒருமுறை ராஜாஜி அவர்கள் சென்னை மாகாண முதல்வராக இருந்தபோது ''அகில இந்திய பணியில் உள்ள அலுவலர்கள் மதுரை சுப்பராமனிடம் சென்று ஒரு மாத காலமேனும் பயிற்சி பெறவேண்டும்'' என்று கூறுமளவிற்கு அவர் சிறந்த கட்டுப்பாடும் கடமையுணர்வும் உள்ளவர். காந்தியடிகளின்பால் கவரப்பட்டு அமரர் சுப்பராமன் தமது இளமை வயது முதல் வாழ்நாள் இறுதி வரை நாட்டுக்காகத் தியாகம் செய்தார். எவ்விதமான விருப்பு வெறுப்புக்கும் இடமின்றி புனிதமான வாழ்க்கை நடத்தி வந்தார். ஏழை எளியோரின் நலனில் தனிக்கவனம் செலுத்தி வந்தார். அரிஜனங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்று கருதிய அமரர் சுப்பராமன் தம் வாழ்நாளின் பெரும் பகுதியை அரிசனங்களின் நலனுக்காகவும் தீண்டாமை ஒழிப்பிற்காகவும் செலவு செய்தார். காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மிகுந்த ஆர்வத்துடன் அயராது உழைத்தார். நாட்டின் நலனைத் தம் கருத்தில் கொண்டு அரும்பெரும் தியாகங்களைச்

செய்த அமரர் சுப்பராமனின் வாழ்க்கை வரலாறு அரசியல் மற்றும் சமூகத் தொண்டு செய்துவரும் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் மற்றும் வருங் காலத் தலைவர்களாக விளங்கப்போகும் இன்றைய மாணவ மாணவியர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது திண்ணம்.

இந்நூல் ''நா. ம. ரா. சுப்பராமன்.........ஓர் ஆய்வு'' என்ற தலைப்பில் எனது எம்ஃபில் ஆராய்ச்சிக் கட்டுரையைத் தழுவியது. அமரர் சுப்பராமனின் வாழ்க்கை வரலாற்றை நூலாகத் தொகுப்பதற்கு ஏராளமானோர் எனக்கு உதவியாக இருந்தார்கள். அவருடைய இளைய சகோதரர் திரு. நா.ம.ரா. கிருஷ்ண மூர்த்தி, கோவை ஐயா திரு.தி.சு. அவிநாசிலிங்கம் திரு. க. அருணாசலம், திரு. வீ. செல்வராஜ், திரு. டி. கே. ராமா, திரு. ரவீந்திரன், திரு. பழனிச்சாமி போன்றோர்கள் தங்களிடமிருந்த குறிப்புகளை எல்லாம் தந்துதவி ஆரம்ப காலமுதல் என்னை மிகவும் ஊக்குவித்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன். மதுரை காமராஜர் பல்கலைக் கழக வரலாற்றுத் துறை விரிவுரையாளர்களான டாக்டர் பி. சோபணன், டாக்டர் பி. கோபாலகிருஷ்ணன் போன்றோர்கள் எனது ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள். இப் புத்தகம் வெளியிட அனுமதியும், ஆதரவும் அளித்த இராஜபாளையம் இராஜுக்கள் கல்லூரி நிர்வாகத் தினருக்கும் முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலைப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடும் காந்தி இலக்கிய சங்கத்தாருக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

பா. சி. சந்திரபிரபு

உள்ளே

பக்கம்

1.	கோபுர வாசல்	1
2.	இளமைப் பருவம்	6
3.	தேசப் பணியில் பயிற்சி	17
4.	சுதந்திரப் போரில் பங்கு	27
5.	நகராட்சித் தலைவர்	43
6.	சட்டமன்ற பாராளுமன்ற அங்கத்தினர்	62
7.	அரிஜன முன்னேற்றப் பணி	76
8.	காந்திய நிர்மாணப் பணிகள்	92
9.	இறுதி நாட்கள்	120
10.	மதுரை காந்தி	128

Saurashtra Vidya Vallari

ஹரிஜனங்களின் தந்தை சுப்பராமன்

மாணவர் பருவத்தில் சுப்பராமன்-1922

1. கோபுர வாசல்

மக்கள் அவரை ''மதுரை காந்தி'' என்று மனதாரப் பாராட்டினர். அவரோடு நெருங்கிப் பழகிய தொண்டர் குழுவினர் அவரை ''மதுரை ஐயா'' என்று அன்புடன் அழைத்தனர். அவர்தாம் நாட்டாண்மை மல்லி ராயலு சுப்பராமன் (நா. ம. ரா. சுப்பராமன்) அவர்கள். சௌராஷ்டிர சமுதாயத்துக்கு அவரது குடும்பம் தலைமை தாங்கியதால் ''நாட்டாண்மை'' காரணப் பெயராயிற்று. ''மல்லி'' குடும்பத்தின் வழக்குப் பெயர்.

அன்பு ததும்பும் திரண்ட விழிகள். கூர்த்த மதி தவழும் அகன்ற நெற்றி, கம்பீரமான மூக்கு, புன் முறுவல் பூத்த உதடுகள், புலனடக்கத்தாலும் தவத்தாலும் அருள் பொலியும் முகவிலாசம், சிவந்த மேனி, அரையில் கச்சிதமாக அணியப் பெற்ற கதர் பஞ்சகச்சம், மேலே கதர் ஜிப்பா, தோளில் மடிப்புக் கலையாத வெள்ளை அங்கவஸ்திரம். இத்தியாதி வருணனை ஐயா அவர்களின் தோற்றத்தை நம் கண்முன் காட்சியாக்கித் தருகிறது.

அளவறிந்து பேசும் அவரது குரல் கேட்போர் காதுகளுக்கு எட்டும் அளவில் மிகாமலும் குறையாமலும் இனிமையுடன் ஒலிக்கிறது. இறைவன் அளித்துள்ள ஆற்றல்கள் அனைத்தும் விரையத்துக்கு உட்படாமல் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இதன் குறிப்பு. அவரது மெல்லிய கைவிரல்கள் அதற்கிசைய அளந்து அசைகின்றன. இரைந்து பேசும் இயல்புடையரேனும் அவரது சந்நிதானத்தில் சாத்வீக பாவனைக்கு ஆளாகின்றனர். ஐயா அவர்களது உதவி நாள்தோறும் அவரை நாடி வந்த நலிந்த பிரிவினரும் ஊழியர்களும் அறிஞர்களும் வெறுங்கையுடன் திரும்பியதில்லை.

பிறர் துன்பம் கேட்டபோதெல்லம் அவரது மனம் வாடுவதை முகம் காட்டும். பிறர் பெறும் மகிழ்ச்சி அவரது கண்களில் பிரதிபலிக்கும். சிறியோர் பெரியோர் என்ற பேதமின்றி அன்பு பாராட்டி அவர்கள் கூறுவதைச் சிரத்தையுடன் செவிசாய்த்துக் கேட்கும் பாங்கு நமது மனக்குறை தீர்ந்தது போன்ற உணர்வினை அளிக்கும். அவரது சக ஊழியர்களின் இன்ப துன்பங்களில் அவருக்கு அத்தனை ஈடுபாடு. "தனி மனிதர் நலன் சமுதாய நலனில் அடங்கும் என்ற சர்வோதய தத்துவத்தின் முதலாவது கோட்பாட்டை அவரது ஒவ்வொரு அசைவும் சாட்சி பகரும். தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்தில் நிகழும் இன்ப துன்பம் அனைத்தும் அவரது உள்ளத்தைப் பாதிப்பதை அவரது முகம் பளிச்சிட்டுக் காட்டும். **அத்தகைய அத்வைத அனுபூதி ஐயா அவர்கள்.**

அவர் செல்வம் கொழிக்கும் குடும்பத்தில் பிறந்தவர். ஆயினும் அச்செல்வத்தை அவர் தமக்கெனப் பாவித்த தில்லை. காந்தியடிகள் வகுத்த தர்மகர்த்தாக் கோட் பாட்டிற்கு ஒப்ப நம்முன் நிதரிசனமாக வாழ்ந்து காட்டிய வள்ளல் அவர். நியாயமான செலவினம் எதையும் அவர் செய்யாது தவிர்த்ததில்லை. நல்ல காரியங்கள் அனைத்துக் கும் அவர் வாரி வழங்கினார். ஆடம்பரச் செலவினங்களை உறுதியுடன் தவிர்த்தார். தேர்தல் காலத்திலும்கூட அவர் அதில் உறுதி காட்டியது பிரசித்தம். தெய்வீகமான சிக்கனம் அவரது வாழ்க்கை நெறிமுறை. ஈசாவாஸ்ய உபநிடதத்தின் கோட்பாட்டிற்கு ஒப்ப அவர் அனைத்தை யும் இறைவனுக்குப் படைத்து மீந்ததை பிரசாதமாக ஏற்று மகிழ்ந்த அவரது வாழ்க்கையை அவருடன் நெருங் கிப் பழகியவர்கள் அறிவர்.

அவரது அந்தரங்கமான இம் மனப் பண்பினை அவரது பேனாவின் நுனைகூடச் சாட்சி பகரும். அவரது மேஜை மீது வைக்கப் பட்டுள்ள மைக்கூடு நிறைய மை இருக்கலாம். ஆயினும் அவரது பேனாவின் முள்ளின் நுனையில் கச்சிதமாக சிறிதளவே மை பதிந்திருப்பதை உற்றுப் பார்ப்போர் எவரும் வியந்து மகிழாமல் இருக்கமுடியாது. அப்பேனாவின் நுனை அளவோடு மைக்குள் நுழைந்து அத்தருணத்தில் எழுதுவதற்குத் தேவையான மை தோய்ந்து வெளிவரும் அழகு அற்புதமாக இருக்கும். சிறியதொரு காகிதத் துண்டும் அவரது காரியாலயத்தில் வீணாவதற்கில்லை. ஒரு சிறு குண்டூசிக் கும்கூட கணக்கு உண்டு. தபால் கார்டில் எழுத வேண்டியதை உள் நாட்டுத் தபால் கடிதத்தில் எழுதுவது ஆடம்பரச் செலவு. தபால் தலைகள் அதற்கென வகுத்துள்ள இடத்தில் கச்சிதமாக ஒட்டப்பட வேண்டும். உறைகளுக்கு இசைய கடிதங்கள் அளவாக மடிக்கப் பெறவேண்டும். காரியாலயத்துக்கு வரும் கடிதங்களும் உறைகளும் கத்தரிக் கோலிட்டு நேர்பட திறக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வுறைகள் மீண்டும் பயனுற வேண்டும். தட்டெழுத்து இயந்திரமும்கூட இனிய இசை எழுப்பும் அவரது காரியாலத்தில். அவரது அகராதியில் உயிரற்றவை ஏதுமில்லை. இறைவன் படைப்பிலுள்ள அனைத்தும் அழகுள்ளவை, அற்புதமானவை, மதிக்கத் தக்கவை. காந்தியடிகளின் வழிவந்த சத்திய சோதனையில் பயின்ற ஐயா அவர்களின் வாழ்க்கை கலையழகு நிரம்பியதாக அமைந்திருந்தது.

அவர் தம்முன் எவரையும் நிற்கவைத்துப் பேசியதைக் காணமுடியாது. காண வருவோர் எவராயினும் அவர் முன் அமர்ந்து உரையாட வேண்டும். வரிசைப்படி

அவரைக் காணக் காத்திருப்போருக்கும் வெளி முற்றத்தில் ஆசனங்கள் உண்டு. அவருடன் அமர்ந்து உணவு கொள்ளும் ஒவ்வொருவரும் சமபந்தியின் இலக்கணத்தை உள்ளார்ந்து அனுபவிப்பர். "அனை வருக்கும் முறையாகப் பரிமாறப்படுகிறதா என்பதை அவரது அன்புக் கண்கள் துருவி ஆராயும். சமுதாயம் கற்பிக்கும் ஏற்றத்தாழ்வுகள் ஏராளமாக உண்டு. ஆனால் ஐயாவின் பார்வையில் அனைவரும் சமமே, இத்தகைமை அவரது பிறவிக் கூறாக, சுதர்மமாக அமைந்திருந்த காரணத்தால் அவர் இயல்பாக காந்தியடிகளின் நிர் மாணத் திட்டங்களில் முக்கியமான அரிஜன சேவையை முன்வந்து ஏற்று அதனைத் திறம்பட நிறைவேற் றினார்.

செல்வந்தர் குடும்பத்தில் அவர் பிறந்தவராயினும் தமது வாழ்நாள் முழுதும் "வலிந்தேற்ற வறுமை" வாழ்க்கை வாழ்ந்தார். தம்மை தேச விடுதலைக்கும் மக்கள் சேவைக்கும் அர்ப்பணித்துக் கொண்டார். அவர் வாழ்ந்த பங்களாவும் ஆசிரமமாயிற்று. அவர் தொட்ட பணிகள் அனைத்தும் "கடையருக்கும் கடைத்தேற்றம்" என்னும் திசை நோக்கிற்று. அவர் பங்கு பெற்ற அரசியல் பணியும் ஆன்மீக பாவனை மிக்கதாயிற்று. நகர் மன்றத் தலைவராகவும் சட்ட மன்ற உறுப்பினராவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் நிர்மாணத்திட்ட கர்த் தாவாகவும் அவர் பல்வேறு துறைகளில் பொறுப்பேற்று ஒழுக்க சீலராகவும் நேர்மையாளராகவும் பற்றற்ற பாவனையில் கடமையாற்றிய கர்மயோகி அவர். கல்வி நிலையங்களையும் கூட்டுறவுச் சங்கங்களையும் திறம்பட நடத்திக் காட்டிய சிறந்த நிர்வாகி எனப் பலராலும் பாராட்டப் பெற்றவர்.

காந்தியடிகளிடம் சத்தியாகிரகம் பயின்றவர். பல்வேறு நிர்மாணத் திட்ட நிறுவனங்களின் கர்த்தா. பகவான் ராமகிருஷ்ணரிடம் ஆன்மநேய ஒருமைப் பாட்டினை ரசித்துப் பயன் பெற்றவர். சுவாமி ஸ்ரீ விவேகாநந்தரிடம் ஆதர்சம் பெற்றவர். அகந்தைக்கு வயப்படாத அஞ்சாமையும், சத்தியத்தில் உறுதியும் அன்புடன்கூடிய பணிவும் அவரது பிறவிப் பண்புகளாக அமைந்தன. தேசபக்தியும் தெய்வ பக்தியும் இணையப் பெற்றவர். உலகளாவிய கண்ணேக்குள்ளவர். வெறுப் பறியாதவர், புகழ் விரும்பாதவர், கர்ம வீரர்.

ஐயா அவர்களின் வாழ்க்கை இளைய தலைமுறையினர் பின்பற்றத்தக்க உதாரணங்கள் நிரம்பப் பெற்றது. பொதுப் பணியில் ஈடுபாடுள்ளவர்களுக்கு அவரது வாழ்க்கை ஆதர்சம் அளிக்கும் என்பது உறுதி. அரசியல் துறையில் உள்ளவர்கள் அவரை நினைவிற்கொள்ள கடமைப்பட்டிருக்கிருர்கள். காந்திய நிர்மாண ஊழியர்களுக்கும் தலைவர்களுக்கும் அவர் சிறந்த வழிகாட்டி. புலனுகர்ச்சி தவிர்த்து புலனடக்கம் பயிலும் ஆன்மீக வாழ்க்கை விழைவோர்க்கு அவர் ஒரு ஒளி விளக்கு. ''நம் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற அருள் வாக்கிற்கு ஐயா அவர்கள் ஒரு சீரிய உதாரணம். அதிலுள்ள ''கிடப்பதே'' என்ற சொல் பொருள் செறிந்ததாகும். பணி செய்து, அதனுல் கிடைக்கும் புகழும் பயனும் எதிர்பாராது ஒதுங்கி இருக்கும் பெரும் பாங்கினை அது சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய பாங்கிற்குச் சீரிய உதாரணமாக விளங்கி, நம் கண்முன்னே நம்மிடையே வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய ''மதுரை காந்தி'' அமரர் ஸ்ரீ நா.ம.ரா. சுப்பராமன் அவர்களைத் தரிசிக்கும் ஆலயத்தின் கோபுர வாசலாக இந்த அலை யடக்கம் பணிவுடன் அளிக்கப்படுகிறது. பக்தி பாவனை யுடன் ஆலயத்துக்குள் நுழைவோமாக. ◘

2. இளமைப் பருவம்

அன்னை மீனாட்சி அருள்பாலிக்கும் மதுரை நகர், வைகை ஆற்றின் இருமருங்கிலும் பரவி விரிந்து காணப் படுகிறது. தமிழ்மொழியும் தமிழர் கலாச்சாரமும் வளர்த்த சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரம் மதுரை. இங்கு பல்வேறு இனம், மதம், மொழி இடம் பெற் றிருந்த போதிலும் ஒருமை உணர்வுடன் மக்கள் உறவு வளர்த்தனர். அங்கு வாழும் மக்களில் பாரம்பரியமாக பட்டு நூல் துணி நெசவுத் தொழிலை ஆதாரமாகக் கொண்ட சௌராஷ்டிர சமுதாயத்தினர் கணிசமான வர். மதுரையின் மொத்த மக்கட் தொகையில் நான் கில் ஒரு பகுதியினர் இவர்கள். அமைதியான வாழ்க் கையில் ஆர்வமுள்ள இம்மக்கள் அண்டை அயலாருடன் உறவு வளர்த்து உறவு வளர்க்கும் இயல்பினர். இச் சமூகத்தில் பிறந்த சமயாச்சாரியர்களும் தொழில் வல்லுநர்களும் தேசத் தொண்டர்களும் தலைவர்களும் மதுரைக்குப் புகழ் தேடித் தந்துள்ளனர்.

இத்தகைய பெரியவர்களில் மல்லி ராயலு அய்யரும் ஒருவர். அவரது குடும்பம் மதுரையில் மிகுந்த செல் வாக்குப் பெற்றிருந்தது. மேற்கத்திய மற்றும் கிழக் கத்திய நாடுகளுடன் இக்குடும்பம் தொழில் மற்றும் வியாபாரத் தொடர்பு கொண்டு செல்வச் சிறப்புடன் வாழ்ந்து வந்தது. சௌராஷ்டிர சமூகத்தில் தோன்றும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் பாரம்பரிய உரிமை பெற்றிருந்த காரணத்தால் இக்குடும்பத்தை நாட்டாண்மை ராயலு அய்யர் குடும்பம் என்று சிறப்புப் பெயரிட்டு மக்கள் அழைத்து வந்தனர்.

இத்தகைய சிறப்புடைய ராயலு அய்யருக்கும் அவரது தர்மபத்தினி காவேரி அம்மையாருக்கும் 1905ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் நாள் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையே பிற்காலத்தில் ''மதுரை காந்தி'' என்று மக்களால் புகழ்ந்து பாராட்டப் பெற்ற சுப்பராமன் ஆவார். தேசவிடுதலைப் போராட்ட வேள்வியில் தீவிரமாகப் பங்குபெற்ற திரு சுப்பராமன் அவர்களின் பிறந்த தினம் பிற்காலத்தில் சுதந்திர தினத்துடன் இணைவது மிகப் பொருத்தமாகும்.

இளமைப் பருவத்தில் சுப்பராமன் அனைவரின் பார்வையைக் கவரும் அழகுடையவராக இருந்தார். சுப்பராமனின் அமைதியும் இனிமையும் அவரது குடும்பத்தார் எல்லோருக்கும் அவரைச் செல்லப்பிள்ளையாகப் பாராட்டக் காரணமாக இருந்தது. குறிப்பாக அவரது தாயார் கண நேரமேனும் அவரைப் பிரிந்திருக்க விரும்பார். ஆகவே அன்னையார் நாள்தோறும் மீனாட்சி அம்மன் கோவில் தரிசனத்துக்குப் போகும்போதெல்லாம் சுப்பராமனையும் தம்முடன் அழைத்துச் செல்லுவது வழக்கம். இதன் பயனாக சுப்பராமனுக்கு தெய்வ பக்தி குழந்தைப் பருவத்திலேயே வளர வாய்ப்பாயிற்று.

சுப்பராமனுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் மற்றும் ஆறுசகோதரிகள். இவர்களில் சுப்பராமனிடம் சில சிறப்பான குணங்கள் இயல்பாகவே படிந்திருந்தன. சின்னவயதிலேயே அவருக்கு ஆடம்பரமான பொழுது போக்குகளில் நாட்டமில்லாதிருந்தது. குழந்தைப் பருவத்தில் அவ்வாறு அமைவது அபூர்வமே. மூத்தவர்களிடம் அவர் பணிவுடன் நடந்துகொள்ளுவார். அவர்களோடு எதிர்த்து விவாதிக்கமாட்டார். அவர்களோடு

கருத்து வேறுபாடுகள் தோன்றினும் அவற்றைச் சகித்துக் கொள்ளும் குணம் அவருக்கு இயற்கையாக இருந்தது. ஆயினும் அவரது வழியில் உறுதியோடும் இருந்தார். சலுகை பெறுவதில் தமது சகோதர சகோதரிகளுடன் அவர் போட்டியிடுவதில்லை. அவற்றைப் பிறருக்கு விட்டுக்கொடுத்துவிடுவார். பிறருடன் விவாதிக்கக் கூசுவார். பிறரிடம் காணப்படும் நியாயத்தை எளிதில் ஒப்புக்கொண்டு, மாறுபாட்டைப் பாராட்ட மாட்டார். பிற்காலத்தில் அவர் தம்மைக் குறித்து சுயவிமரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைத்தபோது, ''என்னிடம் கூச்சம் அதிகம். ஏதேனும் தர்க்கம் எழுமானால் அதில் எதிர்த்து வாதிடுவதற்குப் போதிய விஷயங்கள் எனக்குத் தெரிந்திருந்தபோதிலும் நான் கூச்சத்தால் மௌனியாகி விடுவதுண்டு. எவரொருவர் நியாயத்தைக் கூறினாலும் நான் அதை ஒப்புக்கொண்டுவிடுவேன் என்று தமது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார்.

1911ஆம் ஆண்டு தமது 6வது வயதில் சுப்பராமன் பள்ளி வாழ்க்கையைத் தொடங்கினார். பள்ளிப் பருவத்திலும் அவர் அமைதியான மாணவர் என்ற பெயர் எடுத்தார். ஆயினும் அவர் விளையாட்டு மைதானத்தில் ஒரு சிறந்த கால்பந்தாட்ட வீரராகவும் இருந்தார். படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டினார். விடுமுறை நாட்களில் மாரியம்மன் தெப்பக்குளம் சென்று நீந்துவதிலும், அவ்வப்போது திருப்பரங்குன்றம் மலைமேல் ஏறிச் சுற்றிப் பார்ப்பதிலும் அவருக்கு ஆர்வமுண்டு. பள்ளி மாணவ நண்பர்களோடு அவர் கூடி விளையாடுவதைப்போல் அவர்களை விட்டுத் தனித்திருப்பதிலும் அவருக்கு ஆர்வமுண்டு. அவர் பள்ளியில் ஒருபோதும் தம்மை ஒரு செல்வந்தர் வீட்டுப் பையன் என்று காட்டிக் கொண்ட

தில்லை. இது போன்ற சமத்துவ பாவனை அவருக்கு இயல்பாக அமைந்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

இதுபோல் அவரிடமுள்ள சிக்கனமும் ஆடம்பர மோகமின்மையும் அவருக்குப் பிறவிக்கூறாகவே இருந்தன என்பது அவரது பள்ளிப் பருவ முதலே தெரிந்தது. குழந்தைகளுக்கே இயல்பான விளையாட்டுப் பொருள்கள் மற்றும் திண்பண்டங்கள் பேரிலுள்ள விருப்பம் அவருக்கு இருந்ததில்லை. தீபாவளி மற்றும் உள்ளூர்த் திருவிழாக் காலங்களில் அவருடைய தந்தையார் தமது மூன்று குமாரர்களுக்கும் கைநிறையப் பணம் கொடுப்பதுண்டு. இவருக்கு மூத்த சகோதரரும் இளையவரும் அப்பா கொடுத்த பணம் முழுவதையும் நொடிப் பொழுதில் செலவு செய்துவிட்டு மேலும் பணம் கேட்டு வருவதுண்டு. சுப்பராமனே தமக்குக் கிடைத்த பணத்தைக்கொண்டு தேவையானது கடைத்தெருவில் எதுவும் இல்லை என்று கூறி விழா முடிந்ததும் அப்பா அளித்த பணத்தை அப்படியே திரும்பக் கொடுத்துவிடுவது அவரது வழக்கமாயிற்று. அப்பா அதற்குக் காரணம் கேட்கும்போது, ''கடைத் தெருவில் வாங்குவதற்கு என்ன இருக்கிறது?'' என்று அவர் கூறுவார். இது கேட்டு அப்பாவும் மற்ற பெரியவர்களும் வியப்பதுண்டு.

பள்ளியிலும் சரி, வீட்டிலும்சரி அவர் தவறு செய்வதில்லை. அதுபோல் தமது சகோதர சகோதரிகளையும் பிழை செய்ய அனுமதிப்பதில்லை. வீட்டில் பிறர் ஏதேனும் தவறு செய்தால் அதை இனிமையாகக் கண்டிக்கும் துணிவு அவரது மாணவப் பருவத்திலேயே பளிச்சிட்டது. தவறிழைப்பவர்களைப் புத்திமதி கூறித் திருத்துவார். பிறருடன் விவாதம் செய்வதில் அவருக்கு நாட்டமில்லாதிருந்த போதிலும் தவறு கண்டு திருத்துவதில் அவர்

தவற மாட்டார். அவ்வாறு புத்திமதி கூறும்போது அவர் கடின வார்த்தைகளைப் பயன்படுத்தமாட்டார். அதிகம் பேசாது சுருக்கமாகக் கூறித் திருத்துவார். அவர் பயன்படுத்தும் சொற்கள் நயமானவையாக அமைந் திருக்கும். வயது வந்த ஒரு பெரிய மனிதர் கூறுவது போலவே அச்சொற்கள் இருக்கும். இதனால் சுப்ப ராமனின் பள்ளிப் பருவத்திலேயே அவரை அவரது குடும்பத்தினர் ''சுவாமி ஐயா'' என்று அன்புடன் அழைத்தனர். பிற்காலத்தில் அவரை அறிந்த நண்பர் கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அவரை மரியாதை உணர்வுடன் ''மதுரை ஐயா'' என்று அழைப்பதற் கேதுவான கரு அவரது பள்ளிப் பருவத்திலேயே அமைந் திருந்தது போலும்!

ஐயா அவர்களின் பள்ளிப் பருவத்திலேயே அவரது திருமணப் பேச்சு நடைபெற்றது. அக்காலத்தில் சௌராஷ்டிர சமுதாயத்தில் பால்ய விவாகம் கடைப் பிடிக்கப்பட்டுவந்தது. பள்ளிப் பருவத்தில் திருமணம் செய்து வைப்பது சகஜமாக இருந்தது. அதற்கு ஐயா அவர்களும் விதிவிலக்கல்ல. தமது 15வது வயதைக் கடக்கு முன்னரே அவருக்குத் திருமணமாயிற்று. 1920ஆம் ஆண்டு சுப்பராமனுக்கும், மதுரையில் பெரிய தொழி லதிபரான முத்துராமைய்யரின் புதல்வியான பர்வத வர்த்தினிக்கும் திருமணம் நடைபெற்றது. ஏறக்குறைய இந்நிகழ்ச்சி காந்தியடிகளுக்கு நேரிட்டதைப்போல் அமைந்தது. காந்திக்கு அவரது 13வது வயதில் திருமணம். ஐயா அவர்களுக்கு 15வது வயதில். காந்தியடிகளைப் போலவே பிற்காலத்தில் பால்ய விவாகத்தால் நேரிடும் தீமைகளை ஐயா அவர்களும் தமது சமுதாய மக்களுக்கு உணர்த்தி அப்பழக்கத்தைக் கைவிடுமாறு கேட்டுக்

கொண்டார். தமது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு இப்பால்ய விவாகம் எவ்வாறு தடையாக இருந்தது என்று அவர் மக்களுக்கு உணர்த்தத் தவறவில்லை. புலனடக்கம் பயிலத் தெரியாத சின்னஞ்சிறு இளம் வயதினரை பால்ய விவாகம் எத்தனை அளவு பாதிக்கிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார்.

ஆயினும் காந்திக்கு நேர்ந்த சோதனைகள் ஐயா அவர்களுக்கு அத்தனை அளவு ஏற்படவில்லை. புலனடக்கத்தைக் கடைப்பிடிக்க காந்தி, மிகப்பாடுபட்டார். "இரட்டை அவமானம்" என்ற தலைப்பில் காந்தியடிகள் தமது "சத்திய சோதனை" நூலில் கூறி வருந்தியுள்ளதைப் பார்க்கிறோம். ஐயாஅவர்கள் பால்ய மணத்தால் வருந்திய போதிலும், அவருக்கே இயல்பாக அமைந்திருந்த புலனடக்கத்தால் அவர் அத்தனை அளவு சோதனைகளுக்கு ஆளாகவில்லை எனலாம். தமது வாழ்வில் தமக்குப் பிரியமான நாட்டுப்பணியைத் தொடங்க பால்யமனம் தாமதிக்கச் செய்தது என்ற குறையை அவர் பிற்காலத்தில் அடிக்கடி கூறுவதுண்டு.

பள்ளி இறுதி வகுப்பை எட்டிப் பிடிக்குமுன்னரே அவருக்குத் திருமணம் நிறைவேறி விட்டதாயினும் கல்லூரிப் படிப்பிற்குப் பின்னர் மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் பதிந்திருந்தது. இதே போல் அவரது குடும்பத்தாருக்கும் பரவலாக இவ்வெண்ணம் இருந்து வந்திருக்கிறது. ஆகவே ஐயா அவர்கள் 1922இல் அவரது பள்ளி இறுதி வகுப்பை முடித்தபோது, குடும்பத்தின் பொறுப்பில் இருந்த அவரது மூத்த சகோதரர் வெங்கட்ட கிருஷ்ண அய்யர் ஒரு முடிவு எடுத்தார். கல்லூரிப் படிப்பைவிட இங்கிலாந்து சென்று தொழிற் படிப்பு படிப்பது நல்லது

என்பது அவரதுகருத்து. தொழிற்படிப்பு தமது தொழி லபிவிருத்திக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று அவர் கருதினர். தாம் படிக்க முடியாமற் போனதை தமது தம்பி நிறைவேற்ற வேண்டும் என்ற ஆசையும் அவருக்குண்டு. இக் கருத்தை குடும்பத்திலுள்ள அனை வரும் ஆமோதித்தனர். அவரது அன்னையார் மாத்திரம் அதற்கு இசைவளிக்கத் தயங்கினர். காரணம் அவருக்கு மகன் பேரிலுள்ள பாசம். அவரைவிட்டுப் பிரியஅவருக்கு மனம் இல்லை. ஆயினும் மகனின் முன்னேற்றத்துக்கும் குடும்பத்தின் நலனுக்கும் தமக்குள் பாசம் குறுக்கே நிற்கக்கூடாது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

இதேபோல் ஐயா அவர்கள் மனதிலும் ஒரு போராட் டம் நிகழ்ந்து கொண்டிருந்தது. அடுத்த சில நாட்களில் அவருடைய இலண்டன் பயணத்துக்கான சகல ஏற்பாடு களையும் அவரது தமையனர் ஆயத்தம் செய்துவிட்டார். இலண்டன் செல்வதற்கான அரசு அனுமதியும் பெற்ருகி விட்டது. கப்பல் பயணத்துக்கான ஏற்பாடு நடை பெற்றுக் கொண்டிருந்த சமயம் அக்டோபர் மாதம் குளிர் அதிகமானதால் பயணம் இரண்டு மாதங்கள் தள்ளி வைக்கப்பட்டது. இது கேட்டு உள்ளூர மகிழ்ச்சி யுற்றவர் அவரது அன்னையார் ஒருவரே. அதேசமயம் சுப்பராமனின் மனதில் ஒரு புயல் வீசிக்கொண்டிருந்தது. அது குறித்து அவர் தமது நாட்குறிப்பில் குறித்துள்ளதை இங்கு தருகிறேம்.

"நாட்கள் செல்லச் செல்ல என் மனம் பல்வேறு மேகங்களுக்குள் மறைந்திருக்கும் வானம்போல் வெளிச் சத்துக்காக ஏங்கிய வண்ணமிருந்தேன். என் மனம் குழப்பத்துக்குள்ளாகி இருந்தது. அந்நாட்களில் "சுய ராஜ்யம்" என்ற இதழைப் படித்து வந்ததன் காரண

மாக சுதந்திரப் போராட்டத்தின் விபரங்களையும் தேசத்தின் நிலையையும் உன்னிப்பாகத் தெரிந்து வந்தேன். அக்காலத்தில் தேசபக்தர்கள் பலர் ஆற்றிய வீரச் சுவை மிக்க சொற்பொழிவுகளில் என் மனம் நாட்டம் பெற்றிருந்தது. சிறை செல்லும் தேச பக்தர்கள் ஆற்றிவரும் தியாகத்தில் என் உள்ளம் ஆழ்ந்திருந்தது. அவர்களைப் புகழ்ந்து வெளிப்படையாக பேசத் துணிந்தேன். கதரின் தத்துவம் அப்போது எனக்குத் தெரியாது. ஆயினும் கதர் அணிவது தேசத்துக்குச் செய்யும் தொண்டாகக் கருதினேன். இந்நிலையில் நான் மேற்படிப்புக்கு இங்கிலாந்து செல்வது பொருந்துமா என்ற கேள்விக்குறி என்முன் நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் தத்தளித்துக் கொண்டிருந்தேன்'' என்று அவரது நாட்குறிப்பில் எழுதுகிறார்.

இம்மனப் போரட்டத்தை அவர் தமது குடும்பத்தில் யாரிடம் வெளியிட்டுக் கூற முடியும்? அண்ணனே அவரது பயணத்துக்கான சகல ஏற்பாடுகளையும் ஆர்வத்துடன் செய்து வருகிறார். மற்றவர்களும் உறவினர்களும் இதற்கு பூரண சம்மதம் அளித்து விட்டனர். தமது அன்னையார் மாத்திரம் தம் பேரிலுள்ள பாசம் காரணமாக இதற்குச் சம்மதிக்கத்தயங்குகிறார் என்பதை சுப்பராமன் அறிவார். இங்கிலாந்து செல்வதைவிட மகன் உள்நாட்டிலேயே மேற்படிப்பைத் தொடரலாமே என்று அன்னையார் அடிக்கடி வெளிப்படையாகக் கூறிவந்தார். இது குறித்து சுப்பராமனும் அன்னையாரும் அவ்வப்போது கலந்துரையாடி வந்தனர். ''தேசப் பணியே இனி நான் தொடர வேண்டிய படிப்பு'' என்று அவர் தமது அன்னையாரிடம் கூறினர். ஆயினும் இதை தமது தமையனாரிடம் எப்படித் துணிந்து கூறமுடியும்?

இங்கிலாந்து செல்வதற்கான நாட்கள் எத்தனை வேகத்தில் சென்று கொண்டிருந்ததோ, அதையும்விட பன்மடங்கு அதிக வேகமாக அவரது உள்ளத்தில் அதைத் தவிர்ப்பதற்கான உறுதியும் உரம் பெற்றுக்கொண்டிருந்தது. காந்தியடிகளின் தாக்கம் அவரைக் கவர்ந்து கொண்டிருந்தது. அவர் அக்காலத்தில் வெளியிட்டுக் கொண்டிருந்த ''யங் இந்தியா'' இதழை வெகு ஆர்வத்துடன் படிக்கத் தலைப்பட்டார். காந்தியடிகளின் ஒவ்வொரு வார்த்தையும் அவருக்கு வேத வாக்காக ஒலித்தது. அதுகுறித்து அவர் தமது நாட் குறிப்பில், ''தேச சேவையே எனக்கு முக்தி அளிக்கவல்லது என்று தோன்றிற்று. சத்தியம் அகிம்சையும் மானிடப் பிறவி எடுத்துள்ள ஒவ்வொருவருக்கும்ஆதாரம் என்றும் அதுவே பிறவிப் பயனாகும் என்றும் உணர்ந்தேன். தேச சேவை செய்ய எனக்கு எப்பொழுது வாய்ப்புக் கிடைக்கும்? அதில் நான் ஈடுபடும் நாள் எந்நாளோ? என் கருத்துக்களை நான் பகிரங்கமாக அறிவிக்கும் தருணம் எப்போது? இது போன்ற கேள்விகள் என்னை வாட்டிக் கொண்டிருந்தன'' என்று எழுதுகிறார்.

மேலும் இதுபற்றி கூறும்போது, ''இங்கிலாந்துக்குப் படிக்கப் போனால் தேச சேவைக்கு எவ்வாறு வாய்ப்புக் கிடைக்கும்? என் வாழ்க்கை பொருளீட்டுவதிலேயே கழிந்து விடுமல்லவா? தேச சேவை செய்வது என் பிறவிக் கடன் அல்லவா? என் கடமையை வேறு ஒருவர் செய்வார் என்று நினைப்பது தவறு என்று எனக்குத் தோன்றிற்று. அது ஆண்மைக் குறைவானது என்று நான் உணர்ந்தேன்... காந்தியடிகளும் காங்கிரசும் என்ன கட்டளை இடுகிறதோ அதை நிறைவேற்றுவதே என் கடமை. அதற்கு மாறாகச் செயல்படுவது தேசத் துரோகம் என்று எனது அந்த

ராத்மா கூறிற்று. அன்று முதல் காங்கிரசின் நடவடிக்கை களை உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கினேன்.'' என்று தமது மனதைத் திறந்து எழுதுகிருர்.

முடிவாகத் தமது கருத்தைத் தமது அண்ணனிடமும் மற்றும் குடும்பத்தாரிடமும் வெளிப்படுத்த வேண்டிய தருணம் சமீபித்துவிட்டது. ஒரு நாள் ஐயா அவர்களின் இங்கிலாந்து பயணம் குறித்து நாள் குறிப்பிட்டு உறுதி செய்து அவரது குடும்பத்தார் பயணத்துக்கான தேவை களைக் குறித்து கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது சுப்பராமனும் அங்கிருந்தார். அண்ணன் வெகு உற்சாகமாக விபரங்களை அனைவரிடமும் கூறிக் கொண்டிருந்தபோது ஐயா அவர்கள் குமுறல் நிறைந்த மனதுடன் இன்னதுகூறுவதென்றுதோன்ருதுபரிதவித்துக் கொண்டிருந்தார். இதனைக் கண்ணுற்ற அவரது அண்ணன் அவரை நோக்கி, ''தம்பி, ஏன் உன் முகம் வாடித் தோன்றுகிறது? வீட்டை பிரிந்து போகப் போகி ருேமே என்ற கவலையா? எதற்கும் மனதில் துணிவு வேண்டும். கோழையாக இராதே. இங்கிலாந்து போவது அத்தனை தூரமா? தைரியமாக இரு'' என்று கூறிய பின்னரும் அவர் எதுவும் பதில் கூருது இருந்த தைக் கண்டு அண்ணன் கோபமுற்றவராய், ''நீ கோழை. தைரியமில்லாதவன். ஏன் பேசாதிருக்கிருய்?'' என்று கேட்டது ஐயா அவர்களுக்கு அசரீரி போல் ஒலித்தது.

''அண்ணு, நான் இங்கிலாந்து செல்லப் போவதில்லை. இப்போது நமது தேசம் விடுதலைக்காகக் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டிருக்கும்போது எனக்கு மேற்படிப்பு அவசியமில்லை. அவ்வாறு செல்வேனுயின் நான் தேசத் துரோகியாவேன். இங்கிலாந்து செல் வதற்குப் பதில் நான் தேச விடுதலைப் போராட்டத்துக்

குப் போகப் போகிறேன். இதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும்'' என்று கூறிய வண்ணம் கதறி அழுதுவிட்டார். அவரது கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகக் கொட்டிற்று. இது நாள் வரை அண்ணன் வார்த்தைக்கு மறுத்துப் பேசாத சுப்பராமன் அன்று அவ்வாறு கூறியதை நினைத்து அவரது மனம் புலம்பிற்று. மற்றொரு புறம் தேசம் அவரை அழைத்துக் கொண்டிருந்ததை அவரால் புறக்கணிக்க முடியாத மன நிலை. இவற்றுக்கிடையே அகப்பட்டுக்கொண்டு தவித்த அவருக்கு அன்று உள்ளம் திறந்து தமது உணர்ச்சிகளைக் கொட்டிவிடத் துணிவு வந்தது.

இது கேட்ட அண்ணனும் மற்றவர்களும் இன்னது செய்வதென்று தோன்றாது அதிர்ச்சிக்குள்ளாகி மௌனி யாயினர். சுப்பராமனின் உறுதியை அண்ணன் புரிந்து கொண்டார். தம்முன் தலை நிமிர்ந்து பேசாத தம்பி இத்தனை உறுதியுடன் தன் மனதிலுள்ள விருப்பத்தைக் கூறியபின் அதற்குத் தடை விதிப்பது விபரீதத்தில் முடியும் என்பதை அவர் சட்டெனப் புரிந்து கொண் டார். அண்ணன் என்ன பதில் கூறுவாரோ என்று அனைவரும் எதிர்பார்த்திருக்க, ''தேசப்பணி செய்வதே உனது இறுதியான முடிவு என்றால் அதற்கு நான் குறுக்கிட மாட்டேன். அதன் மூலமாக நீ கீர்த்தி பெறுவாய்'' என்று அதிர்ச்சியால் தாக்குண்ட மனதுடன் ஆசி கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றார். அக்கணமே சுப்பராமனின் இங்கிலாந்துப் பயண ஏற்பாடுகள் கை விடப்பட்டன. அன்று முதல் சுப்பராமன் தமது வாழ் நாள் முழுதும் தேசப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித் துக் கொள்ளத் தீர்மானித்தார். அதனை அவர் எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை மேலே பார்ப்போம். □

மதுரை காந்தியும் தேசத் தந்தையும்

3. தேசப் பணியில் பயிற்சி

தேசத் தொண்டுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டதால் மேற்படிப்புக்கு இங்கிலாந்து செல்லும் வாய்ப்பினைக் கைவிட்ட சுப்புராமனுக்கு அப்போது 20 வயதுகூடப் பூர்த்தியாகவில்லை. தாம் மேற்கொள்ளவிருக்கும் பொதுப்பணிக்கு தம்மைத் தயார் செய்து கொள்ளுவதற்கு ஏற்ற கல்வி பெற வேண்டும் என்று அவர் ஆர்வமுற்றார். தம்மை இதற்கு அர்ப்பணித்துக் கொள்ளும் ஆன்ம பலத்தை அளிக்க வல்ல ஆசிரமக் கல்வி பெறுவது நல்லது என்று அவர் தீர்மானித்தார். இங்கிலாந்தில் தொழிற் கல்வி பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அவரது அண்ணனும் குடும்பத்திலுள்ள அனைவரும், உறவினர்களும் ஏராளமாக இருந்தனர். ஆனால் ஆசிரமக் கல்வி பெறுவதை ஊக்குவிக்கவோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவோ அங்கு யார் இருப்பார்? ஏற்கனவே அவரது முடிவு கேட்டு அதிர்ந்து போயிருக்கும் அவர்களிடம் இதனைக் கூற அவர் துணியவில்லை. அதற்கான முயற்சிகளை அவர் தாமே செய்ய வேண்டியிருந்தது.

ஆசிரமக் கல்வி மூலம் தியானப் பயிற்சி கிடைக்கும். புனிதமான விரதங்களை அனுஷ்டித்து அதன் மூலம் மனதில் உறுதி ஏற்படும். புலனடக்கம் பயிலும் வாய்ப்பும் சூழ்நிலையும் கிடைக்கும். ஆன்மீகக் கல்வியை ஆசிரமங்கள் மூலம்தான் பெறமுடியும் என்ற ஏக்கத்துடன் அப்போது பிரபலமாக விளங்கிய ஆசிரமங்களோடு கடிதத் தொடர்பு கொள்ளத் தொடங்கினார். காசி இந்துக் கல்லூரி, ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் நடத்தி வந்த சாந்திநிகேதன் ஆசிரமம், காந்தியடிகள் உருவாக்கிய குஜராத் வித்தியா பீடம் என்ற தேசிய பல்கலைக்

கழகம், காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமம், அரித்துவாரத்திலுள்ள ஆசிரமங்கள் ஆகியவற்றுடன் சுப்பராமன் கடிதத் தொடர்பு கொள்ளலானார். அவற்றிடமிருந்து அவருக்கு உற்சாகமான பதில் கிடைக்கவில்லை. மீண்டும் மீண்டும் நினைவூட்டி எழுதிய பின்னர் சிலவற்றிடமிருந்து பதில் கிடைத்தது. பால்ய விவாகம் செய்துகொண்டு இல்லறத்தில் ஈடுபட்டிருக்கிற ஒரு இளைஞருக்கு ஆசிரமங்களில் இடமளிக்க அவை தயங்கின. பிரமச்சாரிகள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்று சில ஆசிரமங்களிடமிருந்து பதில் வந்தது. இவை எல்லாம் சுப்பராமனுக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளித்தன. தமது வாழ்க்கையில் திருமணம் குறுக்கிட்டதைக் குறித்து அவர் மிகவும் வருந்தினார். பால்ய விவாகத்தால் தமக்கு ஏற்பட்டுள்ளவிளைவுகளைஎண்ணிப்பார்க்கலானார், இதனைக் குறித்து அவர் யாரிடம் சொல்லிப் புலம்புவார்? தமது மனைவியாரிடம் அவர் கூற முடியாது. ஏனெனில் அவர் அதற்கு நேரடியான காரணமாகார். பெற்றோர்களும் மூத்தவர்களும் அல்லவா காரணம்? அண்ணனிடம் அப்போதைய நிலையில் அவரை அணுகுவதற்கு இல்லை. அனைத்தையும் அவர் தமது தாயிடம் புலம்பி தமது உணர்வுகளைத் தணித்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. தாய் தான் என்ன செய்வார்? குழந்தைகளின் நலனை உத்தேசித்தே அவ்வாறு நடைபெற்றது என்று அக்காலத் தாய்மார்கள் நம்பினர். சுப்பராமனின் ஆன்மீக நாட்டத்துக்கும் தேசத் தொண்டிலுள்ள ஆர்வத்துக்கும் இவ்விவாகம் தடையாயிருக்கும் என்று அவர்களால் எவ்வாறு கணிக்க முடியும்? மேலும் தங்கள் பாசத்துக்கும் பரிவுக்கும் பாத்திரமான மகனை எந்தப் பெற்றோர் தாம் ஆசிரமத்துக்கு அனுப்பி வைக்கத் துணிவார். ஒருவேளை இது போன்ற ஆன்ம நாட்டத்தைத் தணிப்பதற்

காக இளைஞர்களை இல்லறத்தில் புகுத்தி அதனைத் தடுத்து நிறுத்துவதில்தான் அவர்களின் நாட்டம் இருக்கும். இந்நிலையில் ஐயா அவர்கள் இது குறித்து அவர்களிடம் குறைபட்டுக் கொள்ளுவதால் பயனில்லை என்பதையும் அவர் அறிந்தே இருந்தார். மேலும் நடந்துவிட்ட இந்நிகழ்ச்சியை இனி யார்தான் மாற்ற முடியும்?

இவ்வாறு கூறுவதால் ஐயா அவர்களுக்கு தமது மனைவி மீது அன்பு இல்லை என்றாகாது. இளந் தம்பதிகள் இருவரும் ஒருவரையொருவர் நேசித்தனர், அன்பு பாராட்டினர். புலனடக்கம் மற்றும் பிரமச்சரியம் பற்றிய பிரச்சினையைத் தவிர வேறு பிரச்சினை ஏதுமில்லை. இந்த இளம் வயதில் அவர் தம்மைத் தேசத் தொண்டுக்கு அர்ப்பணித்துக் கொண்டது கூட அவருடைய மனைவியாருக்கு ஆட்சேபனை இருந்திருக்க முடியாது. ஆயினும் குடும்பம் தழைக்க குழந்தைகள் வேண்டும் என்ற வேட்கை இளம் வயதுள்ள ஒரு மனைவிக்கு இருந்தது முற்றிலும் நியாயமே. ஆனால் ஐயா அவர்களின் நிலையோ இதற்கு மாறுபட்டிருந்தது. பிரம்மச்சரியத்தைக் கடைப் பிடிப்பதன் மூலமே தாம் நாட்டுக்கு உண்மையான சேவை செய்ய முடியும் என்று அவர் கருத்துக் கொண் டிருந்தார்.

இவ்வாறு அவரது இல்லறபிரமச்சரியம்நடைபெற்றுக் கொண்டிருக்க, ஆசிரமக் கல்வி பெறும் முயற்சியும் கூடவே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் அவர் தடைகள் பலவற்றை எதிர் நோக்க வேண்டியவராக இருந்த போதிலும் தேசத் தொண்டினைத் துவங்குவதற் குள்ள முயற்சிகளில் அவர் சிறிதும் தாமதிக்கவில்லை. ஆசிரமக் கல்வி பற்றிய முயற்சியும்கூட தேசத்தொண்டு

கருதியே என்பதால் இங்கு தேசத் தொண்டே அவர் உள்ளத்தில் மிகுந்திருந்தது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. மேலும் காலம் தாழ்த்தாது 1923இல் அவர் மதுரை மஹால் காங்கிரஸ் காரியாலயம் சென்று தம்மை அக்குழுவில் ஓர் அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டார். தீவிர அங்கத்தினர் என்றால் காங்கிரஸ் மகாசபை மேற்கொள்ளும் சுதந்திரப் போராட்டத் திட்டங்களில் நேரிடையாகப் பங்கு கொள்ளச் சித்தமாக இருக்க வேண்டும் என்பதாகிறது. ஏனெனில் போராட்டங்களில் நேரடியாகப் பங்கு பெறாமல் வெளியிலிருந்து போராட்டத்துக்கு உதவி செய்வோர் என்ற தகுதி பெற்ற சாதாரண அங்கத்தினர் பதிவும் உண்டு. அக்காலத்தில் காங்கிரஸ் அனுதாபியாகப் பதிவு செய்து கொள்ளுபவர்கள் கூட ஆபத்துக்களையும் அரசின் கோபத்தையும் எதிர் நோக்க வேண்டியிருக்கும். இந்நிலையில் ஐயா அவர்கள் தம்மைத் தீவிர அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்டார். இதன் மூலம் அவர் காங்கிரஸ் மகாசபையின் போராட்டத் திட்டங்களிலும் காந்தியடிகள் வகுத்துத் தந்துள்ள நிர்மாணத் திட்டங்களிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார் என்பதாகிறது.

அன்று முதல் அவர் மதுரை நகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலுள்ள கிராமப் புறங்களிலும் காங்கிரஸ் கட்சிப் பிரசாரம் செய்வதில் ஈடுபட்டார். காந்தியடிகளின் கொள்கைகளை விளக்குவதில் அவர் அதிக ஆர்வம் காட்டினார். அனைத்திந்திய அளவில் ஊழியர்களோடும் தலைவர்களோடும் நெருங்கிய தொடர்பு கொள்ளுவதற்கு இந்தி மொழி தெரிந்திருப்பது அவசியம் என்று உணர்ந்தார். அதனைக் கற்றுக் கொள்வதில் ஊக்கம் காட்டினார்.

இவரது தீவிர தேசப் பற்றையும் ஆர்வத்தையும் கண்ட மதுரை நகர் காங்கிரஸ் குழு 1923ம் ஆண்டில் காக்கிநாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்கு மதுரை நகர்ப் பிரதிநிதியாக அவரை அனுப்பி வைத்தது. அவர் காங்கிரஸ் அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்ட சில மாத காலத்துக்குள் அவருக்கு இவ்வாய்ப்பு கிடைத்தது.

காங்கிரஸ் தீவிர அங்கத்தினராகப் பதிவு செய்து கொண்ட சுப்பராமன் கதர் அணிவதும் தமது கடமை என்று உணர்ந்தார். மேலும் காந்தியடிகளின் கதர்த் திட்டம் பற்றி பிறருக்குப் பிரசாரம் செய்வதற்கு முன் தாம் கதர் அணிய வேண்டும் என்று தீர்மானித்தார். காகிநாடா காங்கிரஸ் மாநாட்டிற்குச் செல்லு முன்னர் கதர் அணியத் திட்டமிட்டார். ஒரு நாள் அவர் தமது நண்பர்களுடன் ராமேஸ்வரம் சென்று அங்குக் கடலில் நீராடி சுவாமி தரிசனம் செய்து அங்கேயே கதராடை அணிந்தார். அன்று முதல் ஆயுள் பரியந்தம் கதர் ஒன்றே அவரது ஆடையாயிற்று. ராமேஸ்வரத்திலிருந்து வீடு திரும்பிய ஐயா அவர்கள் கதராடையில் காட்சியளித்தைக்கண்டு குடும்பத்திலுள்ள அனைவரும் அதிர்ச்சியுற்றனர். கதராடையை விடுத்து வழக்கம்போல் பட்டாடை உடுத்துமாறு கேட்டுக் கொண்டனர். அவர் அணிந்திருந்த முரட்டுத் துணியைத் தொட்டுப் பார்த்த அவரது அன்னையார் அதற்காக மிகவும் வருந்தினர். அத்தருணத்தில் தீபாவளிக்காக அவரது மாமனர் வீட்டிலிருந்து வந்திருந்த பட்டாடைகளையாவது அணிந்து கொள்ளுமாறு அனைவரும் அவரை வற்புறுத்தினர். உறுதியுடன் ஐயா அவர்களது வேண்டுகோளை பணிவுடன் நிராகரித்தார். இப்பிடிவாதம் அவரது சகோதரர்கள்

மற்றும் உறவினர்களின் கோபத்தை மூட்டிற்று. அனை வரும் அவரைக் கடிந்து கொண்டனர். தமது குடும் பத்தின் தகுதிக்குச் சிறிதும் பொருந்தாது என்று கூறினர். மேலும் அக்காலத்தில் கதர் அணிவது அன்றைய அந்நிய அரசின் கோபத்துக்கு ஆளாக வேண்டிவரும் என்ற நிலை. இவற்றையெல்லாம் மனத்திற்கொண்டு ஐயா அவர்கள் கதர் அணிவதைத் தடுத்துவிட அவர்கள் செய்த முயற்சிகளைப் பொறுமையாலும் மௌனத்தாலும் சமாளித்து வெற்றி பெற்றார்.

ஐயா அவர்களின் நடவடிக்கைகளைக் கண்டு அதிகமாக மனம் கலங்கியவர் அவரது அண்ணனவர். காங்கிரஸ் கட்சிப் பணியிலிருந்து அவரை மீட்க வழி காண அவர் முயன்று கொண்டிருந்தார். தாம் நடத்தி வந்த பட்டு நூல் வியாபாரத்தைக் கவனிக்கத் தம்பியின் உதவி தேவை என்பதை அவரிடம் கூறி ஒரு நாள் தமக்குப் பதில் ஐயா அவர்களைக் கடைக்கு அனுப்பிவைத்தார். ஆசிரமம்ஒன்றில் சேர்ந்து ஆன்மீகக் கல்வி பெறுவதிலும், தேசத் தொண்டு புரிவதிலும் நாட்டம் கொண்டிருந்த ஐயா அவர்களுக்கு வியாபாரம் எவ்வாறு பொருந்தும்? அண்ணனின் கண்டிப்பான உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து ஒரு நாள் கடைக்குச் சென்றார். அங்கு உட்கார்ந்து வியாபாரம் நடைபெறும் பரிவர்த்தனைகளை உன்னிப் பாகப் பார்த்துக் கொண்டிருந்தார். லாபம் ஒன்றையே கருத்தாகக் கொண்டு வழி முறைகளைப் பொருட் படுத்தாது நடைபெறும் ஒரு தொழில் ஐயா அவர்களின் இயல்புக்குச் சிறிதும் பொருந்தாது. என்பதை அவரது அண்ணன் புரிந்து கொள்ள முடியவில்லை. தம்பியின் பேரிலுள்ள பாசம் அதற்குக் காரணமாயிருந்தது. ஐயா அவர்களினல் கடையில் சிறிது நேரம்கூட உட்கார்ந்

திருக்க முடியவில்லை. தண்ணீரைவிட்டுத் தரையில் விழுந்த மீனைப்போல் அவரது நிலை இருந்தது.

அப்போதைய தமது மன நிலை குறித்து தமது நாட் குறிப்பில், "தேசப் பணிக்காக இங்கிலாந்தில் தொடர வேண்டிய மேற்படிப்பைக் கைவிட்டேன். இந்நிலையில் நான் வியாபாரத்தில் புகுவது எவ்வாறு சாத்தியம்? ஏராளமாகப் பொருளீட்டுவதன் மூலம்தான் தாமும் தமது குடும்பத்தாரும் சுகமாக வாழ முடியும் என்று பலர் நினைக்கிறார்கள். இதன் காரணமாக தர்மத் துக்குப் பொருந்தாத காரியங்களை எல்லாம் மேற்கொள் ளுகின்றனர். எந்த வழியிலேனும் பொருள் திரட்டுவதே அவர்களின் குறியாக இருக்கிறது. உயிர் வாழ உணவும் உடையும் வேண்டும். அதற்காக ஒவ்வொருவரும் ஒரு தொழிலில் ஈடுபட வேண்டும். அத்தொழில் தமக்கும் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயத்துக்கும் பயனளிப்பதாய் இருக்க வேண்டும். என்னைப் பொருத்தவரை வியாபாரம் செய்வது நெருப்பில் நிற்பதைப்போல் சுடுகிறது. தேசப் பணியில் ஆர்வமுள்ள எனக்கு பொருளீட்டுவதில் சிறிதும் நாட்டம் இல்லை. வழி முறை தவறி பொருளீட்டி அதனைக் கொண்டு தேசப் பணி புரியலாமே என்று கூறுவது பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வது போலா கிறது. எனக்குச் செல்வம் திரட்டுவதில் அக்கறை இல்லை. வியாபாரம் செய்வது எனக்குப் பொருந்தாது என்பதை நான் உறுதியாகக் கண்டு கொண்டேன்" என்று குறிப் பிடுகிறார். அன்று முதல் அவர் கடைக்குச் செல்ல மறுத்து விட்டார்.

வியாபாரம் செய்வதிலும் பொருளீட்டுவதிலும் ஐயா அவர்களுக்கு விருப்பமில்லை என்பதையும், அதற்கு மேல் அவரைத் தம் வழிக்குத் திருப்புவது சாத்தியமில்லை

என்பதையும் தெளிவாகத் தெரிந்து கொண்ட அவரது குடும்பத்தினர் அவரது வழியில் செயல் புரிய விட்டுவிட்டனர். அது முதல் ஐயா அவர்கள் தமது விருப்பப்படி பொதுப்பணியில் தீவிரமாக ஈடுபடலானுர். மிகுந்த உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் காங்கிரசுக்குத் தொண்டர்கள் திரட்டுவதில் முனைந்தார். தேசத் தலைவர்கள் விடுக்கும் வேண்டுகோள்களையும் உத்தரவுகளையும் சிரமேற்கொண்டு செயல்படலானுர். விடுதலைப் போராட்டத்தில் தலைவர்களும் தொண்டர்களும் அனுபவிக்கிற துன்பங்களைக் கண்டு மனம் வெதும்பினுர்.

1925இல் தேச பந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்கள் மரணமுற்ற செய்தி கேட்டு ஐயா அவர்கள் துடிதுடித்துப் போனுர். ''சுதந்திரதேவியே! உனது பசிக்கு இதோ ஒரு அருமைத் தலைவரின் உயிரைக் காணிக்கையாக்கியிருக்கிறோம். இன்னும் எத்தனை பேருடைய உயிர்த் தியாகத்தைப் பலியாக ஏற்கக் காத்திருக்கிருயோ, தெரியாது. இவ் வேள்வியில் எனது பங்கு எப்போதோ? அதற்காக நான் காத்திருக்கிறேன்''. என்று உணர்ச்சி பொங்க நாட் குறிப்பில் எழுதினுர். இத்தகைய ஆவேச உணர்வு அவரை அறியாமலே அவருள் மறைந்திருந்தது.

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து அவர் வட இந்தியப் பகுதிகளுக்குச் சென்று தேசத் தலைவர்களையும் ஆசிரமங்களையும் நேரில் தரிசித்து வரவேண்டும் என்று விரும்பினுர். எற்கனவே அவர் தமது பள்ளிப் படிப்பு முடிந்ததும் இங்கிலாந்துக்குச் பதில் ஆசிரமக் கல்வி பெறுவதற்கு முயன்று வாய்ப்புக் கிடைக்காத தமது ஏக்கத்தை அத்தகைய ஆசிரமங்களைப் பார்த்தேனும் திருப்தியுற இவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டார் 1925ம்

ஆண்டில் இப்பயணத்தைத் தொடங்கினர். சபர்மதி ஆசிரமம், குஜராத் வித்யா பீடம் மற்றும் காசி பல் கலைக்கழகம் போன்ற இடங்களையும் அங்குள்ள தேசத் தலைவர்களையும் பார்த்த பின்னர் வங்கத்தில் கவி தாகூர் நடத்தி வந்த சாந்திநிகேதன் வந்து சேர்ந்தார்.

சாந்திநிகேதன் ஒரு சர்வ தேச நிறுவனமாகச் செயல் பட்டு வந்தது. உலகத்தின் பல்வேறு தேசங்களிலுமிருந்து வந்திருந்த மாணவர்கள் பலர் அங்கு கல்வி பயின்று வந்தனர். அவ்வாசிரமத்தின் சூழ்நிலை ஐயா அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் பாடத்திட்டங்களும் போதனை முறைகளும் அவரது மனதைக் கவர்ந்தன. அங்கு சிலகாலம் தங்கயிருக்க அனுமதி கோரினர். அதற்கு இசைவு அளிக்கப் பட்டது. இதற்கிடையில் உத் தரபிரதேசத்திலுள்ள கான்பூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு ஆறுமாத காலம் சாந்திநிகேதனில் ஐயா அவர்கள் தங்கினர்கள். அங்குள்ள ஒழுங்கு முறைகளும் தியானம் மற்றும்செயல்திட்டங்களும்அவருக்குமகிழ்ச்சி அளித்தன. இந்நிலையில் அவர் மதுரை திரும்புவதைக் குறித்து நினையாமல் அதன் தினசரி வாழ்க்கை பயிலுவதில் ஆழ்ந் திருந்தார்.

இத்தருணத்தில் நாடெங்கும் சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்குமாறு காங்கிரஸ் வேண்டுகோள் விடுத்தது. மதுரையில் இப்பகிஷ்காரம் செய்வதற்கான ஏற்பாடுகள் கள் நடைபெற்று வந்தன. அப்போது ஐயா அவர்கள் மதுரையில் இருக்க வேண்டும் என்ற செய்தி கிடைக் கவே, அந்த அழைப்பினை ஏற்று அவர் மதுரை திரும் பினர். மதுரையில் ஜார்ஜ் ஜோஸப் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு மாபெரும் கருப்புக் கொடி

காட்டும் பேரணி நடைபெற்றது. ''சைமன் கமிஷனே திரும்பிப் போ'' என்று கோஷம் மதுரை நகரெங்கும் ஒலித்தது. அதன் விளைவாக ஜார்ஜ் ஜோஸப் கைது செய்யப் பெற்றார். அதனால் மதுரையில் காங்கிரஸ் தொண்டர்களை வழி நடத்திச் செல்லும் பொறுப்பு ஐயா அவர்கள் போன்ற இளைய தலைவர்கள் வசம் விடப் பட்டது. இவ்வாறு மதுரைக் காங்கிரஸ் பணிகள் பல வற்றை ஐயா அவர்கள் ஏற்றுச் செயல்படலானார். □

4. சுதந்திரப் போரில் பங்கு

தேச விடுதலை இயக்கத்தில் காந்தியடிகள் தலைமையின் கீழ் பங்கு பெற்றிருந்தவர்களில் இருவகை இயல்பினர் இருந்து வந்தனர். அவர்களில் எந்த வகையினர் அதிகத் தீவிர பாவனை உடையவர்கள் என்று கூறுவதை விட, அவரவர் இயற்கையான இயல்பின்படி ஈடுபட்டு வந்தனர் என்று கூறுதல் பொருந்தும். அவர்களில் ஒரு சாரார் காந்தியடிகளின் அகிம்சைக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை இல்லாதவர்கள். ஆயினும் அவர்களுக்கு காந்தியடிகளிடம் பக்தியும் நம்பிக்கையும் உண்டு. வாய்ப்புக் கிடைக்குமானல் பலாத்கார வழி முறை மூலம் போராடவும் அவர்கள் தயார். தங்களை அவர்கள் தீவிர வாதிகளாகப் பாவித்துக் கொண்டனர். காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களை அவர்கள் ஏற்றுச்செயல் படுத்திய போதிலும் அவை அரசியல் சுதந்திரத்துக்கு உரிய தந்திரங்கள் என்ற அளவில் மாத்திரம் ஏற்று கருதி வந்தனர். கதர் சுதந்திர இயக்கத்தின் அடையாளம் என்பதோடு அவர்களின் ஈடுபாடு இருந்தது.

மற்றொரு வகையினர் சுதந்திர இயக்கத்தின் அரசியல் கிளர்ச்சிகளில் அவர்களுக்கு நாட்டம் இல்லை. நிர்மாணத் திட்டங்களில் மாத்திரமே அவர்களுக்கு ஈடுபாடு. காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாக்கிரகங்களில் அவர்களும் பங்கு பெற்றனர். ஆயினும் தமக்குக் கிடைத்த நேரத்தில் அடக்கமாக நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டனர். கதர் அகிம்சையின் சின்னம் என்றும் அதன் படி வாழ வேண்டும் என்றும் அவர்கள் விரும்பினர். இவர்களை முந்திய வகையினர் மிதவாதிகள் என்று குறிப்பிட்டு அழைத்தனர். ஏனெனில் அவர்கள் சுதந்திரம் கிடைப்பது தாமதமாயினும் தமது வழி முறை

அஹிம்சையாக இருக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை. பலாத்காரத்தை அவர்கள் ஒருபோதும் ஒப்புவதில்லை.

இவ்விரு தரப்பாருமே காந்தியடிகளைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தனர். காரணம் காந்திஜி புரட்சிகரமான மனப் போக்குடையவர். வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அவர் போராடத் தயங்கியதில்லை. அரசியல் போராட்ட உத்திகளுக்கும் அவரே கர்த்தா. அதே சமயம், சத்தியம், அகிம்சை என்ற கோட்பாட்டில் ஒருபோதும் அவர் தளர்ந்ததில்லை. போராட்டக் காலங்களில் பலாத்காரம் வெடிக்குமானால் அப்போராட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளவும் அவர் தயங்க மாட்டார். அரசியல் துறை, நிர்மாணத்துறை இரண்டுமே அவருக்கு முக்கியம். இவ்விரண்டுக்கும் இடையில் அவர் வேறுபாடு காணவில்லை. ஆன்மீகக் கண்கொண்டு பார்க்குமிடத்து இவ்விரண்டும் சேவைக்குரிய கருவிகளே, ஆகவே அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையதாய் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்ற அத்வைத பாவனையுடையவர் காந்தியடிகள்.

காந்தியடிகளின் அடிச்சுவட்டில் இந்த மூன்றும் வகையைச் சார்ந்தவர் சுப்பராமன் அவர்கள். அவருக்கு அரசியல் போராட்டங்களில் எத்தனை அக்கறை இருந்ததோ அத்தனை அளவு நிர்மாணத் திட்டங்களிலும் நம்பிக்கை உண்டு. அது போல் சத்தியம், அகிம்சைக் கோட்பாட்டில் அசையாத நம்பிக்கை அவருக்குண்டு. ஆகவே மதுரைப் பிராந்தியத்தில் நடைபெற்ற அரசியல் மற்றும் நிர்மாணத் திட்டங்கள் அனைத்துக்கும் அவர் தலைமை தாங்கினார். இரு சாராரும் அவரிடம் நம்பிக்கை வைத்தனர். அவரை அணுகினர். காந்தியடிகளே

அவருக்கு பின் பற்றத் தக்க முன்னுதாரணம். அவரது வழியில் பொது வாழ்வில் மாத்திரமின்றி குடும்ப வாழ்விலும் அவர் செயல்படுத்தினர்.

அவரது தீவிர செயல் திறனையும் சத்திய பாவனையையும் மதித்து அவரை காங்கிரஸ் குழுவினர் மதுரை மாவட்ட காங்கிரஸ் தலைவராகத் தேர்வு செய்தனர். இது 1930இல் நிகழ்ந்தது. அப்போது அவருக்கு வயது 25. அக்காலத்தில் காங்கிரஸ் வட்டாரத்தில் அவரை "மதுரையின் கோகலே" என்று பாராட்டி அழைத்தனர். ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே காந்தியடிகளுக்கு அரசியல் குரு என்பது பிரசித்தம்.

1915ஆம் ஆண்டுக்குப் பின்னர் காந்திஜி இந்திய அரசியலில் பிரவேசித்ததும் காங்கிரஸ் கட்சியின் செயல் பாடுகளில் தீவிர மாற்றம் ஏற்பட்டது. சம்பரானில் அவுரிச் சாகுபடி ஒப்பந்தத் தொழிலாளர் சார்பில் நடைபெற்ற சத்தியாக்கிரகம், ஆமதாபாத்தில் பஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் நடைபெற்ற சத்தியா கிரகம், மகாராஷ்டிரத்தில் கேடா மாவட்டத்தில் விவசாயிகள் சார்பில் நடைபெற்ற வரிகொடா இயக்கம் போன்றவை குறிப்பிட்ட பிராந்தியங்களில் மாத்திரம் மையங்கொண்டு நடைபெற்றன. ஆயினும் அவற்றின் தாக்கம் அகில இந்தியாவிலும் எதிரொலிக்கவே செய்தது. அதனைத் தொடர்ந்து 1919ஆம் ஆண்டில் ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் அகில இந்திய அளவில் ஹர்த்தால் அனுஷ்டித்தது ஒரு புதிய உத்வேகத்தை நாடு முழுதும் ஊட்டிற்று. அதற்கு முன்னர் காந்திஜி நாடு முழுதும் சுற்றுப்பயணம் செய்து காங்கிரசின் லட்சியங்களையும் கோட்பாடுகளையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருந்தார். அதன் பயனாக

காங்கிரஸ் இயக்கம் மேல் மட்டத்திலுள்ள தலைவர்களோடு அடங்கிக் கிடக்காமல் அது மக்கள் இயக்கமாகப் பரிணமித்தது. அதனையடுத்து காந்திஜி நாடளாவிய ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய போது நாட்டின் பல்வேறு தரப்பினரும் அதற்கு ஆதரவு அளித்தனர். அந்தக்கால கட்டத்தில் மதுரை மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த ஐயா அவர்கள் காங்கிரஸ் பணியை வீடுகள்தோறும் நுழையும் வண்ணம் விரிவு படுத்தினர், 1930இல் காந்திஜி உப்புச் சத்தியாகிரகத்தைச் செயல்படுத்த தண்டி யாத்திரையை மேற்கொண்டபோது தமிழ் நாட்டில் ராஜாஜி தமது வேதாரண்யம் யாத்திரைக்கு ஆதரவு கோரி மதுரை வந்தார். மதுரை மாவட்ட காங்கிரஸ் குழு அக்காலத்தில் மதுரையில் பிரபல காங்கிரஸ் தலைவராக இருந்த ஸ்ரீ வைத்தியநாதய்யர் வீட்டில் கூடிற்று. அப்போது காங்கிரஸ் கோட்டையாக மதிக்கப் பட்ட மதுரை மாவட்டக் காங்கிரஸின் ஒப்புதலைப் பெற ராஜாஜி மதுரை வந்ததில் வியப்பில்லை. ராஜாஜியின் திட்டத்தை குழு ஆமோதித்தது. உப்புச் சத்தியாகிரகத்துக்குத் தொண்டர்கள் சேர்க்கும் பொறுப்பு ஐயா அவர்களிடம் அளிக்கப் பெற்றது. வேதாரணியம் சத்தியாகிரகத்தில் கலந்து கொள்ளுவதற்காக தியாக பாவனையும் அஞ்சாமையும் மிக்க 32 தொண்டர்களைத் தேர்வு செய்து அவர் அனுப்பி வைத்தார்.

உப்புச் சத்தியாகிரகத்தினையடுத்து நாட்டில் அடுத்தடுத்து பல அறப்போராட்டங்கள் நடைபெறலாயின. அவற்றில் குறிப்பிடத்தக்கவை மதுக்கடை மறியல் போராட்டமும் அந்நிய நாட்டுப் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் சுதேசி இயக்கமும் ஆகும். தமிழ் நாட்டில்

இப்போராட்டங்களுக்கு ஆதரவுதிரட்டும் பாங்கில் தமிழ் நாடு காங்கிரஸ் மாநாடு 1930ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மதுரையில் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான பிரதிநிதிகள் தமிழகமெங்கிலுமிருந்து இம் மாநாட்டில் வந்து கலந்து கொண்டனர். இம் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் பேறு சுப்பராமன் அவர்களுக்குக் கிடைத்தது. அம்மாநாட்டில் அவர் ஆற்றிய தலைமை உரை அனைவராலும் பாரட்டத் தக்கதாயும் ஊழியர்களுக்கு ஊக்கமளிப்பதாயும் அமைந்திருந்தது. பத்திரிகைகள் அது குறித்து தலையங்கங்கள் எழுதின. அவரது தலைமை உரை பற்றி அக்காலத்தில் பிரபலமாக விளங்கிய தேசீய வார இதழான ''சுதந்திரச் சங்கு'' அதன் தலையங்கத்தில், ''மதுரை திரு. சுப்பராமன் அவர்கள் ஆற்றிய உரை உணர்ச்சிப் பெருக்கோடும் அதே சமயம் ஆக்கபூர்வாகவும் அமைந்திருந்தது. அவ்வுரையில் உயர்ந்த சிந்தனையும் ஆழ்ந்த தேசப் பற்றும் தொனித்தன. திரு. சுப்பராமன் உணர்ச்சி பூர்வமான பேச்சாளி மாத்திரமல்ல, தாம் கூறியவற்றைச் செயல் படுத்தும் சத்திய பாவனையும் உள்ளவர் என்பதை தமிழ்நாடு நன்கறியும். "என்று கூறிப் பாராட்டியிருந்தது. அவரது உரையால் கவரப்பட்ட இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் அந்நியத் துணி பகிஷ்காரத்திலும் கள்ளுக்கடை மறியலிலும் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டில் இப்போராட்டங்கள் காங்கிரசுக்குப் பெரும் வெற்றியைத் தேடித் தந்தன. ஐயா அவர்கள் மதுரையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நூற்றுக்கணக்கான தொண்டர்களைத் திரட்டி, அவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தி மறியல் போராட்டத்துக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார். இவ்வாறு தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் திரு. டி.கே.ராமா அவர்கள் ஐயா அவர்களுக்குப் பேருதவி

யாக இருந்தார். தமிழ் நாட்டில் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் மதுரை முன்னணியில் இருந்தது.

மதுக்கடை மறியல் போராட்டம் மதுரையில் நடைபெற்று வந்த காலத்தில் ஒரு நிகழ்ச்சி. 1930ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் நாள் இந்நிகழ்ச்சி நடந்தது. மதுரை கோரிப்பாளையம் என்ற இடத்தி லுள்ள மதுக்கடையின் முன் மறியல் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அங்கிருந்த சில சமூக விரோதி களுக்கும் மதுக்கடைக்காரர்களுக்கும் இடையே கை கலப்பு உருவாகி, அதன் இறுதியில் மதுக்கடை தீக்கிரை யாயிற்று. இதன் விளைவாக காவல் துறையினர் எவ்வித அறிவிப்பும் இன்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஏழு பேர் தலத்திலேயே இறந்து போயினர். மேலும் பலர் படுகாயமுற்றனர். இதனைத் தொடர்ந்து தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்த முகாமிலும் காவல் துறையினர் சூழ்ந்து கொண்டு தடியடிப் பிரயோகம் செய்தனர். ஏராளமான காங் கிரஸ் தொண்டர்கள் கைது செய்யப் பெற்றனர்.

உடனடியாக ஐயா அவர்கள் காங்கிரஸ் குழுவைக் கூட்டி காவல் துறையினர் முன்னறிவிப்பின்றி நடத்திய துப்பாக்கிச் சூட்டை வன்மையாகக் கண்டிக்கும் தீர் மானத்தைப் பிரகடனப் படுத்தினர். அத்துடன் நின்று விடாமல் மறு நாளே மாபெரும் ஊர்வலத்துக்கும் அதன் இறுதியில் மீண்டும் மதுக்கடை மறியல் செய்யவும் ஏற்பாடு செய்தார். அன்றைய மறியலுக்குத் தாமே தலைமை தாங்கப் போவதாகவும் அறிவித்தார். இச் செய்தி காட்டுத்தீ போல் மதுரை நகரெங்கும் பரவிற்று. அறிவித்தபடி மறு நாள் 26ஆம் தேதி ஊர்வலம் மாசி வீதிவழியாகப் புறப்பட்டது. இதனைக் காவல் துறை

யினர் தடுத்து நிறுத்தி சுப்பராமனையும் பல தொண்டர் களையும் கைது செய்து மதுரை மத்திய சிறையில் வைத்தனர். சுப்பராமன் மீது காவல் துறையினர் பல குற்றச் சாட்டுகளைச் சுமத்தி வழக்குத் தொடுத் தனர். அதனிறுதியில் அவருக்கு இரண்டரை ஆண்டு கடுங்காவல் தண்டனையும் 500 ருபாய் அபராதமும் விதிக்கப்பட்டன.

சுப்பராமன் மதுரைச் சிறையிலிருந்து கடலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் "கோவை ஐயா" என்று பலராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு அவினாசிலிங்கம் செட்டியாரையும் மற்றும் பல தலைவர்களையும் தொண்டர்களையும் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. குறிப்பாக திரு அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களுடன் அங்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. சிறைவாசத்தின் சமயம் இருவரும் சேர்ந்து காந்தியடிகளின் "தென்னாப்பிரிக்க சத்தியாகிரகம்" என்ற நூலை தமிழில் மொழி பெயர்த் தனர். பிற்காலத்தில் அது காந்தி நூல் வெளியீட்டுக் கழகத்தின் தொகுப்பில் இடம் பெற்று, பின்னர் அது தமிழ்நாடு காந்தி நினைவு நிதி வெளியீடாகவும் காந்தி இலக்கியச் சங்க வெளியீடாகவும் வெளியாகிக் கொண் டிருக்கிறது. அச்சிறை வாழ்வில் கிடைக்கப் பெற்ற இரு பெரியார்களின் நட்பு சுப்பராமனின் இறுதிக்காலம் வரை ஆன்ம நேய நட்பாக நீடித்தது. இருவரின் ஆன்மீக நாட்டமும் காந்தியடிகளிடமும் ஸ்ரீ விவேகாநந்தரிடமும் உள்ள ஈடுபாடும் அவர்களது நட்பினை மேலும் வளர்த்தது.

கடலூர் சிறை நாட்களில் சுப்பராமன் சக கைதிகளுக்குத் திருக்குறள் பாடம் கூறுவதுண்டு. திரு.

அவினுசிலிங்கம் அவர்கள் பகவான் ராமகிருஷ்ணர் பற்றிப் பாடம் கூறுவதுண்டு. இவ்வாறு சுப்பராமனின் சிறை வாழ்க்கை பயன்தரத் தக்கதாக அமைந்திருந்தது. ஆயினும் சிறை வாழ்க்கை சுப்பராமனின் உடல் நிலையைப் பெரிதும் பாதித்தது. சிறையில் அனுமதிக் கப்படும் உணவைத் தவிர வேறு எதையும் ஏற்பதில்லை என்று அவர் மறுத்துவிட்டபடியால் அவரது உடல் மேலும் பலவீனமுற்றது. அவருக்கு சிறைக்கு வெளி யிலிருந்து தக்க உணவு அளிக்கப் பலர் தயாராக இருந் தனர். ஆயினும் சிறை வாழ்க்கைக்கு காந்தியடிகள் விதித்துள்ள ஒழுங்குப்படி சத்தியாகிரகிகள் சலுகைகள் கோரக் கூடாது என்ற விதியை சுப்பராமன் கண்டிப்பாக அனுசரித்தார். இரண்டரை ஆண்டு சிறை வாசத் துக்குப் பின்னர் 1932ஆம் ஆண்டு இறுதியில் அவர் விடுவிக்கப்பட்டார். அவர் வெளிவரும் போது அவர் மனம் தளரவில்லையாயினும் அவரது உடல் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. மதுரை திரும்பியும் அவர் ஓய்வு எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. விட்டுச் சென்ற நிர் மாணப் பணிகளையும் காங்கிரஸ் பணிகளையும் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் செயலாற்றத் தொடங்கினர். அவரது குடும்பத்தாரும் காங்கிரஸ் தொண்டர்களும் சிலகாலம் வீட்டில் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு மன்றுடிக் கேட்டுக் கொண்டபோதிலும் அவர் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ''தொண்டருக்கில்லை ஓய்வும் ஒழிச்சலும்'' என்ற முது மொழிக்கிணங்க தமது தேசப் பணி என்ற புனிதப் பயணத்தைத் தொடரலானர்.

சுப்பராமன் மறியல் போராட்டத்துக்காகத் தொண்டர்களைத் திரட்டுவதிலும் அவர்களுக்குப் பயிற்சி அளித்து மறியலுக்கு வரிசை வரிசையாக அனுப்பிக்

கொண்டிருப்பதிலும் இடையருது ஈடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் அவரது மனைவியார் பர்வதவர்த்தினி அம்மையாரும் தமது கணவருடன் தேசத் தொண்டில் உதவிக் கொண்டிருந்தார். தொண்டர்களின் பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு உணவு தயாரித்தளிக்கும் பணி அவரிடம் விடப்பட்டிருந்தது. இதற்கென மதுரையில் காங்கிரஸ் பெண் தொண்டர் படைப் பிரிவு ஒன்று இயங்கிக்கொண்டிருந்தது. அதற்கு பர்வதவர்த்தினி அம்மையார் தலைமை தாங்கினுர். ஐயா அவர்கள் கைது செய்யப்பெற்று சிறையில் இருந்த காலத்தில் இவர் தமது பெண் தொண்டர் படையுடன் கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டு வந்தார். காவல் துறையினர் அப் பெண்களை லாரிகளில் ஏற்றிச் சென்று நகரத்துக்கு வெளியில் காட்டுப் புறத்தில் இறக்கித் தவிக்க விட்டனர். இந்த அநாகரீகச் செயலைக் கண்டிக்கு முகத்தான் பர்வத வர்த்தினி அம்மையார் மதுரையில் ஒரு ஊர்வலம் நடத்தினுர். இதனைக் காவல் துறையினர் தடுத்ததோடு அவரைக் கைது செய்து சிறைப் படுத்தினர். அவர் மீது வழக்குத் தொடர்ந்து ஆறு மாதகாலம் சிறைத் தண்டனையும் அளித்தனர். பின்னர் அவர் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். தமிழ் நாட்டில் முதலாவது அமைக்கப் பட்ட பெண் தொண்டர் படை இதுவெனக் கூறலாம்.

கடலூர் சிறையிலிருந்து விடுதலை பெற்று மதுரை திரும்பிய ஐயா அவர்கள் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் விடுதலைப் போராட்டத்திலும் நிர்மாணப் பணியிலும் ஈடுபட்டார் என்று முன்னர் பார்த்தோம். இக்காலத்தில் அவர் தீண்டாமை விலக்குப் பணியில் அதிக நாட்டமுள்ளவராக இருந்தார். அவருடைய செல்வாக்கு பலதரப்பட்ட மக்களிடயே பரவியிருந்தது.

இதன் காரணமாக 1935ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சிச் தேர்தலில் அவர் மதுரை நகராட்சியின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டு காங்கிரஸ் போராட்டத்துக்கு நகராட்சித் தலைவர் என்ற தகுதியில் தம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்து வந்தார். பிரிட்டிஷ் அரசின் அடக்குமுறையினைக் கண்டித்து நகராட்சிக் குழுவில் கண்டனத் தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றச் செய்தார்.

ஐயா அவர்களின் இந்நடவடிக்கைகள் ஆங்கில அரசின் கவனத்தை ஈர்த்தது. இத்தருணத்தில் 1939ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் தொடங்கிற்று. இங்கிலாந்து போரில் ஈடுபட்டதோடு இந்தியாவையும் ஒருதலைப் பட்சமாக யுத்தத்தில் ஈடுபடுத்திற்று. இதனைக் கண்டித்து மதுரை நகராட்சி கண்டனத் தீர்மானம் இயற்றிற்று. அப்போது சென்னை மாகாண ஆளுநராக இருந்த ஆர்தர் ஹோப் என்பவர் அரசு ஊழியர்கள் அனைவரும் யுத்த நிதி வசூலிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதுபோல் நகராட்சியிலுள்ள பணியாளர்களும் நிதி வசூலிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். அதற்கு மாறாக நகராட்சித் தலைவராக இருந்த ஐயா அவர்கள் மதுரை நகராட்சி எல்கைக்குள் எவரும் யுத்த நிதி வசூலிக்கக் கூடாது என்று உத்தரவிட்டார். இதன் மூலம் ஆளுநரின் ஆணையை ஐயா அவர்கள் துணிவுடன் நிராகரித்தார். ஆளுநரிடமிருந்தும் மாவட்ட ஆட்சியாளரிடமிருந்தும் தனிப்பட்ட முறையில் யுத்த நிதி திரட்டித் தருமாறு கோரி கடிதங்கள் தனியாக ஆள் மூலம் ஐயா அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவற்றை அவர் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டார். அத்துடன் நில்லாது மதுரை நகராட்சி எல்லைக்குள் நகராட்சி

ஆணையாளரோ, நகராட்சி ஊழியர்களோ யுத்த நிதி வசூலிக்கக் கூடாது என்று மீண்டும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தார். இது கண்டு கோபமுற்ற ஆளுநர் நகராட்சிக்கு அரசு அளிக்க வேண்டிய மானியங்களை நிறுத்தினர். இதனைக் கண்டித்து ஆட்சிக் குழு ஆளுநர் பேரில் குற்றம் சாட்டித் தீர்மானம் இயற்றியது.

இவ்வாறு ஒரு புறம் ஆளுநருக்கும் நகராட்சித் தலைவர் என்ற முறையில் ஐயா அவர்களுக்குமிடையே பிணக்கு வலுத்துக் கொண்டிருக்க, மற்றொரு புறம் நகராட்சிக்கும் ராணுவத்துக்குமிடையிலும் தகராறு உருவாயிற்று. யுத்தத்துக்கு ஆள் சேர்ப்பதற்காக திருச்சியிலுள்ள ஆள் திரட்டும் பணியை மதுரைக்கும் விஸ்தரிக்கும் நோக்கத்தோடு ராணுவ இலாகா மதுரையில் இடம் ஒதுக்கித் தருமாறு நகராட்சியைக் கோரிற்று. அவ்வாறு இடம் ஒதுக்கித்தர முடியாது என்று அக்கோரிக்கையை நிராகரித்ததோடு, மதுரை நகராட்சி எல்லைக்குள் ராணுவத்துக்கு ஆள் சேர்க்கக்கூடாது என்றும் ஐயா அவர்கள் தடை உத்தரவு பிறப்பித்தார். மேலும் நகராட்சிக்குச் சொந்தமான விடுதிகளில் ராணுவ அதிகாரிகள் எவரும் ஒரு நிமிடம்கூட தங்க அனுமதிக்கக் கூடாது என்றும் உத்தரவிட்டார். இதுபோன்ற துணிவான உத்தரவுகள் இந்தியாவில் வேறுஎங்கும் பிறப்பிக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறு ஐயா அவர்களின் நகராட்சிக் காலம் போராட்டமும் புரட்சிமிக்கதாயும் இருந்து வந்தது. ஆளுநரையும் ராணுவ அதிகாரிகளையும் எதிர்த்துப் போராடும் துணிவும் அதனால் விளையும் ஆபத்தை எதிர் நோக்கும் மனவலிமையும் ஆன்ம பலமும் அவருக்கு இருந்தது கண்டு மக்கள் வியந்தனர்.

1942ஆம் ஆண்டு இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் உச்சகட்டமான ஆண்டு எனலாம். அவ்வமயம் நாடு சோதனைக்குள்ளாகி இருந்தது. இந்து முஸ்லீம் பிணக்கு நாட்டின். ஒருமைப் பாட்டுக்கு ஒரு சோதனைக் காலம். முஸ்லீம் லீக் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து போராடிக் கொண்டிருந்தது. அதேசமயம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து போராடக் காங்கிரஸ் மகா சபை அதன் முழு பலத்தையும் திரட்டிக் கொண்டிருந்தது. இக் கால கட்டத்தில் 1942ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலுப் படுத்தும் நோக்கத்தோடு தமிழ் நாடு காங்கிரஸ் மாநாடு ஒன்று மதுரையில் நடைபெற்றது. அம் மாநாட்டுக்கு ஐயா அவர்கள் தலைமை வகித்தார். ராஜாஜி, காமராஜ், ஓ.பி.ராமசாமி ரெட்டியார் போன்ற தலைவர்கள் அம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் தலைமை உரையில் ஐயா அவர்கள் இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினூர். இம் மாநாட்டினை அடுத்து மதுரை நகர் காங்கிரஸ் குழுவின் தொண்டர்கள் வீடு வீடாகச் சென்று இந்து முஸ்லீம் ஒற்றுமையின் அவசியத்தை இரு சாராரிடமும் வலியுறுத்த வேண்டும் என்று முடிவு செய்து அதனைச் செயல்படுத்துவதில் ஐயா அவர்கள் தீவிரம் காட்டினூர்கள்.

அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பம்பாயில் காந்தியடிகள் தலைமையின் கீழ் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. ''வெள்ளையனே வெளியேறு'' என்ற சரித்திரப் பிரசித்தி மிக்க தீர்மானம் அங்கு நிறைவேறிற்று காந்தியடிகள் உருக்கமும் உணர்ச்சியும் தொனிக்க ''செய் அல்லது செத்துமடி'' என்ற

கோஷத்தை எழுப்பி ஆங்கில அரசு இனி ஒரு நிமிஷம்கூட இந்தியாவில் நீடிக்க நியாயமில்லை என்பதை உறுதியுடன் கூறினர். இத் தீர்மானம் நிறைவேறிய நாள் ஆகஸ்டு மாதம் 8ஆம் தேதியாகும். அன்றிரவே காந்தியடிகள் உட்பட அனைத்துத் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். காந்தியடிகள் புனுவுக்கு அருகிலுள்ள ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டார். இதர தலைவர்கள் எங்கு சிறை வைக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியே மக்களுக்குத் தெரியவில்லை. இதனால் உணர்ச்சி வசப்பட்ட மக்கள் ஆங்காங்கே பலாத்கார நடவடிக்கைகளில் இறங்கினர்.

இந்நிகழ்ச்சி நடைபெற்ற மறுநாளே, ஆகஸ்டு 9ஆம் தேதி ஐயா அவர்கள் நகராட்சிக் குழுவைக் கூட்டுவித்து "வெள்ளையனே வெளியேறு" தீர்மானத்தை ஆதரித்தும் தலைவர்களைச் சிறைப்படுத்தியமைக்காக ஆங்கில அரசை வன்மையாகக் கண்டித்தும் தீர்மானம் இயற்றச் செய்தார். பம்பாய் நிகழ்ச்சியைத் தொடர்ந்து இந்திய அரசு நாடெங்கும் அடக்கு முறையை ஏவிற்று. பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் தடை செய்யப்பட்டன. இதனை எதிர்த்து ஐயா அவர்கள் மதுரை காங்கிரஸ் கூட்டத்தைக் கூட்டினர். ஆகஸ்டு 10ஆம் தேதியன்றே தடையை மீறி ஊர்வலம் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது. மதுரை ஸ்ரீ வைத்தியநாதய்யர் தலைமையில் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தை தடுத்து நிறுத்திய காவல் துறையினர் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்ததோடு துப்பாக்கிச் சூடும் நடத்தினர். அதில் ஐந்து பேர் உயிரிழந்தனர். பலர் காயமுற்றனர்.

காவல் துறையினர் கண்மூடித்தனமாக நடந்து கொண்டதைக் கண்டிக்கும் நோக்கத்துடன் ஐயா அவர்

கள் நகராட்சிக் குழுவை அவசரமாகக் கூட்டினர். அக்கூட்டம் ஆகஸ்டு 13ஆம் தேதி நடைபெற்றது. அக்கூட்டம் ஆங்கில அரசின் கொடிய காட்டுமிராண்டித் தனமான அடக்கு முறையைக் கண்டித்துத் தீர்மானம் இயற்றியதோடு அதனை விளக்கித் துண்டுப் பிரசுரம் ஒன்று மக்கள் மத்தியில் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஐயா அவர்களின் செயல் கண்டு ஏற்கெனவே கோபமுற்றிருந்த ஆளுநர் அவரைக் கைது செய்ய உத்தரவிட்டார். காவல் துறையினர் அவரை அவரது வீட்டில் வைத்துக் கைது செய்தனர். அவ்வாறு கைது செய்யப்பட்டதைக் கண்டித்து மறுநாள் மதுரை நகர் முழுதும் கடையடைப்பு நடைபெற்றது. இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஐயா அவர்கள் வேலூர் சிறைக்குக்கொண்டு செல்லப் பட்டார்.

ஏற்கனவே அங்கு சிறையிலிருந்த ஓ.பி. ராமசாமி ரெட்டியார் போன்ற தலைவர்களையும் பல தொண்டர் களையும் ஐயா அவர்கள் சந்தித்தார். அங்கு சென்ற சில நாட்களில் ஐயா அவர்களின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. இதைக் கண்ட சிறை அதிகாரிகள் அவரை தஞ்சாவூர் சிறைக்கு மாற்றினர். அங்கும் அவரது உடல் நிலை தேறவில்லை. மேலும் அவரது சிறை வாசத்தை நீடிப்பது ஆபத்தாகிவிடும் என்பதைக் கண்ட அரசு அவரை 1944ஆம் ஆண்டு 18ஆம் நாள் நிபந்தனை இன்றி விடுதலை செய்தது.

விடுதலை பெற்ற ஐயா அவர்கள் வசதிக்காகவும் சிறிது ஓய்வுக்காகவும் சில நாட்கள் திண்டுக்கல்லில் தங்கினர். இத் தருணத்தில் நாடெங்கும் இந்து முஸ்லீம் கலவரங் கள் பலாத்கார வடிவெடுத்துக் கொண்டிருந்தது. இது

கண்டு ஐயா அவர்கள் மிகுந்த மன வேதனைக்குள்ளானர். இந்த இக்கட்டான வேளையில் தாம் ஓய்வெடுப்பது கூடாது என்றுணர்ந்த ஐயா அவர்கள் திண்டுக்கல்லி லிருந்து மதுரை திரும்பினர். மதுரை திரும்பிய ஐயாவை அவரது குடும்பத்தாரும் காங்கிரஸ் குழுவினரும் கூடி வரவேற்றதோடு, அவரது உடல் நலனை மனத்திற் கொண்டுசிலகாலமேனும் அவர் போராட்டங்களில்கலந்து கொள்ளாமல் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டும் என்று கோரி மன்றாடினர். ஆனால் அதற்கு ஐயா அவர்கள் செவி சாய்க்கவில்லை. தமது உடல் நிலையைப் பொருட் படுத்தாது காங்கிரஸ் தொண்டர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காகத் தெருத் தெருவாகச் செல்லத் தொடங்கினர். அதற்காக அவர் நாள்தோறும் சிறு சிறு கூட்டங்கள் கூட்டிப் பேசினர். மதுரையில் எங்கேனும் ஒரு சிறு வகுப்புக் கலவரம் தோன்றினாலும், அங்கு உடனடியாகச் சென்று அதனைத் தவிர்த்து ஒருமைப்பாட்டை உருவாக்கவும் அமைதி ஏற்படுத்தவும் அவர் தவறமாட்டார். மதுரை யில் நடைபெறும் இப்பணியைக் கண்டு காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் அவரைப் பாராட்டினர்.

காந்தியடிகள் ஜின்னாவைச் சந்தித்துப் பேசினர். எனினும் ஜின்னா தமது பிரிவினைக் கோரிக்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்கவில்லை. இறுதியாக இந்தியா, பாகிஸ்தான் பிரிவினையுடன் 1947 ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் நாடு சுதந்திரம் பெற்றது. இது கண்டு காந்தியடி கள் கண் கலங்கினர். காந்தியடிகளைப் போன்று ஐயா அவர்களும் சுதந்திர நாளன்று மனவேதனையுற்றார். அன்று மதுரையில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண் டாட்டத்தின்போது ஐயா அவர்கள் மன வருத்தத்துடன் நீண்ட உரையாற்றினர். காங்கிரஸ் கட்சியும் மக்களும்

கடந்த ஆண்டுகளில் ஆற்றிய தியாகங்களைக் குறிப்பிட்டு, இவை அனைத்தும் நாட்டுப் பிரிவினை காரணமாக மாசுப் பட்டுப் போயிற்றே என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார். நாம் காந்தியடிகளின் சொற்படி கேட்டு பலாத்காரத்தைக் கைவிட்டு அகிம்சைக் கோட்பாட்டை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டிருந்தால் இப்பிரிவினை நேர்ந்திருக்காது என்பதை நினைவுபடுத்தினார். வருங் காலத்திலேனும் இதனை நினைவிற்கொண்டு அனைவரும் சாதி, மத, பேதமின்றி அகிம்சை வழியில் தேசத்தின் ஒருமைப்பாட்டைக் காக்க உறுதி எடுத்துக் கொள்ளு மாறு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

ஐயா அவர்களின் அரசியல் பணி அப்பழுக்கற்றது, ஆண்மை மிக்கது, வழிமுறை தவறாதது, தமக்கென புகழையோ பதவியையோ நாடாதது, காந்தியடிகள் வழிகாட்டிய அரசியல் கோட்பாட்டில் ஒரு சிறிதும் பிறழாதது, தியாகமிக்கது. சுய நலம் சிறிதும் அற்றது, அரசியலிலும் ஆன்ம நாட்டம் பொதிந்தது. இவ்வாறு ஒரு சிறந்த அரசியல் பணிக்கு அவர் சிறந்த உதாரண மாக விளங்கினார். □

5. நகராட்சித் தலைவர்

மதுரை நகராட்சித் தலைவராக ஐயா அவர்கள் பொறுப்பிலிருந்த காலக்கட்டத்தில் தேச விடுதலைப் போராட்டம் வேகம் பெற்றிருந்ததையும், அதில் அவர் பங்கு பெற்றிருந்ததையும் முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். அவர் ஆங்கில ஆட்சியாளரோடு நேருக்குநேர் எதிர்த்துப் போராடிய நிலையில் நகராட்சித் தலைவர் பொறுப்பில் அவர் என்ன சாதித்திருக்க முடியும் என்று நமக்குத் தோன்றும். அரசுக்கு எதிராக அவர் போராடிக் கொண்டிருந்ததால் ஆளுநரின் கடுங் கோபத்துக்கு அவர் ஆளாகியிருந்தார் என்றும் பார்த்தோம். மதுரை எல்லைக்குள் மதுக்கடைகள் திறக்க அவர் அனுமதி யளிக்க மறுத்தார். அந்நியத் துணி மறியல் போராட்டத் துக்கும் சுதேசி இயக்கத்துக்கும் அவர் ஆதரவளித்த தோடு தாமே அப்போராட்டத்தில் நேரடியாகப் பங்கு பெற்றார். யுத்த நிதி திரட்ட அவர் நகராட்சி அதிகாரி களையும் ஊழியர்களையும் அனுமதிக்க மறுத்தார். மதுரை நகராட்சி எல்லைக்குள் எவரும் யுத்த நிதி வசூலிக்கக் கூடாது என்றும் தடைவிதித்தார். யுத்தத்துக்கு ஆள் திரட்டுவதையும்கூட தடைசெய்தார். மதுரை கோச் சடைப்பகுதியில் ராணுவ முகாம் அமைக்கவும் ராணுவ அதிகாரிகள் நகராட்சி விடுதிகளில் தங்கவும் அவர் அனுமதி அளிக்கவில்லை. நகராட்சிக் குழுக் கூட்டங்களில் அரசின் அடக்குமுறைப் போக்கைக் கண்டித்தும், ''வெள்ளையனே வெளியேறு'' தீர்மானத்துக்கு ஆதரவு அளித்தும் தீர்மானங்கள் இயற்றச் செய்தார். ஆளுநர் ஆர்தர்ஹோப்புக்கு நகராட்சிக் குழுவில் வரவேற்பளிக்க மறுத்ததோடு, ராஜேந்திர பிரசாத், பண்டித ஜவஹர் லால் நேரு, ராஜாஜி போன்ற தேசியத் தலைவர்கள்

மதுரைக்கு விஜயம் செய்தபோதெல்லாம் வரவேற்பளிக்க ஏற்பாடு செய்தார். இவை போன்ற செயல்பாடுகள் அவர் பேரில் ஆட்சியாளர்களின் கடுமையான கோபத்தை ஈட்டிக் கொடுத்ததில் வியப்பில்லை. அவருடன் ஒத்துழைக்கும் மனதில்லாத எதிர்மறை இயல்புள்ள அதிகாரிகளைத் தேர்வு செய்து மதுரை நகராட்சி ஆணையாளர்களாக ஆளுநர் நியமித்தார். நகராட்சிக்கு உரிய மானியத்தையும் ஆளுநர் அளிக்க மறுத்தார்.

இத்தகைய சூழ்நிலையில் நகராட்சித் தலைவர் என்ற தகுதியில் ஐயா அவர்கள் என்ன சாதனை புரிந்திருக்க முடியும் என்று தோன்றலாம். தேசத் தொண்டர் என்ற தகுதியில் அவர் சாதித்த அளவு நகராட்சித் தலைவர் என்ற தகுதியில் சாதித்திருக்க முடியுமா என்ற கேள்வி எழலாம். அதற்குரிய அவகாசம் அவருக்கு எவ்வாறு கிடைக்க முடியும்? திட்டமிட்டுச் செயலாற்றுவதற்குத் தேவையான மன அமைதி அவருக்கு இருந்திருக்குமா? இன்னோரன்ன கேள்விகள் எழ நியாயமுண்டு. இதற்கு மாறாக நகராட்சியை ஒரு கருவியாகக் கொண்டு அவர் சாதித்துள்ள சாதனைகளைப் பார்க்குமிடத்து இத்தனை அளவு அவரால் எவ்வாறு சாதிக்க முடிந்தது என்ற கேள்வியே முந்திய கேள்விகளுக்கு விடையாகவும் அமைகிறது. காங்கிரஸ் தலைவராகவும் சத்தியாகிரகியாகவும், நகராட்சித் தலைவராகவும் அவர் பம்பரம் போல் சுழன்று கொண்டிருந்தார் என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள்.

அவரது சுபாவம் எளிமையும் சாத்வீகமும் ஆயினும் அதற்குள் எரிமலை போன்ற புரட்சிக் கனலும் இருந்தது. வீரமும் செயலாற்றலும் இயங்கிக் கொண்டிருந்தன. தண்ணீர் போன்ற மென்மையான சுபாவமாயினும், அதே தண்ணீர் கடல் அலையாக எழும்போது அதற்குப்

பேராற்றல் உருவாவதைப் போல் அவரிடம் புரட்சி கரமான செயலாற்றல் நிரம்பியிருந்தது. நிர்மாண சக்தி அவரது ரத்தத்தில் ஊறியிருந்தது. மென்மையும் வீரமும் இணைந்த ஆளுமைக்கு அவர் இலக்கணமாக இருந்தார். ஆகவே அவருக்கு காந்தியடிகளின் சத்தியம் அகிம்சைக் கோட்பாடுகள் இயல்பாகவே உடன்பாடாக அமைந்தன. சத்தியம், உறுதிக்கும் வீரத்துக்கும் அஞ்சாமைக்கும் சின்ன மாயிருக்க, அன்பு மென்மைக்கும் பணிவுக்கும் சின்னமா கிறது. இவ்விரண்டும் இணைந்த பிறவிக் கூறு ஐயா அவர்களுடையதாகும்.

இதனை மனத்திற் கொண்டு ஐயா அவர்களுடைய செயலாற்றலைக் கண்டு களிக்க வேண்டும். மதுக்கடை மறியல் இயக்கத்தில் அவர் இரண்டரை ஆண்டுகள் சிறைவாசமிருந்து விடுதலை செய்யப்பெற்று மதுரை திரும்பினார் என்று முந்திய அத்தியாயத்தில் பார்த்தோம். அதனையடுத்து 1935ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலின் சமயம் அவர் மதுரை நகராட்சித் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கனவே அவர் மதுரை 3வது வார்டு அங்கத்தினராகப் போட்டியின்றித் தேர்வு செய்யப் பெற்றிருந்தார். அவ்வமயம் நடை பெற்ற தேர்தலில் நகராட்சியின் 36 தொகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர்கள் 34 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். மீதமுள்ள 2 இடங்களில் நீதிக் கட்சி வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அதனிறு தியில் ஐயா அவர்கள் நகராட்சித் தலைவராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதில் வியப்பில்லை.

நகராட்சி காந்தி வழியில் நடைபெற வேண்டும் என்று அதற்கிசைவான திட்டமிட்டுச் செயலாற்றுவதில் அவர் முனைந்தார். நகராட்சி நிர்வாகத்தில் மண்டிக்

கிடந்த சீர்கேடுகளையும் லஞ்ச ஊழல்களையும் களைந்து நிர்வாக சீர்திருத்தம் செய்வதற்கு உதவியாக ஒரு குழுவை அமைத்தார். அதிகார முறைகேடு புரிந்து வந்த அலுவலர்கள் பேரில் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. நகராட்சி ஊழியர்கள் காரியாலயங்களில் வேலை செய்யும் காலத்தில் அனைவரும் கதர் அணிய வேண்டும் என்று விதி வகுக்கப்பட்டது. இதனைக் கண்டு அப்போதைய ஆட்சியாளர்கள் எரிச்சலுற்றனர். ஆயினும் அதில் தலையிட அரசு விதி இடமளிக்கவில்லை. ஊழியர்களிடையே தேசப் பற்றும் ஒருமைப்பாட்டுணர்வும் ஏற்படவேண்டும் என்ற நோக்கில் அவர் இவ்விதியை அமல்படுத்தினர். கதர் சீருடைக்கான செலவினை நகராட்சியே ஏற்றுக்கொண்டது. அக்காலத்தில் இது ஒரு புரட்சிகரமான செயலாகும். கதர் அணிவது அரசுக்கு எதிரிடையானது என்று ஆங்கில அரசாங்கம் கருதிவந்த காலம் அது.

நகராட்சிக்குத் தேவையானவற்றுக்கு சுதேசிப் பொருள்களையே வாங்க வேண்டும் என்று விதி வகுத்தார். நகராட்சி அலுவலர்கள் மது அருந்தாதவர்களாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை அமல் படுத்தினர். அலுவலகங்களில் எவரும் புகைப் பிடிக்கக் கூடாது என்ற விதியும் இருந்தது. அது போல் நகராட்சி எல்லைக்குள் மதுக்கடைகள் திறக்கக்கூடாது என்று தடை விதிக்கப் பட்டதை ஏற்கனவே பார்த்தோம். தமிழ் நாட்டில் இது போன்ற தடை மதுரை நகராட்சியில் மாத்திரமே முதன் முதலாக விதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

நகராட்சியின் மூலம் சமுதாயச் சீர்திருத்தப் பணிகளும் நடைபெற்றன. நகராட்சிக்கு உட்பட்ட பொது இடங்களுக்கும் தெருக்களுக்கும் ஜாதிப் பெயர் சூட்டக்

கூடாது என்று ஐயா அவர்கள் தடை விதித்தார். சுதந்திரம் பெற்ற பின்னரும்கூட அரசுகள் இது போன்ற சீர்திருத்தம் கொண்டுவர இன்றும்கூடத் தயங்குவதைப் பார்க்கிறோம். புரட்சிகரமான இத் திட்டத்தை 1935ஆம் ஆண்டில் ஐயா அவர்கள் மதுரையில் செயல்படுத்தியது அசாதரணமானதாகும். அதற்கிணங்க ஜாதிப் பெயர்களைக் கொண்ட தெருக்களுக்கு மாற்றுப் பெயர் அளிக்கப்பட்டன. உதாரணமாக "பள்ளர் தெரு" என்று வழங்கி வந்த தெருவுக்கு "பெருமாள் கோவில் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டது. இன்று அந்தத் தெருவில் வசிப்பவர்களும்கூட இச் செய்தியை அறிவார்களா என்பது சந்தேகமே.

மதுரை நகரைச் சுத்தமாகவும் சுகாதாரமானதாகவும் அமைக்க அவர் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் ஏராளம். தமது இயல்பிலேயே அவர் சுத்தத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவர். அவர் இருக்குமிடம் சுத்தமாக இருக்கும். அது வீடாக இருந்தாலும், காரியாலயமாக இருந்தாலும், வேறு பொது நிலையமாக இருந்தாலும் அவருடன் தொடர்புள்ள அனைத்தும் சுத்தமாக இருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதில் சிரத்தை காட்டுவார். அவர் புழங்கும் அறையில் குண்டூசி முதல் கோப்புகள்வரை அதனதற்குரிய இடத்தில் கச்சிதமாக இருக்கும் அழகைக் காணலாம். காரியங்கள் கலையுணர்வுடன் நடைபெறவேண்டும் என்பதில் அவருக்கு சிரத்தை அதிகம். இயற்கையில் ஒவ்வொன்றும் அதனதற்குரிய இயல்பின்படி இயங்குவதுதான் கலை அழகின் அடித்தளமாகும். இதற்கு மாறாக பகட்டும் ஆடம்பரமும் கவர்ச்சியும் கலையழகு ஆகாது என்பது அவரது கணிப்பு. இதனை அவர் அடிக்கடி ஊழியர்களுக்கு உணர்த்

துவதுண்டு. ஊழியர் முகாம்களில் அவர் கலந்து கொள்ள விஜயம் செய்யும் போதெல்லாம் ஊழியர்கள் பயன்படுத்தும் கழிப்பிடங்கள் குளிக்குமிடங்கள் ஆகிய வற்றைச் சுற்றிப் பார்ப்பார். ஆகவே அவர் முகாமிற்கு வருகிறார் என்ற செய்தி கேட்டதும் அவ்விடங்களையும் தங்குமிடங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதில் ஊழியர்கள் கவனம் செலுத்துவதுண்டு. அவரது நடை யுடைபாவனை அனைத்தும் பரிசுத்தமாக இருப்பது அவரது இயல்பானதால் நகராட்சித்தலைவர் என்ற முறையில் நகரின் சுத்தத்தில் அவர் அக்கரை செலுத்தியதில் வியப்பில்லை.

நகர்ப்புறங்களில் பொதுவாகத் தண்ணீர் தேங்குவ தன் காரணமாக ஏற்படும் சுகாதாரக் கேடுகள் அதிகம். ஐயா அவர்களின் கவனம் இத்துறையில் சென்றதும் மழை நீரோ கழிவு நீரோ தெருக்களில் தங்காமல் வழிந்தோடுவதற்கு உதவியாக பாதாள வடிகால் அமைக்கும் திட்டத்தை மதுரை நகரில் செயலுக்குக் கொண்டு வந்தது அவரது ஆட்சிக் காலத்தில்தான். கழிவு நீரை குழாய்கள் மூலம் கடத்தி நகருக்கு அப்பால் நான்கு கல் தூரத்திலுள்ள கழிவுநீர்கிடங்கில் சேருமாறு திட்டம் அமைக்கப்பட்டது. கழிவுநீரைக் கடத்திவிட் டால் மாத்திரம் போதாது. அக்கழிவுநீர் அங்கு தேங்கி நோய்க் கிருமிகள் வளரும் பண்ணையாகிவிடக்கூடாது. அந்நீரை தக்கவாறு பயன்படும் ஏற்பாடும் திட்டத்தில் இடம் பெற்றிருந்தது. அது ஒரு புல் வளர்க்கும் பண்ணை யாகமாறிற்று. அதனை இன்றும் மதுரைக்குத் தெற்கே உள்ள அவனியாபுரம் கிராமத்துக்குப் பக்கத்திலுள்ள கழிவுநீர்ப் பண்ணை சாட்சி பகர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அப்பண்ணை இன்று மேலும் விரிவடைந்து

மதுரை நகரிலுள்ள பால் மாடுகளுக்குத் தேவையான பசும் புல் அளித்துக்கொண்டிருக்கிறது.

கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ளுவது ஒன்றே கொசு ஒழிப்புத் திட்டமும் ஆகிறது. அனேகமாக கொசு ஒழிக்கும் மருந்து தெளிக்கும் பணியை நகராட்சி மற்றும் ஊராட்சி மன்றங்கள் செயல்படுத்துவதாக எழுத்திலும் செலவு கணக்கிலும் தவறாது இடம் பெற்றிருக்கும். ஆனால் அது செயல் வடிவில் அமல் படுத்தப்படுவதில்லை. அதற்குக் காரணம் நிர்வாகக் கண்காணிப்பும் சிரத்தைக் குறைவும்தான். ஐயா அவர்களின் நிர்வாகத்தில் அதற்குரிய வாய்ப்பில்லை. அதற்குரிய சிரத்தையும் அவருக்கு இயல்பாக இருந் தது. தாம் ஏற்றுள்ள நிர்வாகத்தில் பொறுப் பேற்றிருக்கும்வரை காரியங்கள் சரியாக நடை பெறு மாறு பார்த்துக்கொள்ளத் தம்மால் இயலுகிறதா என் பதை அவர் துல்லியமாகக் கணித்துக் கொள்ளுவார். அவ்வாறு இயலாது என்று தோன்றுமானால் அது எத்தனை பெரிய பதவியாக இருந்தாலும் அதை தகுதியுள்ள வேறு ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு விலகிக் கொள்ளத் தயங்க மாட்டார். பெயரளவிலோ, பெருமைக்காகவோ பொறுப்பு வகிப்பது அவரால் இயலாது. மதுரை நகராட்சித் தலைவர் என்ற பொறுப் பில் அப்பெரிய நகரத்தின் ஒவ்வொரு வீதியும், சந்தும் அவருக்குத் தெரியும், அவர் காலடி படாத தெருவே இராது. நேரில் சென்று பார்க்கத் தவறமாட்டார். இதன் காரணமாக கொசு மருந்து தெளிக்கும் ஊழியர் கள்கூட தவறாது தங்கள் கடமையையாற்றுவதினின்றும் தப்பிக்க முடியாது. தமது அரசியல் போராட்ட வேலைகளுக்கு மத்தியிலும் அவர் நகராட்சிப் பணிகளைக்

கூர்ந்து கண்காணித்து வந்தார். அவர் முழுநேரத் தலைவர் என்பதை மனத்திற்கொண்டு அவரது சாதனை களை ஆராய வேண்டும்.

அவரது ஆட்சிக் காலத்தில் மருத்துவ மனைகளும் பள்ளிகளும் அதிகரித்தன என்பது இங்கு குறிப்பிட வேண்டும். உள்நாட்டு மருத்துவமான ஆயுர்வேத மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம் போன்றவற்றுக்கும் அக்காலத்திலேயே அவர் ஆதர வளித்தார். பிற்காலத்தில் நாடு சுதந்திரம் பெற்ற பின் இது போன்ற உள்நாட்டு மருத்துவ முறைகளுக்கு அரசாங்கம் ஆதரவளிக்க முன் வந்துள்ளது. ஐயா அவர்கள் தமது சொந்த வாழ்க்கையில் அலோபதி மருத்துவத்தைவிட உள்நாட்டு மருத்துவத்தையும் பயன்படுத்தினர். குறிப்பாக காந்தியடிகள் கையாண்ட இயற்கை மருத்துவத்தில் அவருக்கு ஈடுபாடு உண்டு. பிராணயாமம், ஆசனப் பயிற்சி போன்றவற்றிலும் அவருக்குப் பழக்கம் உண்டு. சுதேசி இயக்க பாவனையில் உள்நாட்டு மருத்துவம் அவரது கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லை.

ஐயா அவர்களே தமது குடும்பத்தின் சொந்தச் செலவில், தமது தகப்பனார் ராயலு அய்யர் அவர்களின் பெயரில் ஒரு சிறந்த மருத்துவ மனையைக் கட்டி உருவாக்கி அதனை நகராட்சிக்கு அர்ப்பணித்தார். நகராட்சியின் நிர்வாகத்தில் நடைபெற்ற தாய் சேய் நல விடுதிகளில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்க ஏற்பாடு செய்தார். இன்று தமிழக அரசு அமல்படுத்தி வரும் சத்துணவுத் திட்டத்துக்கு ஐயா அவர்கள் போன்றவர்கள் முன்னோடிகளாவர். கர்ப்பிணிப் பெண்களுக்கு வசதி

அளிப்பதில் அவர் மனிதாபிமான உணர்வுடன் சிறப்பான அக்கரை எடுத்துக் கொண்டார். ஆகவே அக்காலத்தில் பிரசவ காலத்தில் சிசு மரண விகிதம் மதுரையில்தான் மிகக் குறைவு. தாய்மார்களுக்கு சத்துணவுடன் இலவச மாக பால் வழங்கும் திட்டத்தையும் அவர் புகுத்தினர். மருத்துவ மனைகளையும் தாய் சேய் நல விடுதிகளையும் அவர் அடிக்கடி நேரில் சென்று அவர்களது தேவையை அறிந்து பூர்த்தி செய்வது அவரது வழக்கம்.

கல்வித் துறையிலும் அவர் ஆற்றிய பல புதிய சாதனைகள் உண்டு. பள்ளிகளின் எண்ணிக்கையை மாத்திரம் மனதிற்கொண்டு அவ்வாறு கூறவில்லை. அக் காலத்திலேயே காந்தியடிகளின் ஆதாரக் கல்வித் திட்டத் திலுள்ள சில முக்கிய அம்சங்களை நகராட்சிப் பள்ளி களில் அவர் அமல்படுத்தினர். கொடியேற்றுதல், சர்வதர்ம பிரார்த்தனைப் பாடல்கள் பாடுதல், நாள் தோறும் ஒரு பாடவேளை நூல் நூற்றல், பள்ளியின் சுற்றுப்புறச் சுத்தத்தை மாணவர்களைக்கொண்டே கண் காணித்தல், வாரந்தோறும் ஒருநாள் கூட்டுப் பிரார்த் தனை செய்தல் போன்ற அம்சங்களை பள்ளிகளில் செயல் படுத்தினர். ஏட்டுக் கல்வியைவிட தொழிற் கல்வியே சிறந்தது என்று அக்காலத்திலேயே உணர்ந்து செய லாற்றினர். நகராட்சிப் பள்ளிகளில் ஒன்றை தொழிற் கல்வி போதிக்கும் பள்ளியாக மாற்றினர். பள்ளிகளில் நெசவு, தச்சு போன்ற தொழிற் பயிற்சி அளிப்பதை ஊக்குவித்தார். இதற்கு அடிப்படைக் காரணம் ஆதாரக் கல்வித் திட்டத்தில் அவருக்கிருந்த ஈடுபாடா கும். அவர் தமது ஆயுட்காலம்வரை தமிழ்நாடு ஆதாரக் கல்விச் சங்கத்தின் தலைவராக இருந்தார் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இக் கல்வித்

திட்டத்தில் பயிற்சி பெறுவதற்காக நகராட்சி ஆசிரியர்களில் சிலரைத்தேர்வு செய்து திருச்செங்கோடில் ராஜாஜி அவர்கள் நிறுவிய காந்தி ஆசிரமத்துக்கு அனுப்பி வைத்தார். பள்ளி முடிந்ததும் மாலை நேரத்திலும் இரவிலும் அந்தந்தப் பகுதி மக்களின் அவகாசத்துக்கு ஏற்ப நகராட்சிப் பள்விகளில் முதியோர்களுக்கு கல்வி அளிக்க வாய்ப்பளித்தார். இதற்கென பகுதி நேர ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர். அவர்களுக்கு நகராட்சி மதிப்பூதியம் அளிக்கவும் ஏற்பாடு செய்தார். அக்காலத்தின் புள்ளி விபரப்படி மதுரை மக்கட் தொகையில்50 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தனர். அதனை முதியோர் கல்வித்திட்டத்தின் மூலம் கணிசமாகக் குறைத்தார். நகரிலுள்ள படித்த இளைஞர்களையும் மாணவர்களையும் அதில் ஈடுபடுத்தினர். முதியோர் கல்வி அக்காலத்தில் தேசப் பணியாகக் கருதி அது ஒரு இயக்கமாகவே மதுரையில் நடைபெற்றது. பள்ளி வேளைக்கு அப்பால் மாலை நேரங்களில் விருப்பமுள்ளவர்களுக்கு இந்தி மொழி கற்றுத் தரவும் ஆதரவு அளித்தார். இதற்குத் தமிழ்நாடு இந்தி பிரசார சபையின் சேவையை அவர் பயன் படுத்தினர். அவர்களுக்கு நகராட்சிப் பள்ளிகளில் இடம், வெளிச்சம் போன்ற வசதிகளை இலவசமாகச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்தார். இந்தி மொழி கற்றுக் கொள்ளுவது தேசீய ஒருமைப்பாட்டுக்கு அவசியம் என்று அதனை ஒரு நிர்மாணப் பணியாக ஏற்று அதில் அவர் அக்கரை காட்டினர். இது போல் நகரத்தின் முக்கிய இடங்களில் நூல் நிலையங்களையும் படிப்பகங்களையும் திறந்தார். இப்படிப்பகங்கள் தேசீய இயக்கத்துக்குப் படைவீடுகளைப் போல் செயல்பட்டு வந்தன. அப் படிப்பகங்களுக்கு நகராட்சிச் செலவில் தினசரி, வார,

மாதாந்திர இதழ்கள் விநியோகிக்கப்பட்டன. இதன் மூலம் அன்றாட நாட்டு நடப்புகளைத் தெரிந்து விழிப் புணர்ச்சி பெறவும் தேசிய எழுச்சி பெறவும் மக்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

நகரத்தின் தேவைக்கு பால் வழங்குவதற்காகவும் நலிந்த மக்கட் பிரிவினருக்கு வேலைவாய்ப்பளிக்கவும் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்தை அவர் உருவாக்கினார். அவரே அதற்குத் தலைவராகவும் இருந்து அதனைத் திறம்பட நடத்தி ஒரு சிறந்த கூட்டுறவாளர் எனப் பாராட்டப் பெற்றார். நாணயமான நிர்வாகம் செய்யக் கூடிய தலைவர்கள் இருப்பார்களானால் நமது நாடு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் தொழில் வளமும் பொருள் வளமும் பெருக்க முடியும் என்பது அவரது அனுபவம். 1935ஆம் ஆண்டில் அவரால் நிறுவப்பட்ட மதுரை கூட்டுறவு பால் உற்பத்தி சங்கம் இன்று ஆல் போல் தழைத்து தமிழகத்திலேயே பெரியதொரு பால் பெருக்கும் நிறுவனமாக வளர்ந்திருக்கிறது. ''ஆவின் பால்'' என்றவுடன் நமக்கு மதுரை நினைவிற்கு வருகிறது. அந்நிறுவனத்துக்கு ஊற்று ஐயா அவர்கள் நிறுவிய கூட்டுறவு சங்கமாகும். நகராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் பால் மாடுகளுக்குத் தேவையான புல் உற்பத்தி செய்யும் பண்ணைகளாக உருவாகி நகராட்சிக்கு வருமானம் பெற்றுத் தந்த தோடு பால் உற்பத்திக்கும் உதவிற்று. பால் உற்பத்தி நாளுக்கு நாள் பெருகி மதுரை மக்களின் தேவைக்கும் மிஞ்சி அருகிலுள்ள நகரங்களுக்கும் பால் அளிக்கும் அளவில் அதன் திறன் வளர்ந்து கொண்டிருந்தது.

பால் உற்பத்தி சங்கத்தின் கூட்டுறவு இயக்க அனுபவம் நகர மக்களின் குடியிருப்புக்களை உருவாக்கு

வதற்கும் உதவிற்று. தாமே ஒரு வீடு கட்டும் கூட்டுறவு சங்கத்தை உருவாக்கியதோடு வேறு சில கூட்டுறவு சங்கங்களை உருவாக்குவதற்கு ஊக்கமும் உதவியும் செய்து வந்தார். இதன் பயனாக நகரத்தின் நாற்புறத்திலும் புதிய குடியிருப்புகள் உருவாகி மக்களின் வீட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து கொண்டிருந்தது. நகராட்சியில் பணிபுரியும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு நகராட்சியின் செலவில் வீடுகட்டித் தரும் திட்டம் ஒன்றையும் அமல் படுத்த ஐயா அவர்கள் காரண கர்த்தாவாக இருந்தார். கூட்டுறவு இயக்கத்தின் அனுபவமே இதற்கும் அவருக்குத் துண்டுகோலாக இருந்தது. நகராட்சி ஊழியர்களில் கடைநிலையில் இருப்பவர்கள் நகரசுத்தித் தொழிலாளர்களே. அவர்கள் பேரில் ஐயா அவர்களுக்கு சிறப்பான அக்கரை உண்டு. அவர்களின் மேம்பாட்டுக்கு அவரது கவனம் திரும்பிற்று. அதனைத் தொடர்ந்து படிப்படியாகத் தம்மை அரிஜன சேவைக்கு அர்ப்பணித்துகொள்ள நேர்ந்தது. ஏனெனில் நகர சுத்தித் தொழிலாளர்கள் அநேகமாக அரிஜன மக்களே. புறக்கணிக்கப் பட்டுக் கிடந்த இம்மக்களைக் கண்டு ஐயா அவர்கள் உள்ளம் நெகிழ்ந்தார். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட இம்மக்கள் ஆற்றும் பணியோ மனித சமுதாயத்துக்கு அத்தியாவசியமான சுகாதாரப் பணி. குறிப்பாக நகரங்களில் வாழ்கிறவர்கள் இவர்களின் சேவை எத்தனை முக்கியம் என்பதை அறிவார்கள். அவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தால்கூட நகரம் உண்மையில் நொடிப் பொழுதில் நரகமாகிவிடும். ஆயினும் இந்த மக்களது பொருளாதார மற்றும் சுகாதார நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. இதனை ஐயா அவர்கள் நகராட்சி மன்றத்தில் அடிக்கடி நினைவுபடுத்தத்

துவற மாட்டார். அவர்களின் மேம்பாட்டுக்காகப் பரிந்து பேசுவார். இதன் பயனாக இவர்களுக்கு நகரின் பல இடங்களில் சுகாதார வசதிமிக்க வீடுகள் உருவாயின. தமிழ் நாட்டில் இது போன்ற வீடு கட்டும் திட்டம் உருவாவதற்கு மதுரை நகராட்சியே வழி காட்டியது என்னலாம்.

பொது இடங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஜாதிப் பெயர் சூட்டுதல் கூடாது என்ற கோட்பாடுடையவர் அவர் என்பதை முன்னர் குறிப்பிட்டோம். அதற்கிணங்க "சௌராஷ்டிரர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கம்" என்ற பெயரில் நிறுவப்பெற்ற அதனை "மாடல் பில்டிங் கூட்டுறவு சொசைட்டி" என்று மாற்றிப் பெயரிட்டார். அக் கூட்டுறவு சங்கம் ஜாதி மத பேதமின்றி மதுரையிலும் தல்லாகுளம், பசுமலை, திருப்பரங்குன்றம் போன்ற இடங்களிலும் மக்களுக்கு குறைந்த செலவில் வீடுகள் கட்டித் தந்தது. இச் சங்கத்துக்கும் அவரே நீண்ட காலம் தலைவராக இருந்து சேவை செய்தார். இதுபோல் மதுரை கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்துக்கு வெகு காலம் தலைவராக இருந்தார். 1935ஆம் ஆண்டில் ஐயா அவர்களின் முயற்சியால் நிறுவப்பெற்ற இந்நிறுவனம் வெளிநாட்டு நிதி உதவி பெற்று 1962ஆம் ஆண்டில் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களால் "ஆவின் பால்" என்று பெயரிடப்பெற்று மாபெரும் திட்டமாக உயர்ந்தது.

உள்ளாட்சித் துறை நமது சுதந்திரப் போராட்ட வரலாற்றில் ஒரு ஆரம்ப கட்டம். ஆங்காங்கு தலத்திலுள்ள மக்கள் தங்களுக்குத் தாங்களே தங்கள் பொது நிர்வாகத்தை நடத்தி அரசாளும் கலையில் பயிற்சி பெறும் நோக்கத்தோடு மக்கள் வசம் அது அளிக்கப்

பட்டது. இதனைக் கொண்டு தங்கள் நிர்வாகத்தை தாங்களே தேர்வு செய்துகொண்டு வரையறைக்குட் பட்ட சில பொறுப்புகளையும் கடமைகளையும் செய லாற்றிப் பயிற்சி பெறவேண்டும் என்பது இதன் நோக்கம். ஆயினும் ஆட்சியாளர்களின் மேலாதிக்கமும் தலையீடும் உள்ளாட்சி மன்றங்களை அவர்களின் கைப்பாவைகளாகச் செய்து கொண்டிருப்பதை ஐயா அவர்கள் போன்ற நேர்மையான தலைவர்கள் கடுமையாக எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. நகராட்சித் தலைவர் பொறுப்பை ஒரு அந்தஸ்த்துக்காகவோ அலங்காரத்துக் காகவோ அவரைப் போன்றவர்கள் ஏற்று வகிக்க முடி யாது. அதே சமயம் கைக்குக் கிடைத்த கருவியை உதாசீனமாக உதறிவிடவும் முடியாது. தலைவர் பதவியை நினைத்த மாத்திரத்திலேயே அவரால் உதறிவிட முடியும். பதவிப்பற்று அவருக்கு இருக்கவில்லை. ஆயினும் மக்கள் தம்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டும் என்ற சிரத்தை அவருக்குண்டு. கிடைத்த கருவியைக் கொண்டு, அதனைச் சேவைக்குரியதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற நாட்டம் அவருக்கிருந்தது. ஆகவே அவர் மேலாதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களுடன் நேருக்குநேர் போராடிக்கொண்டே தம்மால் இயன்ற அனைத்தையும் மதுரை நகர் மக்களுக்குத் தமது சேவையை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்.

உள்ளாட்சித் துறை பற்றி காந்தியடிகளின் கருத்து ஐயா அவர்களுக்கு உகந்ததாகும். உள்ளாட்சி அல்லது ஊராட்சி முழு அதிகாரப் பொறுப்பும் கடமையும் பெற்றதாக இருக்கவேண்டும். தங்கள் தலைவரைத் தேர்வு செய்யும் பொறுப்பு மாத்திரமல்ல, தங்கள் நகராட்சி மற்றும் ஊராட்சியை நிர்வாகம் செய்யும்

முழுப்பொறுப்பும் மக்களிடமே விடப்பட வேண்டும் என்பது காந்தியடிகளின் கோட்பாடு. ஒவ்வொரு ஊரும் ஒரு தன்மானமுள்ள சுதந்திரமான உள்ளாட்சி மன்றங்களாக இயங்க வேண்டும். இதனை காந்தியடிகள் பரவல் முறை நிர்வாகம் என்றும் பரவல் முறை ஆட்சி என்றும் விளக்கி வந்தார். நகராட்சித் தலைவராக நீண்ட, ஆழ்ந்த அனுபவம் பெற்ற ஐயா அவர்களுக்கு இக் கோட்பாட்டின் முக்கியத்துவம் மற்றவர்களைவிட நன்கு புரிந்திருந்தது. ஆகவே அவர், ஆளுநர் ஆர்தர்ஹோப் நேரடியாகவும் மறைமுகமாகவும் நகராட்சியை அச்சுறுத்திய போதெல்லாம் இக்கோட்பாட்டினை மனத்திற் கொண்டு அஞ்சாது எதிர்த்து நின்றார். நகராட்சி நிர்வாகத்தில் குறை கண்டுபிடித்து அவர் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுநருக்கு வாய்ப்பில்லை. ஆகவே அவரால் செய்ய முடிந்தது என்னவெனில், ஐயா அவர்கள் மேற்கொள்ளும் நல்ல திட்டங்களுடன் ஒத்துழைக்கும் பாவனையில்லாத அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்து மதுரைக்கு ஆணையாளர்களாக நியமித்ததாகும். இதனால் நேரிட்ட முட்டுக்கட்டுகளையும் சமாளித்த வண்ணம் ஐயா அவர்கள் ஆற்றிய சாதனைகள் அசகாய சூரத்தனமானவை.

1939இல் இரண்டாம் உலக மகாயுத்தம் தொடங்கிய பின்னர் உலகமெங்கும் நிலவியதைப்போல் பல நெருக்கடிகள் மதுரைக்கும் நேரிட்டதில் வியப்பில்லை. 1935இல் நகராட்சித் தலைவராகத் தேர்வு செய்யப்பெற்ற ஐயா அவர்கள் 1942இல் இந்திய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படும் வரை நீடித்த போதிலும் 1939ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலம் நகராட்சித் தலைவர் என்ற முறையில் அவருக்கு சோதனைகள் நிறைந்த காலமாகும். விலைவாசி ஏற்றத்தாலும் அத்தியாவசியப் பண்டங்களின்

பற்ருக்குறையாலும் வேலை வாய்ப்பின்மையாலும் பாதிக்கப்பட்டிருந்த மக்களுக்கு ஆளுநர் மாத்திரம் முறைப்படி ஒத்துழைத்திருந்தாரெனின் ஐயா அவர்கள் அற்புதங்கள் ஆற்றியிருக்க முடியும். இதற்கு மாருக, நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் ஆளுநர் பல முட்டுக் கட்டைகளைப் பரப்பிக் கொண்டிருந்தார். அவரோடு ஒத்துழைக்காத ஆணையாளர்களை நியமித்ததோடு அவர் நின்றுவிடவில்லை. நகராட்சிக்கு அளிக்க வேண்டிய மானியங்களை அவர் நிறுத்திவிட்டார். புதிய பல வரி களையும் ஆளுநர் சுமத்தினுர். சிலவரிகளை உயர்த்தினுர். ஏற்கனவே யுத்தத்தின் பயனுக பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகியிருந்த மக்கள் இதனுல் மிகவும் பாதிக்கப்பட்ட னர். இதற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் ஐயா அவர்கள் ஏற்கனவே நடைமுறையில் இருந்த சில வரி இனங்களை ரத்து செய்வதன் மூலம் தம்மாலியன்ற அளவு மக்களுக்குள்ள சுமையைக் குறைத்தார். இதனுல் நக ராட்சியின் வருமானம் பாதிக்கப்பட்டதாயினும் அதை அவர் பொருட்படுத்தவில்லை.

இந்நெருக்கடியான கட்டத்திலும் அவர் பல நல்ல செயல்திட்டங்களை நிறைவேற்றி வந்தார். நகரிலுள்ள வியாபாரிகளைக் கூட்டுவித்து விலைவாசிகளைக் கட்டுப்படுத் தவும் பதுக்கலைத் தவிர்க்கவும் அவர்களின் ஒத்துழைப்பைக் கோரினுர். நமக்கு நாமே சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொண்டு செயல்படுவதன் மூலம் சில பிரச்னைகளைச் சமா ளிக்க முடியும் என்பது அவரது நம்பிக்கை. அத்தியாவசி யப் பண்டங்கள் சீரான விலையில் விற்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க நகராட்சியின் அதிகாரிகளும் அதிகாரப் பற்றற்ற ஊர்ப் பிரமுகர்களும் அடங்கிய குழுக்கள் அமைத்தார். போர்க்காலப் பாதுகாப்புக்காக

மதுரை நகர் ஊர்ப் பாதுகாப்புச் சங்கம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கினுர். அதற்கு அவரே தலைவராக இருந்து செயல்பட்டார். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பர்மா, இலங்கை போன்ற நாடுகளிலிருந்து தாய்நாடு திரும்பிய அகதிகளில் பலர் மதுரையில் தங்கினர். அவர் களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்க நகராட்சியின் வசமுள்ள சலுகைகளை காலதாமதமின்றி வழங்க ஏற்பாடு செய்தார். அவர்களுக்கு இலவசமாக உணவளிக்கச் செய்தார். திருநகரில் அவர்களுக்கு குடி யிருப்பு வசதி அளிக்கப்பட்டது. அதற்கென ஒரு தனிக் குழு ஒன்றை நியமித்தார்.

நகராட்சித் தலைவர் என்ற முறையில் ஐயா அவர் கள் ஆற்றியுள்ள பணிகளையும் சாதனைகளையும் பட்டிய லிட்டு விபரமாகக் கூறுவது நமது நோக்கமல்ல. அவ்வாறு கூறப்புகின் அதுவே ஒரு பெரிய நூலாக விரிந்துவிடும். முந்திய அத்தியாயத்தில் அவரது சுதந்திரப் போராட்ட ஈடுபாட்டைப் பார்க்குமிடத்து அதற்கு மத்தியில் நகர சபைத் தலைவராகச் சாதிக்க அவருக்கு அவகாசம் எப்படிக் கிடைத்திருக்க முடியும் என்ற சந்தேக நிவர்த்தியை மனத்திற்கொண்டே ஒரு சிலவற்றை இங்கு வருணிக்கலாயிற்று. சுதந்திரப் போராட்ட வீரராகவும் நகரசபைத் தலைவராகவும், சமூக சீர்திருத்தக்காரராக வும், நிர்மாண ஊழியராகவும் கூட்டுறவு இயக்கத் தலைவராகவும் அவர் எவ்வாறு இடையருது செயல் பட்டார் என்ற வரலாறு பிந்திய தலைமுறையினருக்கும் நமக்கும் உதவும் என்ற கண்ணேக்கில் இந்நூல் எழுதப் படுகிறது. அந்த அளவில் மாத்திரமே சில செய்திகள் இவ்வத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன.

பகவத் கீதையில் ஒரு லட்சிய மனிதராகக் குறித்துக் கூறப்பட்ட இலக்கணங்களுக்கு ஏற்ப ஐயா அவர்கள்

நிலைத்த மதியுடைய மாமனிதராக விளங்கினார். இன்ப துன்பங்களை சமன்பட்ட உள்ளத்துடன் அனுபவித்தார். வெற்றி கண்டு அவர் பிரமிக்கவில்லை. தோல்வி கண்டு அவர் துவளவில்லை. உணர்ச்சி வசப்பட்டு அவர் ஆத்திரத்துக்கு ஆளாகவில்லை. அதே சமயம் அவர் பிறர் படும் துன்பம் கண்டு உள்ளம் உருகினார். அவர் தமது புலன்களை கர்மயோகமாகப் பணியாற்றுகையில் பயன் படுத்தினார். புலநுகர்ச்சிக்காக அவற்றைப் பயன்படுத்தக் கூசினார். எவரையும் அவர் ஒருபோதும் வெறுத்ததில்லை. அனைவரையும் அவர் அன்பு பாராட்டி நேசித்தார். ஆர்தர்ஹோப்பும்கூட அவருக்கு நண்பரே. அவரையும் அவரால் வெறுக்க முடியாது. இவையெல்லாவற்றுக்கும் அவருடைய குரு காந்தியடிகள். காந்தியடிகள் அத்தனை போராட்டங்களுக்கும் மத்தியில் எவ்வாறு கலங்காதிருந்தார்? அதன் ரகசியத்தை ஐயா அவர்கள் அறிவார். நாள் தோறும் அவர் காலை மாலைப் பிரார்த்தனை செய்தார். அதன்மூலம் தமது ஆற்றலை நாள்தோறும் புதுப்பித்து கொண்டார். தமக்குப் பிடித்தமான பிரார்த்தனைப் பாடல்களைக் கொண்ட புத்தகம் ஒன்று அவர் வெளியிட்டிருப்பதை வாசகர்கள் பார்த்திருக்கக் கூடும். அவர் பிற்காலத்தில் காந்தி நினைவு நிதித் தலைவராக இருந்த காலத்தில் பிரார்த்தனை பற்றி காந்தியடிகளின் கருத்துக் களைத் திரட்டி ஒரு அழகிய நூலாக வெளியிட்டார். அவை ராஜாஜியினால் தொகுத்தளிக்கப்பட்டவை.

இந்த விபரங்களை இவ்வத்தியாயத்தில் குறிப்பிடு வதற்குத் தக்க காரணம் உண்டு. இத்தனை போராட்டங் களுக்கு மத்தியில் ஒருவர் நிதானமாக திடபுத்தியுடன் மனத்தை அலட்டிக் கொள்ளாமல் நிறைய நிர்மாண காரியங்கள் ஆற்றமுடியும் என்பதற்கு ஐயா அவர்கள் எவ்

வாறு சிறந்த உதாரணமாகிறார் என்பதை விளக்க இது இங்கு தேவைப்படுகிறது. வினோபா அடிகள் தமது கீதைப் பேருரையில் வேகமாக சுற்றும் ஒரு சக்கரத்தை உதாரணமாகக் கூறியுள்ளதை சிலர்படித்து ரசித்திருக்கலாம். மிகவேகமாகச் சுற்றும் சக்கரம் சும்மா நிற்பதைப் போலத் தோன்றும். அரைகுறையாகத் தள்ளாடியவண்ணம் சுற்றுகிற சக்கரத்தின்சுழற்சி தெரிகிறது. ஆனால் வெகுவேகமாகச் சுழலும் சக்கரம் அது சுற்றுவது போலத் தோன்றுவதில்லை. அது போன்றது கர்மயோகியின் நிலை என்கிறார் வினோபா. ஐயா அவர்கள் இதற்குச் சாட்சி. அவர் வெகு வேகமாகச் செயலாற்றிக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் களைப்புற்றதில்லை, சலிப்புற்றதில்லை. அவர் கர்ம யோகி: இந்த அத்தியாயத்தையும் முந்திய அத்தியாயத்தையும் தனித் தனியே பாராமல் செய்திகளை இணைத்துப் பார்ப்போமானால் உண்மையான ஐயா அவர்கள் நமக்குக் காட்சி அளிப்பார். □

6. சட்டமன்ற பாராளுமன்ற அங்கத்தினர்

1937இல் நடைபெற்ற சென்னை மாகாண சட்ட சபைத் தேர்தலில் மதுரை தொகுதிக்குக் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக ஐயா அவர்கள் நிறுத்தப் பட்டார். அவரை எதிர்த்து நீதிக் கட்சி வேட்பாளர் ஒருவர் போட்டியிட்டார். அக்காலத்தில் வாக்காளர்கள் காங்கிரஸ் கட்சிக்கு மஞ்சள் நிறப் பெட்டியிலும் நீதிக் கட்சிக்கு பச்சை நிறப் பெட்டியிலும் வாக்குச் சீட்டுகளை இட வேண்டும். வாக்குப் பதிவு 1937 பிப்ரவரி மாதம் 19ஆம் நாள் நடைபெற்றது. அத்தேர்தலில் மஞ்சள் பெட்டிக்கு 14,670 வாக்குகளும் பச்சைப் பெட்டிக்கு 207 வாக்குகளும் கிடைத்தன. ஐயா அவர்கள் வெற்றி பெற்றார்.

அதனை அடுத்து 1946ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் காங்கிரஸ் வேட்பாளராக ஐயா அவர்கள் நிறுத்தப் பட்டார். இந்தமுறை கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ஒருவர் அவரை எதிர்த்துப் போட்டியிட்டார். இத் தேர்தலிலும் ஐயா அவர்கள் பெருவாரியான வாக்குகள் வித்தியா சத்தில் வெற்றி பெற்றார். ஐயா அவர்களுக்கு 33,570 வாக்குகளும் கம்யூனிஸ்ட் வேட்பாளருக்கு 5,526 வாக்கு களும் பதிவாகின.

சென்னை மாகாண சட்ட மன்றத்துக்கு இரு முறை மக்களின் பேராதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐயா அவர்கள் தமது தொகுதி மக்களுக்கும் தேசத் துக்கும் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் சிரத்தையுடன் சேவை செய்தார். அக்காலத்திலும் வேலைவாய்ப்பு இல்லாத பிரச்சினை இருந்து வந்தது.

இப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் உள்நாட்டு வசதிகளைக் கொண்டு திட்டமிட்டு நடைபெறும் சிறு தொழில்கள் மூலம்தான் சாத்தியம் என்ற காந்திய அணுகுமுறையை ஐயா அவர்கள் வலியுறுத்தி வந்தார். நகரங்களில் சிறு தொழில்களுக்கும் கிராமப் புறங்களில் கிராமத் தொழில்களுக்கும் ஊக்கமளிக்க வேண்டும் என்பது அவரது இடையறாத கோரிக்கை. தமக்குச் சட்டமன்றத்தில் உரையாற்ற வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவர் இதை நினைவு படுத்திக்கொண்டே இருந்தார். நமக்குத் தேவையானவற்றுக்கு அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதை விடுத்து உள் நாட்டுப் பண்டங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். பள்ளிகளிலும் வெளியிலும் இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்க வேண்டும் என்பது அவரது கோரிக்கை, சிறைச்சாலைகளிலும் கைதிகளுக்கு ஏதேனும் ஒரு தொழிலில் குறிப்பாக நூற்பு, நெசவு போன்றவற்றில் பயிற்சி அளித்தால் அவர்கள் விடுதலைக்குப்பின் அத் தொழில்களில் ஈடுபடுவதின் மூலம் திருந்திவாழ வாய்ப்புண்டு என்பதைச் சுட்டிக் காட்டினர்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரத்தொடங்கிற்று. அதற்கேற்ப தேவைகளும் பெருகிற்று. இதைச் சமாளிக்க வேண்டுமானல் பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டும். தொழில் வளத்தைப் பெருக்குவதன் மூலம்தான் இதைச் சமாளிக்க முடியும். நகர்ப்புறங்களில் மாத்திரமின்றி கிராமப் புறங்களிலும் தொழில்கள் உருவாக வேண்டும். புதிய தொழில்களைத் தொடங்குவோருக்கு அரசு ஊக்கமளிக்க

வேண்டும். அதற்கேற்ப அரசின் தொழிற் கொள்கை மாற்றியமைக்கப்பட வேண்டும். இத்துறையில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்குத்தொழில் ஆராய்ச்சிக் கழகம் ஒன்று நிறுவப்படவேண்டும் என்று ஐயா அவர்கள் சட்ட மன்றத்தில் கூறினார். அதனை அரசு ஏற்றுச் சென்னையில் தொழில் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவிற்று. அதன் பயனாக புதிய தொழில்கள் உருவாவதற்கேற்ற தொழிற்கொள்கை வகுக்கப்பட்டது. மதுரைப் பகுதியில் புதிய தொழில்கள் உருவாக ஐயா அவர்கள் காரணமாக இருந்தார்.

தொழிலில் முதலீடு செய்வோர் முன்வருவதைப் போல் தொழிலுறவும் கூடவே வளர்ந்தாலன்றி உற்பத்தித் திறன் அதிகரிக்க முடியாது: இதற்கு ஆதரவாகத் தொழிலாளர் நலனைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் ஐயா அவர்கள் சட்டமன்றத்தில் வலியுறுத்தினார். கைத்தறி நெசவாளர் நலனுக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஏராளம். மதுரையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் கைத்தறி நெசவாளர்கள் அதிகம். நமது நாட்டில் விவசாயத் தொழிலாளர்களை அடுத்து கைத்தறி நெசவாளர்கள் மக்கட் தொகையில் அதிகமாக இடம் பெறுகின்றனர். குவியல்முறை இயந்திரத் தொழில்களோடு போட்டியிட முடியாமல் கைத்தறித் தொழில் நசிந்துகொண்டு வருவதைத் தடுத்து அதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று ஐயா அவர்கள் குரல் எழுப்பினார். ஐயா அவர்கள் எழுப்பிய குரலுக்கு சட்ட மன்றத்தில் பெரும்பான்மையினர் ஆதரவு அளித்தனர். நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை அரசு ஊக்குவித்து சிறப்புச் சலுகைகள்

வழங்கும் திட்டங்கள் பல உருவாக ஐயா அவர்களின் முயற்சி காரணமாயிற்று. அதுவே பின்னர் அவர்கள் தனி இலாகாவும் அமைச்சகமும் உருவாக்க வழிகோலியது.

மதுரை மாவட்டத்தில் பல்வேறு புதிய நீர்ப் பாசனத் திட்டங்கள் உருவாக்கும் முயற்சியிலும் ஐயா அவர்களுக்கு பங்குண்டு. விவசாயக் கருவிகள்' உரம், மின்சாரம், போன்றவை விவசாயிகளுக்குச், சலுகை விலையில் அளிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத் தினார். விவசாய உற்பத்திப் பண்டங்களுக்கு தக்க விலை கிடைக்குமாறு கண்காணிக்க வேண்டியது அரசின் கடமை என்பதையும் தமக்கு வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அரசுக்கு உணர்த்தத் தவறவில்லை. அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை அரிஜன விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அரிஜன முன்னேற்றத் துக்காக அவர் மேற்கொண்ட பணிகளைக் குறித்து பின்னர்விரிவாகப் பார்ப்போம். விவசாயப் பண்டங்களின் விலையை நிர்ணயிக்கும்போது விவசாயிகளைக் கலந்தா லோசித்துச் செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத் தினார். அக்காலத்தில் காந்தியடிகளோடு வாழ்ந்து கிராமத் தொழில் வளர்ச்சியில் அக்கரை கொண்டிருந்த டாக்டர் குமரப்பா அவர்கள் அடிக்கடி மதுரை மாவட்டத்துக்கு வரும்போதெல்லாம் ஐயா அவர்களைச் சந்திக்கத் தவறமாட்டார். அவரது ஆலோசனைகள் ஐயா அவர்களுக்கு மிகவும் உடந்தையாக இருந்தன. விவசாய உற்பத்திப் பண்டங்களின் விலை நிர்ணயம் செய்யும்போது உழவு, விதை, உரம், விவசாயக் கூலி இன்னோரன்னவற்றை மாத்திரம் கணக்கிட்டு விலை

நிர்ணயம் செய்தால் போதாது என்றும் விவசாயம் காலம் பார்த்துச் செய்யும் தொழிலானபடியால், அக்காலம் வரும்வரை விவசாயிகள் காத்துக்கிடக்கும் காலத்தில் அவர்களின் வாழ்க்கைத் தேவைகளையும் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்றும் டாக்டர் குமரப்பா கூறிய கருத்தை ஐயா அவர்கள் ஏற்றுக்கொண்டார். இக்கருத்தை அரசின் கவனத்துக்கும் கொண்டு வந்தார். அக்காலத்தில் அரசுவிதித்த நெல்கொள்முதல் விலை அவருக்கு திருப்தி அளிக்கவில்லை. அதன் விலையை உயர்த்துவதற்கு தம்மாலான அனைத்தையும் செய்தார்.

நகரங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் வாடகை வீடுகளில் குடியிருப்பவர்களே. ஆயுள் முழுதும் வாடகை வீடுகளில் இருப்போர் உண்டு. இவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தர அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் அவர்களுக்கு வாடகைக் கட்டுப்பாடும் செய்ய வேண்டும் என்று ஐயா அவர்கள் அரசுக்கு எடுத்துரைத்தார். இதற்கென வடகைக் கட்டுப்பாடு சட்டம் இயற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். வாடகைக் கட்டுப்பாடு பற்றிய மசோதா சட்ட மன்றத்தில் தாக்கல் செய்வதற்கும் அவர் தூண்டு கோலாக இருந்தார். நில வாடகைக்குக் குடியிருப் பவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குமேல் அதில் வீடு கட்டிக் குடியிருப்பார்களாயின் அந்நிலம் அவர்களுக்குச் சொந்தமானதாக அறிவிக்கப்பட வேண்டும் என்ற சரத்து மசோதாவில் இடம் பெற்றிருப்பது குறித்து சட்ட மன்றத்தில் நீண்ட விவாதம் நடைபெற்றது. அந்த சரத்தை ஐயா அவர்கள் ஆதரித்துப் பேசினார். பின்னர் அந்த மசோதா சில திருத்தங்களுடன் நிறைவேறிச் சட்டமாயிற்று. இதன் பயனக் மதுரையில்

ஏராளமான நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்கள் பயன் பெற்றனர். குறிப்பாக அரிஜன மக்கள் பலர் சொந்த மாக வீடுகள் அமைத்துக் கொள்ள வாய்ப்பு பெற்றனர். அரிஜன மக்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை செயல்பட ஐயா அவர்கள் அதன் பின்னணியில் ஆதர்சம் அளித்துக் கொண்டிருந்தார்.

சுதந்திரம் பெற்ற பின்னரும் கிராம மக்களுக்குக் குறைந்த பட்சம் சுத்தமான குடிநீர் அளிக்க வேண்டும் என்ற குரலை துவக்க கால முதலே ஐயா அவர்கள் சட்டமன்றத்தில் எழுப்பிக்கொண்டிருந்தார். நகராட்சித் தலைவராகச் செயல்பட்ட அனுபவத்தைக் கொண்டு உணவுக்கு அடுத்து அத்தியாவசியத் தேவையான குடிநீர் வழங்கும் வழிமுறைகள் பற்றி அனுபவபூர்வமான அவரது ஆலோசனைகளை அரசு கூர்ந்து கேட்டுப் பயன்பெற்றது. ஊராட்சி மன்றங்கள் மூலமாகவும் நகராட்சி மன்றங்கள் மூலமாகவும் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்து குழாய் வழியாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இக்காலத்தில் பரவலாக வழங்கப்பட்டு வருவதற்கு ஐயா அவர்கள் போன்றவர்கள் முன்னோடிகளாவர். நகர்ப்புறங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள், பாதாள வடிகால் குழாய்கள் போன்ற திட்டங்கள் உருவாயின. இதற்கென குடிநீர் வடிகால் இலாகா ஒன்று அமைவதற்கு ஐயா அவர்களின் தூண்டுதல் ஒரு காரணமாகும்.

சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஐயா அவர்கள் தமது கடமைகளைத் தவறாது செய்து வந்தார். மக்களின் குறைகளைக் கேட்டு உடனடி நிவாரணம் தேடுவதற்கு உதவியாக அவரது வீட்டில் ஒரு காரியாலயம் செயல்பட்டு வந்தது. தமது தொகுதி

மக்களின் குறைகளைக் கேட்டறிய நேரம் ஒதுக்கினார். சட்ட மன்றக் கூட்டங்களில் அவர் தவறாது கலந்து கொண்டு ஆலோசனை கூறிவந்தார். கூட்டம் நடை பெறும்போது முழுமையாக ஆஜராயிருந்து நடவடிக் கைகளைக் கூர்ந்து கேட்ட ஒரு சிலருள் ஐயா அவர் களும் ஒருவர். சட்டமன்றத்தின் தரத்தைக் காப்பதில்அவர் கவனமாயிருந்தார். தமது நடவடிக் கைகளில் நேர்மை காத்தார். தமது பதவியை அவர் ஒருபோதும் தவறாகப் பயன் படுத்தியதில்லை சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களுக்கு நல்ல உதாரணமாக விளங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை மனத்திற் கொண்டு அதற்கிணங்க நடந்து காட்டியதோடு பிறர் தவறு செய்யும்போது அதைத் தடுத்தார். இதனால் சட்ட மன்றத்தில் அவருக்கும் அவரைப் போன்ற ஒரு சிலருக்கும் தனி மரியாதை இருந்து வந்தது. எவரும் தவறான காரியங்களுக்கு அவரைப் பயன்படுத்தக் கூசுவர். நியாயமான கோரிக்கைக்காக மாத்திரமே அவரை அணுக முடிந்தது. இதனால் பொதுமக்கள் அவரைப் பாராட்டி மதித்தனர்.

ஆயினும் நாளுக்கு நாள் சட்டமன்றத்தின் தரம் குன்றிவருவது கண்டு அவர் மனம் வருந்தினார். இப் பதவியைப் பலர் தமது சுயநலத்துக்காக வழிமுறை தவறிப் பயன்படுத்துவது அவரது மனத்தைப் புண்படுத் திற்று. இதன் காரணமாக சுதந்திரத்தின் அரசின் பயன்கள் விரைந்து மக்களை எட்டுவதற்குப் பதில் அது இடையிலுள்ள வசதி படைத்த ஒரு சிலர் நலனுக்கே பயன்படலாயிற்று. இதனைத் தடுக்க தம்மாலியன்ற அனைத்தையும் செய்து பார்த்தார். அதில் அவர் போதிய வெற்றி பெற்றார் என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில் சட்ட மன்றப் பொறுப்பிலிருந்து அவர் விலகிவிடவே

விரும்பினார். தமது சட்டமன்றப் பொறுப்புகளையும் கடமைகளையும் அவர் சரிவர நிறைவேற்றிக் கொண்டிருந்தாலும் சட்டமன்றத்தின் மூலம் மக்களுக்கு சேவை செய்யலாம் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் தளர்ந்து கொண்டிருந்தது.

இதன் விளைவாக 1952ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர் கலந்துகொள்ள மறுத்து விட்டார். காங்கிரஸ் தலைவர்களும் பொது மக்களும் அவரை விரும்பி கேட்டுக்கொண்ட போதிலும் தேர்தலில் கலந்து கொள்ள மறுத்ததோடு, தீவிர அரசியலிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்டு நிர்மாணப் பணிகளில் அதிக நாட்டம் செலுத்தலானார். அவ்வாறு அரசியலிலிருந்து விலகக் காரணம் என்ன என்று அயல் நாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவர் (மீரான் வெய்மர் என்பர்) கேட்ட போது, ஐயா அவர்கள்,

"இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் காங்கிரஸ் தலைவர்களிடமும் தொண்டர்களிடமும் தியாக மனப்பாங்கு அதிகமாகக் காணப்பட்டது. கட்சிக்குள் ஜாதி பேதம் இல்லாதிருந்தது. காந்தியடிகளின் நிர்மாணப் பணிகளில் அவர்கள் ஆர்வம் காட்டினார்கள். தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, கதர் கிராமத் தொழில் வளர்ச்சி போன்றவற்றில் ஈடுபாடு இருந்தது. தேசப் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு தியாகங்கள் பல செய்தனர். சுதந்திரம் கிடைத்தது. காந்தியடிகளும் மறைந்தார். அரசியலில் உள்ளவர்கள் பதவி ஆசைக்கு பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். ஜாதி மத பேதம் தலைவிரித்தாடுகிறது. இந்த பேதத்தை விரிவு படுத்துவதற்கு ஏதுவாக பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன. தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதில்

அரசியல் கட்சிகளே காரணமாகின்றன. இந்த சூழ் நிலையில் அரசியலுக்கு வெளியில் இருந்து கொண்டு செயலாற்றலாம் என்று எண்ணத்துடன் தீவிர அரசியலி லிருந்து விலகியிருக்கத் தீர்மானித்தேன்'' என்று மனம் நொந்து கூறியிருக்கிறார்.

ஆயினும் பொதுப் பணியிலிருந்து அவரால் விலகி யிருப்பதற்கில்லை. முன்னைவிடத் தீவிரமாக நிர்மாணப் பணிகளில் அவர் செயல்பட்டார். அது பற்றிய விபரங் கள் பிந்திய அத்தியாயங்களில் அளிக்கப்படுகின்றன. இந்நிலையில் பத்து ஆண்டுகளுக்குப்பின் 1962இல் நடை பெற்றபொதுத் தேர்தல் சமயம் ஒரு இக்கட்டான நிகழ்ச்சி குறுக்கிட்டது. மதுரை நாடாளுமன்றத் தொகுதியில் ஒரு பிரபல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் வேட்பாளராக நிற்பதால் அதனை எதிர்த்துச் சமாளிக்க ஐயா அவர்களைத் தவிர பொருத்தமான வேட்பாளர் இல்லை என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்த ஐயா அவர்கள் தேர்தலில் மீண்டும் கலந்துகொள்ள இசைவளிக்கவில்லை. காங்கிரஸ் பாராளுமன்ற தேர்தல் குழு அவருடைய பெயரை அறிவித்த போதும் அவர் வேட்பு மனு தாக்கல் செய்ய மறுத்துவிட்டார். காமராஜ் போன்ற தலைவர் களும் ஐயா அவர்களுக்கு உற்ற நண்பர் ஸ்ரீ அவிநாசி லிங்கம் செட்டியார் போன்றவர்களும் அவரை விரும்பிக் கேட்டுக்கொண்டபோதும் அவர் அதற்கிணங்கவில்லை. இறுதி முயற்சியாக தில்லியிலிருந்து பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டபோது அதை மறுக்க முடியாத நிலையில் கடைசி நிமிஷத்தில் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார். தேர்தலில் 17,000 வாக்குகள் வித்தியாசத்

நில் ஐயா அவர்கள் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் பத்தாண்டு கால இடைவெளிக்குப் பின்னர் அரசியல் பணியை மீண்டும் தொடர்ந்தார்.

1962 முதல் 1967 வரையிலான காலகட்டம் தேசத்துக்கு ஒரு சோதனை காலமாகும். வறட்சி காரணமாகவும் பாகிஸ்தான் படையெடுப்பு காரணமாகவும் மக்கள் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் பலஉருவாயின. இத்தருணத்தில் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஐயா அவர்கள் இரவு பகல் என்று பாராது இயங்க வேண்டியவரானார். தமிழ் நாட்டில் சேலத்தில் நிறுவப்பெற்ற பாக்ஸைட் தொழிற்சாலை காரைக்குடியில் நிறுவப்பெற்ற அறிவியல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகம், சேது சமுத்திரத்திட்டம், கன்னியாகுமரியை இணைக்கும் அகல ரயில்பாதை போன்ற கோரிக்கைகள் அமல்படுத்தப்பட்டதற்குப் பின்னணியில் ஐயா அவர்கள் இடையறாத முயற்சி இருந்தது. அவர் தமது சாதனைகளைக் கூறிப் பெருமை தேடிக்கொள்ளுகிறபாங்குடையவரல்லர் ஆகவே அடக்கத்தோடு ஆனால் ஆழ்ந்த சிரத்தையோடு தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் அவர் செயலாற்றிக் கொண்டிருந்தார். அப்போது அவரது உடல் நிலை திருப்தியாக இல்லை. ஆயினும் தாம் ஏற்றுக்கொண்ட வேலையைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும் என்பதில் அவர் தளரவில்லை.

1965ஆம் ஆண்டு பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுத்தபோது ஐயா அவர்கள் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது. தேசிய பாதுகாப்பு நிதிக்காக அவர் தொழிலதிபர்களையும் பொதுமக்களையும் நாள்தோறும் சந்தித்து நிதிதிரட்டினார். மதுரை காங்கிரஸ் குழு இதற்கென ஐயா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைத்தது. அக்

குழு மதுரையிலும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஏராளமான நிதி திரட்டி அளித்தது. தமிழ்நாட்டில் அதிகமாக நிதி திரட்டிய குழுக்களில் மதுரைக் குழுவும் ஒன்று. ஐயர் அவர்களின் மனைவியார் திருமதி பர்வத வர்த்தினி அம்மையார் தமது கணவருடன் சேர்ந்து இதற்கு உதவினுர். தாம் அணிந்திருந்த வைரக்கல் பதித்த தங்க நகைகள் அனைத்தையும் யுத்த நிதிக்கு அளித்ததோடு மதுரை நகரிலுள்ள பெண்களிடமிருந்து ஏராளமான தங்கம் திரட்டித் தந்தார்.

இதனை அடுத்து தமிழகத்தில் மும்மொழிக் கொள்கை காரணமாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஐயா அவர்கள் மனத்தை மிகவும் பாதித்தன. இந்தி மொழி ஆதிக்கமொழி ஆவதை அவர் விரும்பவில்லையாயினும், அதனைத் தேசிய ஒருமைப்பாட்டுக்கு உதவும் தொடர்பு மொழியாக நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவரது விருப்பம். வடநாட்டு மக்களோடு தொடர்பு கொள்ளுவதற்கு இந்தி அவசியம் என்பதை அனுபவ வாயிலாக அவர் அறிந்திருந்தார். ஆகவே அவர் இந்தி படித்து அதில் பேசவும் எழுதவும் கற்றுக்கொண்டார். பிறரையும் கற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

இந்நிலையில் தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டம் பல இடங்களில் பலாத்கார வடிவம் எடுத்தது. இந்திமொழி பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருக்கக்கூடாது என்று பலமுறை ஐயா அவர்கள் பாராளு மன்றத்தில் எச்சரித்திருக்கிறுர். அஞ்சல் அட்டை போன்றவற்றில் இந்தியுடன் பிராந்திய மொழி பெயர்ப் பும் இடம்பெற வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தி யிருக்கிறுர். அதே சமயம் தேசிய ஒருமைப்பாடு கருதி

அனைவரும் மும்மொழித் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து வந்தார்.

1965ஆம் ஆண்டு ஜனவரி 26 குடியரசு நாளன்று திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் அவர்களைச் சார்ந்த மாணவர்களும் இந்தி எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பிக் கொண்டு மதுரையின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாகச் சென்றனர். வழியில் எதிர்ப்பட்ட இந்தி எழுத்துக்களைக்கொண்ட பெயர்ப் பலகைகளையும் தபால் பெட்டிகளையும் உடைத்து நொறுக்கினர். சில வன்முறையாளர்கள் காங்கிரஸ் அலுவலகத்தைத் தாக்கி அதற்குத் தீயிட முயன்றனர். இச்செய்தியைக் கேள்வியுற்ற ஐயா அவர்கள் காங்கிரஸ் அலுவலகம் நோக்கி விரைந்தார். வெறி கொண்ட ஒரு கூட்டத்தை நோக்கிச் செல்லுவது ஆபத்து என்பதை அவர் பொருட்படுத்தவில்லை. காங்கிரஸ் அலுவலகத்தை அவர் நெருங்கியபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் அவரது காரைத் தடுத்து நிறுத்தினர். ஐயா அவர்கள் சிறிதும் அஞ்சாது அமைதியாகக் காரைவிட்டுக் கீழே இறங்கினார். ஆர்ப்பாட்டக்காரர்கள் அவர் அணிந்திருந்த கதர்ச் சட்டையைக் கிழித்தனர்.

இதைக் குறித்து பத்திரிகை நிருபர்கள் பின்னர் அவரை அணுகிக் கேட்டபோது, "மாணவர்கள் தாங்கள் இன்னது செய்வதென்று தெரியாமல் செய்கிறார்கள். அவர்களை நான் குறைகூற மாட்டேன். அரசியல்வாதிகள் அவர்களைத் தூண்டி உணர்ச்சியூட்டியதால் அவர்கள் வன்முறைக்குப் பலியாகயிருக்கிறார்கள். அரசியல் வாதிகள் அவர்களைத் தவறான வழியில் நடத்திச் செல்லுகிறார்கள். வருங்கால இந்தியா இளைஞர் சமுதாயத்தை நம்பி இருக்கிறது. அரசியல்

வாதிகள் அவர்களைச் சரியான வழியில் நடத்திச் செல்ல வேண்டும். சாதி, மத, இன பேதமற்ற சமுதாயத்தை அமைத்து தேச ஒருமைப்பாட்டை பலப்படுத்த அரசியல் கட்சிகள் வழி காட்ட வேண்டும் என்பது எனது வேண்டுகோள். எனக்கு நேர்ந்ததைக் குறித்து நான் பொருட்படுத்த விரும்பவில்லை. மாணவர்கள் பேரில் எனக்குக் கோபமும் இல்லை. வருங்கால சந்ததியை அரசியல் கட்சிகள் சரியான முறையில் வழிநடத்திச் செல்ல வேண்டும் என்பது எனது கோரிக்கை'' என்று அறிக்கை விடுத்தார்.

இதற்காக பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் கவலை தெரிவித்தனர். அரசு அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்க முன்வந்தபோது அதனை விட்டுவிடுமாறு ஐயா அவர்கள் கேட்டுக்கொண்டார். இது குறித்து மத்திய அரசு விபரம் கேட்டது. அப்போதும் இந்நிகழ்ச்சியைப் பெரிதுபடுத்தவேண்டாம் என்று கூறினார். இதனை அவர் தமக்கு நேர்ந்த அவமானமாகக் கருதவில்லை. மாறாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கே இது அவமானம் ஆயிற்று. காந்தி வழி செல்லும் ஐயா அவர்கள் இதனை பொது வாழ்க்கையில் சகஜமே என்று கருதினார். சூடும் குளிரும் தொண்டருக்கில்லை.

இரு முறை சட்டமன்ற அங்கத்தினராகவும், ஒரு முறை பாராளுமன்ற அங்கத்தினராகவும் பணி செய்த ஐயா அவர்கள் ஒரு லட்சிய அங்கத்தினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக விளங்கினார். அதுபோல் ஒரு அரசியல் கட்சித் தலைவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கும் உதாரணமாக விளங்கினார். கட்சிப் பிரசாரம் செய்தபோதும்

சரி, தேர்தல் பிரச்சாரம் செய்த போதும் சரி அவர் உண்மைக்குப் புறம்பாகப் பேசியதில்லை, தம் முடன் பிரசாரத்துக்கு வருவோர் எதையும் மிகைப் படுத்தியோ திரித்தோ கூறினுல் அவர்களைக் கடிந்து கொள்ளுவார். பலாத்காரமான சொற்கள் மறந்தும் அவரது நாவும் மனமும் வெளிப்படுத்தியதில்லை. அவர் எவர் பேரிலும் துவேஷம் பாராட்டியதில்லை. அதே சமயம் தமது கருத்துக்களை ஆணித்தரமாகக் கூறுவார். அவருடைய குரல் மென்மையாக இருக்கும். ஆனுல் சொற்களில் உறுதி தொனிக்கும். அதைவிட உள்ளத்தில் அன்பும் அஞ்சாமையும் கொலுவீற்றிருக்கும்.

சட்டமன்ற, பாராளுமன்ற அங்கத்தினர் என்ற தகுதியில் அவர் மக்களின் குறைகளைக் கேட்டு தம் மாலியன்ற அளவு அவற்றைத் தீர்க்கத்தவறியதில்லை. சட்டமன்றங்களில் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் அரசுக்குச் சிறந்த ஆலோசனைகள் வழங்கினுர். அதனுல் மக்கள் அவரை நேசித்தனர், பாராட்டினர். எதிர்க் கட்சியினர் மதித்தனர். ஆளும் கட்சியினர் அவர் கூறியதை ஆழ்ந்து கேட்டனர். அரசு அவரது ஆலோசனைகளைப் பரிசீலனை செய்யச் சித்தமாயிருந்தது. அப்பழுக்கற்ற ஒழுக்க சீலராகவும் தன்னலமற்ற அரசியல்வாதியாகவும் வாழ்ந்து வழிகாட்டிய ஐயா அவர்கள் பதவிகளையும் பொறுப்புக்களையும் மக்கள் சேவைக்குரிய கருவிகளாகப் பயன்படுத்தினுர்.

இன்றைய இளைய தலைமுறையினர் அரசியலில் அவரது வழிச்செல்லக் கடமைப் பட்டிருக்கிறுர்கள் என்பதற்கு ஐயா அவர்கள் இதன் மூலம் சுடர் விளக்காகப் பிரகாசிக்கிறுர். □

7. அரிஜன முன்னேற்றப் பணி

ஐயா அவர்கள் பிறப்பால் சௌராஷ்டிரர் என்று பொதுவாக மக்கள் கூறுவார்கள். ஆனால் சௌராஷ்டிர மக்களோ அவரை "அரிஜன்" என்று அழைப்பார்கள். அந்த அளவிற்கு ஐயா அவர்கள் அரிஜன மக்களோடு தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டார். "கடையருக்கும் கடைத்தேற்றம்" என்ற கோட்பாட்டைக் கொண்டது சர்வோதயம். சர்வோதயம் காந்தியடிகளின் இலட்சிய சமுதாயம், ஐயா அவர்கள் இயல்பால் இக்கண்ணோட்டம்உடையவராதலின் அவர்சமுதாயத்தில் கடை நிலையில் இருக்கும் அரிஜன மக்கள்பால் சென்றதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. சுதந்திரம் பெற்றபின்னர் காந்தியடிகளின் அறைகூவலை ஏற்று மத்திய மாநில அரசுகளின் முயற்சியால் இன்று ஓரளவு அரிஜன மக்கள் முன்னேறியிருக்கிறார்கள். சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் அவர்களுடைய நிலை எத்தனை பரிதாபமாக இருந்ததுஎன்பதை இன்றைய இளையசமுதாயம்அறியாது. அக்கால கட்டத்தில் ஐயா அவர்கள் அரிஜன முன்னேற்றப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அரிஜன மக்களை பொதுவாக தீண்டப்படாதவர்கள் என்று குறிப்பிடுவதுண்டு. அவர்களைத் தொட்டால்தீட்டு என்பது இன்றைய இளைஞர்களுக்குப் புரியாது. ஏனெனில் இன்று பள்ளிகளில், காரியாலயங்களில், கோவில்களில், திரைப்படக் கொட்டகைகளில், பேருந்துகளில் மற்றும் பொது நிலையங்கள் அனைத்திலும் அவர்களை தொட்டுப் பழகுகிறார்கள் மக்கள். சுதந்திரத்துக்கு முன்னர் அவர்கள் உண்மையிலேயே தீண்டத்தகாதவர்களாகவே இருந்தார்கள். மேல்ஜாதியினர் அவர்களைத் தொட்டுவிட்டால்

உடனே குளித்துவிட்டுத்தான் வீட்டுக்குள் செல்லு வார்கள். அவர்களை கோவிலுக்குள் நுழைய அனுமதிக்க மாட்டார்கள். பள்ளிகளில் அவர்களின் குழந்தைகளைச் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். அவ்வாறு சேர்த்துக் கொண்டாலும் அவர்களுக்குத் தனி இடம் ஒதுக்கித் தரப்படும். இவ்வாறு சமுதாய அந்தஸ்திலும் பொருளாதார நிலையிலும் தாழ்த்தப்பட்ட மக்களான அரிஜனங்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்துக் கொண்ட ஒரு சிலருள் ஐயா அவர்கள் குறிப்பிடத் தக்கவர்.

காங்கிரஸ் மேற்கொள்ள வேண்டும் என்று காந்தி யடிகள் அளித்த நிர்மாணத் திட்டங்களில் ஒன்று அரிஜன முன்னேற்றப் பணி. மதுரையில் இதில் தீவிர அக்கறை காட்டியவர்கள் இரு பெரியார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ வைத்தியநாதய்யர். மற்றவர் ஐயா அவர்கள். இத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு காந்தியடிகள் கேட்டுக் கொண்டவுடனே இவ்விருவரும் அதனை ஏற்றுச் செயல் படத் தொடங்கிவிட்டனர். அதனையடுத்து 1932ல் காந்தியடிகள் அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தை தோற்றுவித்தபோது, தமிழ்நாடு சங்கத்துக்கு ஸ்ரீ வைத்தியநாதய்யர் பொறுப்பேற்றார். மதுரை மாவட்டத்துக்கு ஐயா அவர்கள் பொறுப்பேற்றார். இவ்விரு பெரியார்களும் தமிழ்நாட்டில் இத்துறையில் ஒரு சரித்திரமே படைத்துவிட்டார்கள்.

அரிஜன மக்கள் சமுதாய, பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமானால் அவர்களுக்கு முதலாவது விழிப் புணர்வு ஏற்பட வேண்டும். இதற்குக் கருவி கல்வி. ஆகவே ஐயா அவர்களுக்குக் கல்வி பெறும் வாய்ப்பளிக்க விரும்பினார். அக்காலத்தில் அவர்களைப் பள்ளியில்

சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவ்வாறு சேர்த்துக் கொள்ள முன் வந்தாலும் அரிஜனப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப மாட்டார்கள். அரிஜனங்களுக்குப் படிப்பு எதற்கு என்று அவர்களே ஒப்புக் கொண்டு விடுவார்கள். தங்கள் குழந்தைகள் படித்தால் தங்கள் குலதெய்வத்துக்கு ஆகாது என்றும் அவர்களில் பலர் எண்ணினார்கள். அத்தனை பாமரத்தனம் அவர்களைப்பற்றிக் கொண்டிருந்தது. இந்நிலையில் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புமாறு அவர்களைத் துண்டுவதே ஒரு பிரச்னையாக இருந்தது.

அரிஜனக் குழந்தைகள் படிப்பதற்கு ஒரு இடம் அமைப்பதில் ஐயா அவர்கள் ஈடுபட்டார். மேல்ஜாதி மக்கள் வாழும் பகுதிகளில் பள்ளி அமைக்க அனுமதி கிடைக்காது. அவ்வாறு அமைத்தாலும் அரிஜனக் குழந்தைகள் துணிந்து அங்கு வரவும் மாட்டார்கள். ஆகவே வைகை ஆற்றின் வடகரையில் கைவிடப்பட்டுக் கிடந்த ஒரு மண்டபத்தை ஐயா அவர்கள் தேர்வு செய்தார். ஆற்றுக்கு வடக்கே அக்காலத்தில் வீடுகள் கிடையாது. மக்கள் நடமாட்டமும் அதிகமிராது. அரிஜன மக்கள் நகருக்குள் குடியிருப்பு வசதி கிடைக்காததால் அங்கு குடிசைகளில் வசித்து வந்தார்கள். அதனருகே அந்த மண்டபம் அமைந்தது நல்லதாயிற்று. அம்மண்டபத்தில் நிர்மாணத் திட்டத்தில் ஈடுபாடுடைய சில தொண்டர்களின் உதவி கொண்டு ஐயா அவர்கள் பள்ளியை நடத்த ஏற்பாடு செய்தார்.

பள்ளியை அமைத்துவிட்டால் மாத்திரம் போதுமா? பிள்ளைகள் வரவேண்டுமே. இதற்காக அவர் அரிஜனங்கள் வாழுகிற சேரி சேரியாகப்போக வேண்டியிருந்தது. குழந்தைகள் படிக்க வேண்டியதன் அவசியத்தை அவர்

களுக்கு விளக்கிக் கூற வேண்டியிருந்தது. இவ்வாறு நாள்தோறும் சென்று திரும்பத் திரும்பக் கூறி மன்றாடிய பின்னர் சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பச் சம்மதித்தார்கள். அக்குழந்தைகளை வைகை ஆற்றில் குளிக்கச் செய்து, அவர்களுக்கு கதர் ஆடை அணிவித்து மண்டபத்திலுள்ள பள்ளியில் கல்வி கற்றுத் தரும் பணி தொடங்கிற்று. குழந்தைகளுக்கு அங்கேயே மதிய உணவு அளிக்கப்பட்டது. அக்குழந்தைகளுக்குத் தேவையான உணவு, உடை, புத்தகம், சிலேட்டு போன்றவற்றுக்கு ஐயா அவர்கள் தமது சொந்த செலவிலேயே ஏற்பாடு செய்தார். தமிழ்நாடு அரிஜன சேவா சங்கம் உருவான பின்னர் ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கும் பொறுப்பை அது ஏற்றுக்கொண்டது.

குழந்தைகளுக்குக் கல்வி போதித்தால் மாத்திரம் போதாது. அவர்களுடைய பெற்றோர்களுக்கும் கல்வி அளிக்க வேண்டிய அவசியத்தை அனுபவத்தில் ஐயா அவர்கள் கண்டறிந்தார். பள்ளியிலிருந்து சுத்தமாக வீடு திரும்பும் குழந்தைகள் மறுநாள் பள்ளிக்குத் திரும்பும்போது மீண்டும் அழுக்கில் தோய்ந்து வந்தனர், காரணம் பெற்றோர்கள் வசிக்கும் சுற்றுச் சூழ்நிலை அவ்வாறு இருந்தது. அதைவிடப் பரிதாபம் என்னவென்னில் அவ்வாறு இருப்பதுகுறித்து அவர்களில் யாரும் கவலைப்படாதிருந்ததாகும். ஆகவே குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதைப் போல் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வு அளிக்க வேண்டியதன் அவசியத்தை ஐயா அவர்கள் உணர்ந்தார்.

ஆகவே அன்று முதல் இரவு நேரங்களில் நிர்மாண ஊழியர்கள் சிலருடன் சேரிகளுக்குச் சென்று அரிக்கேன் லாந்தர் வெளிச்சத்தில் அச்சேரியிலுள்ள பெற்றோர்களை

கூட்டுவித்து வீட்டையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதன் அவசியத்தையும், அத்துடன் நாட்டு நடப்பையும் விளக்கிக்கூற ஏற்பாடு செய்யப் பட்டது. பெற்றோர்களில் பெரும்பாலோர் நகரசுத்தித் தொழிலாளர்கள். அவர்கள் நகரமக்களின் சுகாதாரத் துக்குப் பொறுப்பாளிகள். ஆனால் தங்கள் சொந்த சுகாதாரம் இன்னதென அறியாதிருந்தார்கள். இதற்குக் காரணம் அவர்களின் வறுமையைவிட அறியாமை என்பதை ஐயா அவர்கள் அனுபவத்தில் கண்டு அவர் களிடம் மண்டிக்கிடக்கும் வறுமையோடு அறியாமை யையும் போக்கசெயல்திட்டங்கள் வகுத்தார். அப்போது அவர் நகராட்சித் தலைவராக இருக்கவில்லை என்பதை மனதிற் கொண்டு இதனைப் பார்க்க வேண்டும்.

சேரிகளைச் சுத்தமாக வைத்திருக்குமாறு வாய்மொழி யாகச் சொன்னால் மாத்திரம் போதாது என்று அறிந்து தாமும் காங்கிரஸ் தொண்டர்களும் வாரம் ஒருமுறை அங்கு சென்று துப்புரவுப்பணி செய்யும் திட்டத்தை ஐயா அவர்கள் செயலாற்றத் தொடங்கினார். நாளாவட்டத் தில் குடிசைவாழ் மக்களும் தொண்டர்களோடு சேர்ந்து செயல்பட்டனர். படிப்படியாக தங்கள் சேரிகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து தங்கள் குழந்தைகள் புழுதியிலும் சாக்கடை நீரிலும் புரளும் போது அதைக் கண்டிக்கும் எண்ணமும் தோன்றிற்று. இவ்வாறு குழந்தைகள் முன்னைவிட இப்பொழுது சுத்த மாக பள்ளிக்கு வரத்தலைப்பட்டனர். இந்நிலை ஓரிரு வாரங்களில் வந்துவிட்டதாகக் கருதவேண்டாம். இதற் குப் பல மாதங்கள், பல ஆண்டுகளும்கூட தொடர்ந்து ஐயா அவர்களும் அவரது தொண்டர்களும் கண்காணிக் கவும் கல்வியளிக்கவும் வேண்டியிருந்தது.

ஐயா அவர்களும் தொண்டர்களும் ஆற்றி வந்த இப்பணி நாளுக்கு நாள் விரிவாக்கம் பெற்றது. உண்மை உணர்வுடன் செய்யும் பணிகளுக்கு தெய்வம் முன்வந்து உதவும் என்பது வள்ளுவர் வாக்கு. ஐயா அவர்களின் அரிஜன முன்னேற்றப் பணிக்கு காங்கிரஸ்காரர்களின் ஆதரவு பெருகிற்று. நல்ல மனம் படைத்த பிரமுகர்கள் பலர் இதற்குப் பொருளுதவி செய்ய முன்வந்தனர். தக்க சமயத்தில் நிறுவப் பெற்ற தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ வைத்தியநாதய்யர், ஐயா அவர்களின் சேவைக்கு உறுதுணையாக இருந்தார். ஆற்றங் கரையிலிருந்த பள்ளியை விரிவாக்கம் செய்ய அவர் முன்வந்தார். அரிஜன சேவா சங்கத்தின் மூலமாகக் கிடைத்ததுபோக பற்றுக் குறைக்குத் தம் சொந்த நிதியிலிருந்தும் அவர் ஆதரவளித்தார். அத்துடன் காங்கிரஸ் தொண்டர்கள் தெருத் தெருவாக மதுரையில் அரிஜன நிதி வசூலித்தனர். கடைத் தெருக்களில் பண்டங்களாகவும் சேகரித்தனர் உணவுப் பண்டங்களும், துணிகளும் மற்றும் பள்ளிக்குத் தேவையான உபகரணங்களும் வந்து குவிந்தன.

பள்ளிக்கு குழந்தைகளின் வருகை அதிகரித்ததால் அதனைப் பொருத்தமான வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் இப்பள்ளிக்கு எவரும் இடம் கொடுத்துதவத் துணியவில்லை. இத் தருணத்தில் தெய்வானுகூலமாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. 1935ஆம் ஆண்டு நடைபெற்ற நகராட்சித் தேர்தல் பற்றியும் அதில் ஐயா அவர்கள் ஏகமனதாக நகராட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் என்றும் முன்னர் பார்த்தோம். ஐயா அவர்கள் விருப்பத்தின் பேரில் நகராட்சி மன்றத்தில் ஒரு அரிஜன

அங்கத்தினர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். இந்த நல்ல சம்பிரதாயம் பின்னர் அனைத்து நகராட்சி மன்றங்களிலும் ஒரு அரிஜன அங்கத்தினர் நியமிக்கப்பட வேண்டும் என்று சட்டரீதியான விதி வகுக்கப்பட்டது.

அரிஜனப் பள்ளிக்கு வாடகைக்குக்கூட இடம் கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருந்த நிலை மாறி அதற்குச் சொந்தமான ஒரு கட்டிடம் கட்டுவதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. கட்டிடச்செலவிற்கு நன்கொடை மூலம் நிதி வசூலிக்கப்பட்டது. ஐயா அவர்கள் தமது நன்கொடையாக ரூபாய் 16,000 வழங்கினர். வைகை ஆற்றின் வடகரையை அடுத்துள்ள மதிச்சியம் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான நிலம் அதற்கென வழங்கப்பட்டது. அப்போது சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ராஜாஜி அவர்கள் அக்கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டினர். அதனைத் தொடர்ந்து சுமார் நூறு மாணவர்கள் தங்கிப் படிக்கும் வசதிகள் கொண்ட கட்டிடம் அங்கு உருவாயிற்று. ஐயா அவர்கள் அதற்கு "சேவாலயம்" என்று பெயரிட்டார். "சேவாலயம்" தமிழகத்தில் அரிஜன மாணவர்களுக்கு என்று கட்டப்பட்ட முதலாவது மாணவ விடுதியாகும். வைகை மண்டபத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சேவாலயத்தில் குடிபுகுந்தனர். இன்று சேவாலயம் மேலும் பெரிதாக உருவாகி அங்கு மாணவர்கள் தங்கி நகரிலுள்ள பல்வேறு பள்ளிகளுக்குப் போய் படித்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து சேவாலயம் போன்ற மாணவர் விடுதிகளும் பள்ளிகளும் மதுரை மாவட்டத்திலுள்ள முக்கிய ஊர்களில் எல்லாம் நிறுவப்பட வேண்டும் என்று ஐயா அவர்கள் விரும்பினர். மதுரை மாவட்ட அரிஜன சேவா சங்கத்தின் தலைவர் என்ற முறையில் இந்த நல்ல

பணி மாவட்டம் முழுதும் விரிவாக்கம் பெற வேண்டும் என்று விரும்பியது இயல்பே. இந்த நல்ல விருப்பம் விரைவில் செயல்படத் தொடங்கிற்று. ஆங்காங்கு உள்ள நல்லவர்கள் துணைகொண்டு நன்கொடை மூலம் நிதி சேகரிக்கப்பட்டு மாணவர் விடுதிகளும் பள்ளிகளும் உருவாயின. அவற்றுள் தல்லாகுளம் ஆசிரம ஆரம்பப் பள்ளி, கருப்பாயூரணி அப்பர் உயர் தொடக்கப்பள்ளி, கோகிலாபுரம் சுப்பராமன் உயர்நிலைப் பள்ளி, திண்டுக்கல் பாரதி மாணவர் விடுதி, மேலூர் காந்தி மாணவர் விடுதி, மேலூர் கஸ்தூர்பா மாணவியர் விடுதி, வத்தலக்குண்டு மகாதேவ தேசாய் மாணவர் விடுதி, நிலக்கோட்டை காந்தி மாணவர் விடுதி, கம்பம் விவேகாநந்தர் மாணவர் விடுதி, மதுரை மீனாட்சி மாணவியர் விடுதி போன்ற நிறுவனங்களைக் கூறலாம்.

கல்விப் பணிக்காக ஐயா அவர்கள் தமது நிதியை இல்லையென்னாது கொடுத்தவண்ணமிருந்தார். மதுரையிலும் மதுரை மாவட்டத்திலும் அரிஜனங்களுக்காகவும் பின்தங்கிய பிரிவினர்களுக்காகவும் உருவாகும் கல்வி நிலையங்கள் பலவற்றுக்கு நன்கொடை வழங்குவது அவருக்கு மகிழ்ச்சி தருவதாகும். அரிஜன மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட விடுதிகள் செம்மையாகவும் பக்திபூர்வமாகவும் நிர்வகிக்கப்பட வேண்டும்என்பதிலும் அவர் அக்கறை காட்டினார். விடுதி காப்பாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்தார். அன்றாட வேலைகள் முறையாக நடைபெற தினசரி ஒழுங்குகள் அனுசரிக்கப்பட்டன. பிரார்த்தனை, சுற்றுப்புறத் துப்புரவு, உடலுழைப்பு, தியானம், ஆசனம் போன்றவை நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தன. முக்கியமான தேசிய விழாக்களும், கலை விழாக்களும் இவ்விடுதிகளில்

கொண்டாடப்பட்டன. ஒவ்வொரு விடுதியும் ஒரு காந்தி ஆசிரமம் போலவே நடைபெற வேண்டும் என்று ஐயா அவர்கள் விரும்பினார். வெளி மாநிலங்களிலிருந்து வந்த பல தலைவர்கள் இவ்விடுதிகள் நடைபெறும் ஒழுங்குகளையும், அவை கண்காணிக்கப்படுகிற பாங்கை யும் பார்த்துப் பாராட்டியுள்ளனர்.

அரிஜனங்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் நகரசுத்தித் தொழிலாளர்கள் அவர்களையும் விடத்தாழ்த்தப்பட்டவர்கள் என்னலாம். ஐயா அவர் கள் நகராட்சித் தலைவராக இருந்த காலத்தில் அவர்க ளோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத் தது. அவர்களின் பரிதாப நிலை குறித்து அவர் மிகவும் வருந்தினார். அவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகக் குறைவு. அதையும் அவர்கள் மது அருந்துவதில் விரயப் படுத்தி வந்தனர். அதிக வட்டிக்குக் கடன் வாங்கக் கூசமாட்டார்கள். சம்பளம் வாங்கும் நாளன்று வட்டிக்குக் கொடுத்தவர்கள் அங்கு காத்திருந்து கடனும் வட்டியுமாக வசூல் செய்துவிடுவார்கள். அநேகமாக அன்று இவர்கள் கைகளில் ஏதும் மிஞ்சியிராது. ஆகவே மீண்டும் வட்டிக்குக் கடன் வாங்கத் தொடங்குவார்கள். இவ்வாறு அவர்கள் வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்து வதற்குத் தங்கள் ஊதியத்தில் பாதிக்குமேல்பறிகொடுத்து விடுவார்கள்.

இந்நிலையைக் கண்ட ஐயா அவர்களுடைய ஊதியத் தைப் பணமாக அளிக்காமல் அத்தியாவசியத் தேவைகளான உணவு உடை போன்ற பண்டங்களாக விநியோகிக்க ஏற்பாடு செய்தார். இதற்கெனத் தனி யான பண்டகசாலை திறக்கப்பட்டது. தரமான பண்டங் கள் சலுகை விலையில் அவர்களுக்கு விநியோகம் செய்யப்

பட்டன. வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் மது அருந்துவதும் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவதும் கட்டுப்படுத்தப் பட்டன.

துப்புரவுத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தரும் திட்டம் உருவாயிற்று. இதுபோன்ற திட்டம் அக் காலத்தில் மதுரை நகராட்சியில்தான் முதலாவது தொடங்கப்பெற்றது என்னலாம். அப்போது அதற்கென்று ஒரு லட்சம் ரூபாய் நகராட்சி ஒதுக்கிற்று. 1938இல் அதனைக்கொண்டு 400 வீடுகள் கட்டப்பட்டு அவற்றில் துப்புரவுத் தொழிலாளர்கள் குடியமர்த்தப்பெற்றனர். அதனையடுத்து ஒவ்வொரு ஆண்டும் நகரத்தின் பல்வேறு பகுதிகளில் அவர்களுக்கு குடியிருப்பு மனைகள் கட்டித் தரப்பட்டன. அப்பகுதிகளில் இரவு நேரங்களில் முதியோர் கல்வி மையங்களும் இயங்குவதற்கு ஐயா அவர்கள் ஏற்பாடு செய்தார். பொதுப் பணியில் ஆர்வமுள்ள கல்லூரி மாணவர்கள் மற்றும் படித்த இளைஞர்களின் சேவையை அவர் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தினார். அக்குடியிருப்புகளில் பன்றிகள் வளர்க்கக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டது. குடியிருப்புப் பகுதிகள் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிக்கவும் ஏற்பாடு உண்டு. ஐயா அவர்களே அவ்வப்போது குடியிருப்புகளுக்கு நேரில் சென்றுபார்த்து அவர்களோடு அளவளாவிக் கலந்துரையாடுவார். இதில் அவருக்கு ஆன்ம திருப்தியும் மகிழ்ச்சியும் இருந்தன.

துப்புரவுத் தொழிலாளர்களின் மேம்பாட்டை சிறப்பாகக் கவனிப்பதற்கு, ''ஸ்காவெஞ்சர் சேவா சங்கம்'' என்ற பெயரில் ஒரு தனி நிறுவனத்தை உருவாக்கி அவரே அதன் தலைவராக இருந்து பல சீர்திருத்தங்களைச்

செய்தார். முதலாவது அவர்களின் ஊதிய விகிதத்தை மாற்றி அமைத்தார். தீபாவளிக் காலத்தில் நகராட்சி நிதியிலிருந்து இலவசமாக புத்தாடை வழங்கும் வழக்கத்தை தொடங்கினர். கூடைகளில் மலத்தைத் தூக்கிச் செல்லும் அமைப்பை மாற்றி தள்ளு வண்டிகள் மூலம் கடத்த ஏற்பாடு செய்தார். துப்புரவுக் கருவிகள் நவீனமாக்கப்பட்டது. குப்பைகள் லாரிகள் மூலம் நகருக்கு அப்பால் கடத்தப்பட்டதோடு, அவை ''கம்போஸ்டு'' முறையில் கலப்புரமாக ஆயிற்று. இவை இக்காலத்தில் புதியவை அல்ல. ஆனல் அக்காலத்தில் மிகப் புதிய உத்திகள். துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பதற்கென ஒரு பள்ளி நிறுவப்பட்டது. அவர்களுக்குத் தங்கும் வசதி, உணவு, உடை, மற்றும் பாடப்புத்தகங்கள் ஆகிய அனைத்துச் செலவுகளையும் நகராட்சியே ஏற்றுக் கொண்டது. பிற்காலத்தில் இதுபோன்ற திட்டங்கள் தமிழகமெங்கும் செயல்பட முன்னேடித் திட்டங்களாக இவை விளங்கின என்றல் அது மிகையாகாது.

இதுபோல் அரிஜனங்களின் ஆலயப் பிரவேசம் தமிழகத்தில் முதன் முதலாக மதுரையில்தான் நடைபெற்றது என்பது சரித்திரப் பிரசித்தம். இதற்குரிய பின்புலத்தை உருவாக்குவதற்காக மதுரை வைத்திய நாதய்யரும் ஐயா அவர்களும் தெருத்தெருவாகத் தீவிர தீண்டாமை விலக்குப் பிரசாரத்தை மேற்கொண்டனர். வேதங்களிலிருந்தும் இதர புனித நூல்களிலிருந்தும் மேற்கோள்க்ள் எடுத்துக்காட்டி இந்து மதத்தில் தீண்டாமைக்கு இடமே இல்லை என்பதை மக்களிடையே தெளிவு படுத்தினர். இதற்கு ஆதரவாக காந்தியடிகள் பல இந்து மதத் தலைவர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தை

கள் உதவியாக அமைந்தன. மேலும் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ராஜாஜியின் ஆதரவு இருந்தது. 1939ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மதுரையில் ஆலயப்பிரவேச மாநாடு நடைபெற்றது. அதற்கு அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தின் துணைத் தலைவராக இருந்த திருமதி ராமேஸ்வரி நேரு தலைமை தாங்கினார். அதனையடுத்து ஜூலை மாதம் 8ஆம் தேதி மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தில் அரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்தனர். அக்கோவில் உருவான காலமுதல் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த அரிஜன மக்கள் ஆலய தரிசனம் செய்தது புரட்சிகரமானதாகும். இக்காலத்தில் அந்நிகழ்ச்சி சாதாரணமானதாகத் தோன்றலாம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக சமுதாயத்தை மூடிக்கொண்டிருந்த ஒரு மூடநம்பிக்கையை அகற்றுவதென்பது அக்காலத்தில் ஒரு அரிய செயலாகும். சனாதனிகள் என்று தங்களைத் தவறாகக் கருதி வந்த மக்கள் அக்காலத்தில் அதனை எதிர்த்துப் போரிட்டனர். அரிஜனங்கள் ஆலயத்துக்குள் பிரவேசித்தால், மீனாட்சி அம்மன் கோவிலை விட்டு வெளியேறி தனியார் இடம் ஒன்றில் குடிபுகுந்திருப்பதாக பரப்பப்பட்ட வதந்தியை நம்பி சனாதனிகள் பலர் ஆலயத்துக்கு வராமல் இருந்தனர். இத்தனை இடையூறுகளுக்கு மத்தியில் நடைபெற்ற ஆலயப்பிரவேசம் இந்துமதத்தில் பெரியதொரு புரட்சியாகும். இன்று நமது சமயக்குருமார்களும், இந்துமதபீடாதிபதிகளும் மடங்களின் தலைவர்களும் ''தீண்டாமைக்கு இந்து மதத்தில் அனுமதி இல்லை'' என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அக்காலத்தில் மதுரை வைத்திய நாதய்யர், ஐயா அவர்கள் போன்றவர்கள் ஆற்றிய அரிஜன சேவையின் பிரதிபலிப்பாகும்.

ஐயா அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் ஆலயப்பிரவேசம் சட்ட அனுமதி பெறவேண்டும் என்று திரும்பத் திரும்ப அரசுக்கு ஆலோசனை கூறிக் கொண்டிருந்தார். அது மாத்திரமல்ல, ஆலயங்களின் தர்மகர்த்தாக் குழுவில் அரிஜனப் பிரதிநிதி ஒருவர் இடம்பெற வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தி வந்தார். இந்த ஆலோசனைகள் பின்னர் சட்டமாக நிறைவேறின. அதற்கு முன்னரே மதுரை நகரில் உள்ள ஆலயங்களில் அரிஜனங்களை அனுமதிக்காதவற்றுக்கு நகராட்சி எவ்விதச் சலுகையும் அளிப்பதைத் தடை செய்திருந்தார். அந்த சமயத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆலயப் பிரவேச சட்டம் இயற்றப் பெற்றது. அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலும் அது சட்டமாயிற்று. மதுரை மாவட்டத்தில் ஐயா அவர்கள் ஆற்றிய அரிஜன முன்னேற்றப் பணிகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும். சமுதாயத்தில் நலிந்த பிரிவைச் சேர்ந்த அரிஜன மக்களும் இந்த நாடும் அவருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

நலிந்த பிரிவைச் சேர்ந்த நரிக்குறவர்களுக்காகவும் ஐயா அவர்கள் சேவை செய்திருக்கிறார் என்ற விபரம் சிலரே அறிவர். நரிக்குறவர்கள் நாடோடிகள். ஓரிடத்தில் தங்கி வாழ விரும்பாதவர்கள். அவர்களுக்கென்று நிலபுலன்களோ வீடுகளோ இராது. அவர்களை ஓரிடத்தில் குடியமர்த்துவது கடினம். இக்கடினமான செயலை ஐயா அவர்கள் ஆற்றினார். மதுரைக்கு அருகிலுள்ள ஒரு கிராமப் பகுதியில் அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுத்ததோடு வேலைவாய்ப்புக்கும் ஏற்பாடு செய்து சுமார் நூறு நரிக்குறவர் குடும்பங்களைக் குடியேற்றி வைத்த பெருமை ஐயா அவர்களுக்கு உண்டு.

நரிக்குறவர் குழந்தைகளை அரிஜன மாணவர் விடுதிகளில் சேர்த்து அவர்களின் கல்விக்கும் உதவினார். அவ்வாறு கல்விபெற்ற ஞானசுந்தரி என்ற பெண் இன்று தமது கணவர் ரகுபதியுடன் சென்னையில் நரிக்குறவர் குழந்தைகளுக்கென விடுதி வசதிகளோடு கூடிய பள்ளி நடத்தி வருகிறார்.

நரிக்குறவர் மேம்பாட்டுப் பணியைப்போல் மலைகளில் வாழும் ஆதிவாசிகளின் குழந்தைகளின் கல்விக்காகவும் ஐயா அவர்கள் சேவை செய்திருக்கிறார். கொடைக்கானல் மற்றும் தாண்டிக்குடி மலைப்பகுதிகளில் வாழும் ஆதிவாசிகளின் குழந்தைகளைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களை மதுரை சேவாலயம் விடுதியிலும் மற்றும் அந்த மாவட்டத்திலுள்ள இதர அரிஜன மாணவர்கள் விடுதியிலும் சேர்த்தார். நாடோடிகளான நரிக்குறவர்களைப் போல் நகர்ப்புறங்களிலுள்ள மாணவர் விடுதிகளில் ஆதிவாசிகளின் குழந்தைகளை அமர்த்திக் கல்வி போதிப்பதென்பது கடினமான காரியம். இதனையும் ஐயா அவர்கள் சாதித்தார். ஒருமுறை மதுரை சேவாலயத்தில் தாண்டிக்குடி மலையைச் சேர்ந்த ஆதிவாசிகள் குழந்தைகள் ஒன்பது பேர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் புதிய உடைகள் புத்தகங்கள் அனைத்தும் கொடுத்துச் சுவையான உணவும் அளிக்கப்பட்டன. ஆனால் மறுநாள் காலைப் பிரார்த்தனைக்கு அவர்கள் ஆஜராகவில்லை. அவர்கள் தங்குவதற்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையைப் போய்ப்பார்த்தபோது அங்கு அவர்கள் காணப்படவில்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பொருள்கள் அனைத்தையும் அப்படியே விட்டுவிட்டு இரவோடு இரவாக மதுரையை விட்டு 'மலை நோக்கி நடந்து போய்க் கொண்டிருக்கிறார்

கள் என்ற விபரம் தெரிந்தது. காரில் ஆட்களை அனுப்பி அவர்களை மீண்டும் விடுதிக்கு அழைத்து வருமாறு ஐயா அவர்கள் ஏற்பாடு செய்தார். அவர்களுக்கு ஆறுதல் கூறி பக்குவத்துடன் பாதுகாத்து, சலுகையுடன் கண் காணித்துக் கல்வி அளிக்க ஏற்பாடு செய்தார். அதன் பயனாக அவர்களில் சிலர் பட்டப் படிப்புவரை கற்று அரசுப்பணியில் அமர்ந்தனர்.

ஐயா அவர்களின் சமுதாயப் பார்வை எப்படி அமைந் திருந்தது என்பதை இவை தெளிவாகக் காட்டுகின் றன. தாழ்த்தப்பட்டவர்களுக்காவும் துன்பப்பட்டவர் களுக்காவும் அவரது உள்ளம் உருகிற்று. அவர்களுக்காக தமது உழைப்பினை நல்கினார். அவர்கள் மேம்பாட்டுக் காக உழைத்தார். அவர்களது துயர் துடைக்க தம்மிட முள்ளதனைத்தையும் ஈந்தார். தாம் வகித்த நகராட்சி, சட்டமன்ற, பாராளுமன்ற பதவிகளை அவர்களது சேவைக்கு அர்ப்பணித்தார். தம்மிடமிருந்த சொந்த நிதி அனைத்தையும் அளித்தார். தமது மரணத்தறுவாயி லும் தம்மிடம் மீந்திருந்த வீடு, மற்றும் சொத்துக்களை அவர்களதுமேம்பாட்டுக்கென்றேஉயில்எழுதிஅர்ப்பணித் தார். அரிஜனப் பணி அவரது ஆயுட்காலப் பணியாகவே ஆயிற்று. அரசியல் பணியை அவர் இடையில் கைவிட்ட துண்டு. ஆனால் இது போன்ற மனிதாபிமானமிக்க நிர்மாணப் பணிகளை அவர் ஒருபோதும் கைவிட்டதில்லை.

அவர் உடல் நலம் குன்றி இருந்த காலத்திலும்கூட இப்பணியை விடாது தொடர்ந்தார். 1978ஆம் ஆண்டு ராமனாதபுரம் மாவட்டத்தில் அரிஜனங்களுக்கும் ஜாதி இந்துக்களுக்கும் கலகம் ஏற்பட்டபோது அவர் அப்பகு திக்குச் சென்று கலகம் மேலும் பரவாது தடுத்து அமைதி ஏற்பட தம்மாலியன்ற அனைத்தையும் செய்தார்.

கலகத்தால் பாதிக்கப்பட்ட அரிஜன மக்களுக்கு நிவாரணப் பணி செய்தார். இப்பணியைப் பாராட்டி அப்போது தமிழக ஆளுநராகஇருந்த பிரபுதாஸ் பட்வாரி அவர்கள் தமது சொந்த நிதியிலிருந்து 5000 ரூபாய் நன்கொடை அளித்தார்.

இந்து மதத்தின் நலிவுக்கு தீண்டாமை ஒரு முக்கிய காரணம் என்பதை ஐயா அவர்கள் தெளிவாகப் புரிந்திருந்தார். அரிஜனங்களின் மதமாற்றத்துக்கும் இதுவே காரணம் என்பதையும் அவர் தெரிந்திருந்தார். சமுதாய சமத்துவம் பொருளாதாரசமத்துவம் இதற்கு நிவாரணம் என்பதை சட்டமன்றங்களிலும் பொது மேடைகளிலும், கருத்தரங்குகளிலும் அவர் இடையருது கூறி வந்தார். இந்த சமத்துவ சமுதாயத்தை நோக்கி அவர் அயராது இயங்கிக் கொண்டிருந்தார். இப் பணி இறை பணி என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. ஆகவே பசி நோக்காது, கண் துஞ்சாது இதனை ஆற்றி மன நிறைவு பெற்ருர். ◻

8. காந்திய நிர்மாணப் பணிகள்

1921ஆம் ஆண்டு ஐயா அவர்கள் வாழ்க்கையில் நினைவுகூறத்தக்க ஆண்டு. ஏனெனில் அவ்வாண்டில் அவர் காந்தியடிகளை முதன் முதலாகத் தரிசித்தார். அடிகள் மதுரைக்கு வருகை தந்தபோது ஒரு பொதுக்கூட்டத்தில் அவரது தரிசனம் ஐயா அவர்களுக்குக் கிடைத்தது. அப்பொழுது அவருக்கு வயது 16. வீரசாகசம் புரியத் துடிக்கும் மனப்போக்கு துளிர்விடும் வயது. அவ்வயதில் அடிகளைப்பார்த்த ஐயா அவர்களின் உள்ளத்தில் அவரது உருவமும் ஆதர்சமும் ஆழமாகப்பதிந்துவிட்டன. அன்று முதல் காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும் என்ற இனம் புரியாத ஏக்கம் அவரது மனதைப் பற்றிக் கொண்டது. ஆயினும் அந்த விதை முளை விட்டுத் தளிர்க்கும் காலம் வரும்வரை காத்திருந்தது. அப்போது அவர் உயர்நிலைப் பள்ளி மாணவர். தமக்கென்று முடிவு செய்யும் தகுதியும் வயதும் அவருக்கில்லை. அவர் வீட்டுக்குச் செல்லப் பிள்ளை. தாய் அவர் மீது தம் உயிரையே வைத்திருந்தார். பால்ய விவாகம் வேறு அவரை முளையிலிட்டுக் கட்டியிருந்தது. அவரது சுபாவம் பெரியோர் சொல் மீருத பணிவு. இத்தனைக்கும் மத்தியில் காந்தி தரிசனம் விதைத்த அந்த விதை சமயம் எதிர்பார்த்துக் காத்திருந்தது. உயர்நிலைபள்ளிப் படிப்பு முடிந்து மேல் படிப்புக்காக இங்கிலாந்து செல்ல அவரது அண்ணன் சகல ஆயத்தங்களையும் செய்து முடித்து அவரது விருப்பத்தைக் கோரிய சமயம் அந்த வித்து பீறிட்டுக்கொண்டு எழுந்ததை முதல் அத்தியாயத்தில் பார்த்தோம்.

காந்தியடிகளைப் பின்பற்றி சுதந்திரப் போராட்டத்தில் குதிக்க வேண்டும், கதர் அணியவேண்டும் என்ற

ஏக்கம் அவருக்கு 1923இல் நிறைவேறிற்று. அவருக்கு காந்தி தரிசனம் கிட்டியது 1921இல். அவர் காங்கிரஸில் சேர்ந்து கதர் அணிந்தது 1923இல். இராமேஸ்வரம் சென்று ஸ்ரீ ராமநாத சுவாமியைத் தரிசித்து கதராடை அணிந்து வீடு திரும்பியபோது அவரது வீடு அல்லோல கல்லோலப்பட்டது என்று ஏற்கனவே பார்த்தோம். அவர் அது நாள்வரை பட்டு அணிந்ததைத் தவிர பருத்தி ஆடைகூட அணிந்தறியார். அதிலும் செல்லப்பிள்ளை முரட்டுக் கதர் அணிந்த கோலத்தில் வந்து நிற்கிறது. அக்காலத்தில் கதர் எப்படி இருந்தது என்று இன்றைய இளைஞர்களுக்குத் தெரியாது. கதர் நூற்பும் நெசவும் நுணுக்கம் பெற்றிராத காலம். சாக்குத் துணியைப் போல் முரடாக அது இருந்தது. சிறுவர்கள் அதை நீரில் தோய்த்து துவைக்க முடியாது. தேசபக்தியாலும் ஆன்ம பலத்தாலும் தேர்ந்த உள்ளங்களே அக்காலத்திய கதரை அணிய முடியும். அது தத்துவக் கதர். தியாகத்தின் சின்னம். சுதந்திரத்தின் சின்னம். அக்காலத்தில் கதர் அணிபவர்களை அரசு பின்தொடர்ந்து கண்காணிக்கும். அன்றைய அரசுக்கு அது விரோதமானதாகக் கருதப்பட்டது. கதர் அணிந்ததற்காகவே பலர் காவல்துறையின் தடியடிக்கு ஆளாகி வந்தனர். இந்நிலையில் 18வயதுகூட நிரம்பப்பெறாத ஐயா அவர்கள் கதராடையில் தோன்றியதை பாசத்துக்கு ஆளான அவரது குடும்பத்தார் எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்? அழுகையும் புலம்பலுமாக வீட்டிலுள்ள பெண்கள் ஒருபுறம் மன்றாட, கனல் பறக்கும் கண்களுடன் அண்ணன் குமுற, அவரது மாமனாரும் அவரது குடும்பத்தாரும் இன்னது செய்வதென்று தோன்றாது பரிதாபமாக இருக்க, இதற்கிடையில் ஐயா அவர்கள் நிலை அனைவரையும் விடப் பரிதாபமாக இருந்தது.

ஐயா அவர்களது சுபாவம் மென்மையானதெனினும் அவரது உள்ளம் எஃகுப் போன்றது என்பதை முன்னரே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ''எண்ணித் துணிக கருமம்'' என்பதற்கு அவர் இலக்கணமானவர். ஒன்றைத்தீர்மானிக்கும் முன்னர் அதைத் தீர்க்கமாக ஆலோசித்து முடிவு செய்வார். பின்னர் அதைஎவராலும் மாற்ற முடியாது. குடும்பத்தார் மன்றாடிய போதும் அவர் மேற்கொண்ட முடிவை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டார். அதனையடுத்து வரவிருந்த தீபாவளிக்கு மாமனார் சமயமறிந்து பட்டாடை அனுப்பிவைத்தார். தீபாவளி அன்றேனும் பட்டு உடுத்த வேண்டும் என்று தாயார் கேட்டுக்கொண்டதையும் நிராகரித்தார். பெட்டிப் பாம்புபோல் பணிந்துகிடந்த இப்பிள்ளைக்கு இத்தனை உறுதி எப்படி வந்தது என்று அனைவரும் ஆச்சரியப்பட்டனர். இதற்கு காந்தியடிகளைத்தான் காரணம் கேட்கவேண்டும். அன்று கதர் அணிந்த ஐயா அவர்கள் ஆயுள் பரியந்தம் அதைக் கைவிடவில்லை. ஏனெனில் கதர் அவருக்கு வெறும் ஆடையல்ல. அதற்குள் காந்திய வாழ்க்கையின் ஆன்மபலம் பொதிந்திருந்ததை அவர் நாள்தோறும் அனுபவித்தார்.

கதர் அவரது வாழ்வில் ஒன்றறக் கலந்துவிட்டது. தாம் அணிந்ததோடு தம்மைச் சுற்றியுள்ள நண்பர்களையும் தொண்டர்களையும் கதர் அணியுமாறு கேட்டுக்கொண்டார். கதர் நூற்பையும் நெசவையும் அபிவிருத்தி செய்தார். வீடுதோறும் கதர் நூற்கவேண்டும் என்று கோரினார். அதற்கு உதவியாக ராட்டைகள் உற்பத்தியை ஊக்குவித்தார். கதர் விற்பனையை முடுக்கினார். தாமே தெருத் தெருவாகச் சென்று கதர் விற்றார். நகராட்சித் தலைவராக இருந்தபோது பள்ளிகளிலும் காரியாலயங்

களிலும் பணி செய்யும் ஊழியர்கள் வேலை நேரத்தில் கதர் அணிய வேண்டும் என்ற ஒழுங்கு விதியை ஏற்படுத்தினர். நகராட்சியின் தேவைக்கு கதர் மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்று விதி வகுத்தார். நகராட்சித் தொழிலாளர்களுக்கு கதர்ச் சீருடை வழங்கினர். அக்காலத்தில் கதர் விற்பனையில் அகில இந்தியாவிலும் மதுரை முதலிடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டு அகில இந்திய காங்கிரஸ் மதுரை காங்கிரஸ் குழுவிற்குப் பரிசு வழங்கியது. இதன்மூலம் ஐயா அவர்கள் பெயர் அகில இந்திய அளவில் காங்கிரஸ் வட்டாரத்தில் பிரபல்யமாயிற்று. காந்தியடிகளின் கவனத்துக்கு ஐயா அவர்கள் அறிமுகமானர்.

இதன் பயனுக, 1934ஆம் ஆண்டு காந்தியடிகள் மதுரைக்கு வருகை தந்தபோது தமது அன்புக்குப் பாத்திரரான ஐயா அவர்கள் வீட்டில் தங்க அவர் விரும்பினர். இது தமக்குக் கிடைத்தற்கரிய பேருக ஐயா அவர்கள் கருதினர். 1921இல் அடிகளைப் பொதுக்கூட்டம் ஒன்றில் தூரத்தில் பார்த்து தரிசித்தார். இன்று அந்தத் தெய்வம் தமது வீட்டை நாடி வருகிறது என்ருல் இதைவிட ஒரு பக்தருக்கு வேறு என்ன வேண்டும்? தமது ஜன்மம் சாபல்யமடைந்தது போன்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது. மிகுந்த பக்தி சிரத்தையுடன் அடிகளுக்குப் பணிவிடை செய்தார். காந்தியடிகளோடு தனிமையில் இரண்டு மணிநேரம் தங்கி அவரிடம் உபதேச நல்லுரைகள் பெறும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. ஐயா அவர்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான பல கருத்துக்களை அவருடன் கலந்துரையாடினர். சொந்த வாழ்விலும் பொதுவாழ்விலும் கடைப்பிடிக்க வேண்டியவற்றைக் குறித்தும் அவரது ஆலோசனைகளைப்

பெற்றார். இறுதியில் ஐயா அவர்கள் தம்மிடமிருந்த திருக்குறள் நூலை அன்பளிப்பாகத் தந்து, தம்மை ஆசீர்வதிக்குமாறு கோரினார். காந்தியடிகள் மகிழ்ச்சியுடன், "இறைவன் உனது வாழ்க்கையைப் பிரகாசிக்கச் செய்வாராக" (May God give you the light) என்று வாழ்த்தி ஆசீர்வதித்தார். இதனை ஐயா அவர்கள் தமது வாழ்வில் பெற்ற பெரும் பாக்கியமாகக் கருதினார்.

அப்போது மற்றொரு நிகழ்ச்சியும்நிகழ்ந்தது. ஐயா அடிகளைச் சந்தித்தபின் காந்தியடிகளிடம் ஐயா அவர்களின் மனைவியார் திருமதி பார்வதவர்த்தினி அம்மையார் சென்று அடிகளைத் தனியே சந்திக்க சில நிமிடங்கள் அளிக்க வேண்டும் என்று பணிவுடன் கோரினார். அடிகள் அதற்கு உடனே அனுமதிவழங்கினார். "தங்களின் அன்புக்குரிய தங்கள் சீடரான எனது கணவர் என்னைத் திருமணம் செய்து கொண்ட நாள்முதல் பிரம்மச்சரியம் காத்துவருகிறார். எந்தப் பெண்ணுக்கும் தாயாகும் பாக்கியம் கிடைக்க வேண்டும் என்று விரும்புவது குற்றமாகாதல்லவா? ஒரு குழந்தைக்கேனும் தாயாக வேண்டும் என்ற ஏக்கம் இருந்து வருகிறது. தங்களைத் தவிர இதை யாரிடம் கூறமுடியும்? இதனைத் தாங்கள் எனதுகணவரிடம் கூறி இந்தவரத்தைப்பெற்றுத் தர வேண்டும். இறைவனே பார்த்து தங்களை எனது வீடு தேடிவரச் செய்திருக்கிறார். தங்களைத் தவிர வேறு எவராலும் எனது கணவரை இதற்கு இசைய வைக்க முடியாது. என் கோரிக்கையைத் தாங்கள் நிறைவேற்றித் தரவேண்டும்" என்று கண்ணீர் மல்கக்கேட்டுக் கொண்டார்.

அடிகள் இதைக் கேட்டு ஒரு புறம் வியப்பும் மற்றொரு புறம் மகிழ்ச்சியும் அடைந்தார். ஒரு நிமிட மௌனத்

துக்குப் பின்னர், அந்த அம்மையாரின் முதுகை அன்புடன் தட்டிக்கொடுத்து, தமது மகள் பேரிலுள்ள வாஞ்சை யுடன், ''மகளே, கலங்காதே, இந்த கோரிக்கையை உனது கணவரிடம் பெற்றுத்தருகிறேன்'' என்று கூறி அம்மையாரை அனுப்பிவிட்டு, உடனடியாக ஐயா அவர்களை வரவழைத்து அவருடன் தனிமையில் பேசி அம்மையாரின் கோரிக்கையை ஏற்கச் செய்தார். பிரம்மச்சரியம் என்பது தாம்பத்திய உறவைத் தவிர்ப் பது மாத்திரமல்ல. புலன்களைக் கட்டுப்படுத்தும் கலை பிரம்மச்சரியமாகும். கீதையில் கூறப்பட்டுள்ளதைப் போல் ஆமை எவ்வாறு அதன் அவயவங்களை வேண்டும்போது வெளிப்படுத்தவும், வேண்டாதபோது உள்ளே இழுத்துக்கொள்ளவும் செய்கிறதோ அதுபோல் புலன்களைப் பயன்படுத்தும் கலை பிரம்மச்சரியம். இல்லறத்தில் உள்ள ஒருவர் குழந்தை பாக்கியம் விரும்பும்போது மாத்திரம் உறவு கொள்ளலாம். புல நுகர்ச்சிக்காக உடலுறவு கொள்ளுவது கூடாது என்று பிரம்மச்சரியம் தடை விதிக்கிறது. இதைக் குறித்து அடிகள் ''பிரமச்சரியம்'' என்ற தலைப்பிலும் ''புலனடக் கமும் புலநுகர்ச்சியும்'' என்ற தலைப்பிலும் விளக் கியுள்ளார். இது குறித்து ஐயா அவர்கள் அறிந்திருக்க நியாயம்] உண்டு, எனினும் காந்தியடிகளின் ஆசி இதற்குக் கிடைக்க வேண்டும் என்ற பிராப்தம் ஐயா அவர்கள் தம்பதியருக்கு இருந்திருக்கிறது.

1938ஆம் ஆண்டு ஐயா அவர்கள் தம்பதியருக்கு அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவரது குடும்பத்திலுள்ள அனைவருக்கும் மட்டில்லா மகிழ்ச்சி. இச்செய்தி சேவாகிராமத்தில் இருந்த காந்தியடிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. குழந்தைக்கு அடிகளே பெயர்

சூட்ட வேண்டும் என்ற கோரிக்கையும் தெரிவிக்கப் பட்டது. காந்தியடிகள் உடனே குழந்தைக்குத் தமது ஆசியை வழங்கியதோடு அதற்கு "சீதா" என்ற நாமத்தையும் சூட்டினார். அத்துடன் குழந்தையை எவ்வாறு பராமரிக்க வேண்டும், எவ்வாறு உணவூட்ட வேண்டும் என்ற விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றும் தமது கடிதத்தில் கொடுத்திருந்தார். அவ்வாறே குழந்தைக்கு "சீதா" என்று பெயர் சூட்டப்பட்டது. குடும்பத்தில் அக்குழந்தையை அன்புடன் சீதாபாய் என்ற அழைத்தனர். இவ்வாறு காந்தியடிகளுக்கும் ஐயா அவர்கள் குடும்பத்துக்கும் ஒரு உறவு வளர்ந்து வந்தது,

இந்நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. ஐயா அவர்கள் உள்ளந்தரங்க சுத்தியுடன் காந்தியடிகளுக்கு மிகவும் பிரியமான சுதேசி தர்மத்தின் அடித்தளமான கதர் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு சிரத்தையுடன் செயல் பட்டதால் ஐயா அவர்கள் பெயர் அடிகளுக்கு அறிமுகமாயிற்று. ஆகவே அடிகள் மதுரை வருகை தந்தபோது ஐயா அவர்கள் வீட்டில் தங்க தாமே முன்வந்தார். இதன் பின்னணியில் இந்நிகழ்ச்சி நிகழ்ந்தது என்பது வெளிப்படை.

காந்தியக் கோட்பாட்டில் பூரண நம்பிக்கையும் நிர்மாணத் திட்டங்களில் உண்மையான ஈடுபாடும் ஐயா அவர்களுக்கு இருந்தபடியால் அவர் "காந்தி சேவா சங்கம்" என்ற அமைப்பில் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார். காந்திய நெறிப்படி சொந்த வாழ்விலும் பொதுவாழ்விலும் ஈடுபட்டிருப்பவர்கள் மாத்திரமே இந்த அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அகில இந்தியாவிலும் இதில் ஒருசிலரே

அங்கத்தினராகும் தகுதி பெற்றிருந்தனர். இந்த அமைப்பின் ஆண்டு மாநாடு கல்கத்தாவை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் நடைபெற்றபோது அதில் ஐயா அவர்கள் கலந்து கொண்டார். மாநாடு முடிவில் அங்கத்தினர்கள் தனித்தனியே காந்தியடிகளுக்கு அறிமுகம் செய்யப் பட்டனர். பிரார்த்தனைக் கூட்டத்தையடுத்து அங்கத் தினர்கள் தங்கள் பெயரையும் ஊரையும் தெரிவித்து ஒருவர்பின் ஒருவராக வணங்கிச் சென்றனர். ஐயா அவர்கள் தமது பெயரைக்கூறி வணங்கிய போது, அடிகள் அவரைத் தலைநிமிர்ந்து அன்புடன் நோக்கி, ''ஓ'' சுப்பராமன்! பர்வதவர்த்தினி சுகமா?'' என்று அன்புடன் விசாரித்தார். ஐயா அவர்கள் மீதும் அவரது குடும்பத் தின் மீதும் அடிகள் எத்தனை அன்பு வைத்திருந்தார் என் பதை இதனால் அறியக் கிடைக்கின்றது.

நாடு சுதந்திரம் பெற்றதும் தொடர்ந்து நிர்மாணப் பணிகளை முன்னிலும் அதிக தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்று ஐயா அவர்கள் விரும்பினார். அப்போது மதுரை மாவட்ட நிர்மாண ஊழியர் சங்கம் என்ற அமைப்பு செயல்பட்டு வந்தது. அதற்கு ஐயா அவர்கள் தலைவராக இருந்தார். அவருக்கு உதவியாக பிரபல நிர்மாண ஊழியரான ஜெகந்நாதன் செயலாளராக இருந்தார். இச் சங்கத்துக்கு பொதுமக்களிடமிருந்து நன்கொடை வசூலிக்கப்பட்டது. ஐயா அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து தாராளமாக நிதி உதவி செய்தார். இதற்கென கஸ்தூரிபா நினைவு நிதியின் சார்பில் காந்தி கிராமத்தில் கிராம சேவைக்குப் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கும் மையம் ஒன்றை ஸ்ரீமதி சௌந்திரம் அம்மையார் காந்திகிராமத்தில் நடத்திக் கொண்டிருந்தார். அதனையடுத்து சிறுமலை அடிவாரத்தில் ஐயா அவர்கள்

நிர்மாணப் பணிகளில் ஆண்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அப்பயிற்சி நிலையத்துக்கு ''ஊழியரகம்'' என்று பெயரிடப்பட்டது. பயிற்சி அளிக்கும் பொறுப்பினை ஜெகந்நாதன் ஏற்றுக் கொண்டார். இப்பயிற்சியில் பங்கு பெற்ற ஊழியர்கள் பலர் தமிழ் நாடெங்கும் பரவி காந்திய நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் இந்த ஊழியர்கள் கதர், கிராமத் தொழில், தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு போன்ற நிர்மாணத் திட்டங்களோடு, விவசாயிகளின் பிரச்சினைகளிலும் சிரத்தை காட்டி வந்தனர். அவ்வமயம் மதுரை மாவட்டத்தில் அமைக்கப்பட்ட சர்க்கரை ஆலை ஒன்றுக்கு அரசு நிர்ணயம் செய்த விலைக்கு கரும்பு விவசாயிகள் தங்கள் கரும்பைக் கட்டாயமாகத் தர வேண்டும் என்று சென்னை மாகாண அரசு உத்தரவு பிறப்பித்தது. அந்த நாட்களில் கரும்பைச் சாறுபிழிந்து சர்க்கரை காய்ச்சும் குடிசைத் தொழில் கிராமங்கள் தோறும் நடைபெற்று வந்தது. இந்த உத்தரவின் காரணமாக கரும்பு பிழியும் குடிசைத் தொழில் பாதிக்கப் பட்டது. இதனை ஊழியரகத்தில் பயிற்சி பெற்ற ஊழியர் கள் ஆட்சேபித்தனர். அரசுக்கு இவ்வுத்தரவை ரத்து செய்யுமாறு விண்ணப்பித்தனர். அரசு பராதீனமாக இருந்ததால்கரும்புவிவசாயிகளைத் திரட்டி சத்தியாகிரகம் செய்யத் தயாராயினர். இத்தருணத்தில் ஐயா அவர்கள் அரசுக்கு இந்த இயக்கத்தின் நியாயத்தை எடுத்துரைத்து அரசின் உத்தரவைத் திருத்துமாறு செய்து குடிசைத் தொழில் வளர உதவினர்.

காந்திகிராமம் ஊழியரகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வந்த மதுரை மாவட்ட நிர்மாண

ஊழியர் சங்கம் பின்னர் தமிழ்நாடு நிர்மாண ஊழியர் சங்கமாக வளர்ந்தது. அதற்கும் ஐயா அவர்கள் தலைவராக இருந்தார். 1951 ஆம் ஆண்டு வினோபா அடிகள் பூதான இயக்கத்தைத் தோற்றுவித்தபோது, தமிழ் நாட்டில் இந்த இயக்கம் நடைபெற ஊழியரகம் தலைமையகமாகச் செயல்பட்டது. வினோபா அடிகள் தமிழ்நாட்டில் பாதயாத்திரை செய்தபோது ஐயா அவர்கள் அந்த இயக்கத்துக்கு உறுதுணையாக இருந்தார். பூதான இயக்கத்துக்கு ஆதரவளித்த ஐயா அவர்கள் தாமே முன்மாதிரியாக தம்மிடமிருந்த நிலத்தைத் தானமாக அளித்தார். அவனியாபுரம், காளிகாப்பான், விளத்தூர், உச்சபட்டி ஆகிய கிராமங்களில் தமது குடும்பத்துக்குச் சொந்தமாயிருந்த நல்ல விளை நிலங்களையும் நஞ்சை நிலங்களையும் சுமார் 60 ஏக்கர் வரை இவ்வியக்கத்துக்குத் தானமாக அளித்தார். இதனைக் குறிப்பிட்டு கோவை ஐயா திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கூறும்போது, "பூமிதான இயக்கத்துக்கு நிலதானம் செய்தவர்களில் பலர் தம்மிடமிருந்த நிலப்பரப்பில் தரிசு நிலத்தைத் தானமாக அளித்தனர். ஆனால் ஐயா அவர்களோ தம்மிடமிருந்த நிலத்தில் சிறந்த நிலத்தைத் தேர்வு செய்து தானமாக அளித்தார். தாம் தானமாக அளிக்கும் நிலம் சிறந்ததாகவும் அதைப் பெற்றுப் பிறர் பயன்பெற வேண்டும் என்ற மேலான உள்ளத்துடன் அளித்தார். அவ்வாறு தானம் அளித்தோர் மிகச் சிலரே" என்று குறிப்பிட்டார்கள். உச்சப்பட்டி கிராமத்தில் வழங்கப்பெற்ற அவரது நிலம் இன்று சர்வசேவாப் பண்ணையாக உருவாகி நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்குச் சொந்தமான கூட்டுப் பண்ணையாகக் காட்சியளிக்கிறது.

மதுரை மாவட்ட நிர்மாண ஊழியர் சங்கம் பூதான இயக்கத்தைத் தமிழ்நாட்டில் அங்குரார்ப்பணம் செய்ய உதவியது போல் தமிழ்நாட்டில் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் என்ற நிறுவனம் அங்குரார்ப்பணம் செய்வதற்கும் உதவிற்று. தொழிலாளர் இயக்கம் பலாத்காரத்துக்கு இரையாகிவிடாமல் அது ஒரு நிர் மாண இயக்கமாக தொழிலாளர் நலன்காக்கவேண்டும் என்பது இந்த இயக்கத்தின் நோக்கமாகும். 1919ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஆமதாபாத் தொழிலாளர் போராட்டத்தில் பங்கு பெற்று, ஒரு லட்சிய தொழி லாளர் இயக்கம் எவ்வாறு செயல்படவேண்டும் என் பதற்குச் சிறந்த உதாரணமாக அவர் அதைத் தோற்று வித்தார். அதனை மாதிரியாகக் கொண்டு அகில இந்திய அளவில் இந்த இயக்கத்தை விரிவாக்கம் செய்யவேண்டும் என்று ஜவஹர்லால்நேரு, வல்லபாய்படேல் போன்றவர் கள் விரும்பினார்கள். அதன் பின்னணியில் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.

இவ்வியக்கம் தமிழகத்தில் மதுரையில் முதல் முத லாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதற்குக் கருவியாக திரு. ஜி. ராமானுஜம் என்ற சிறந்த தேசிய தொழிற்சங்க ஊழியரை ஆமதாபாத்திலிருந்து அனுப்பி வைத்திருந்தனர். இப்போது அவர் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசுக்குத் தலைவராக உயர்ந்திருக் கிறார். அவர் மதுரைக்கு வந்தபோது அவருக்கு செயல் படுவதற்கு உதவி ஆரம்பச் செலவிற்கு நிதி அளிக்கும் பொறுப்பை மதுரை மாவட்ட நிர்மாண ஊழியர் சங்கம் பொறுப்பேற்றது. இதற்குக் காரணமாக இருந்து ஊக்குவித்தவர் ஐயா அவர்கள் என்றால் அது மிகையா காது. அப்போது அவரது ஆதரவு பெற்று மதுரையில்

தொழிலாளர் சேவாஸ்ரமம் என்ற நிறுவனம் ஒன்றும் நடைபெற்றது. தொழிலாளர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் பண்பு வளர்க்கவும் நல்ல பொழுது போக்குகளில் ஈடுபடவும் தேச பக்தி தெய்வ பக்தி வளர்க்கவும் தொழிலாளர் சேவாஸ்ரமம் இயங்கி வந்தது. இதில் அங்கத்தினராக இருந்த தொழிலாளர்கள் அனைவரும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரசில் ஆரம்ப கால அங்கத்தினர்களாகப் பதிவு செய்து கொண்டு அந்த இயக்கம் வளரப்பாடுபட்டனர். இதற்கு ஊக்க மூட்டியவர் ஐயா அவர்கள் ஆவர்.

மதுரை மாவட்ட நிர்மாண ஊழியர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற மற்றொரு நிறுவனத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். இது கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கென்று நிறுவப்பட்ட நிறுவனமாகும். அரிஜன மாணவர்களுக்கு சேவாலயம் நிறுவப் பெற்றதை முன்னர் பார்த்தோம். கல்லூரி மாணவர்களுக்கு அதைப் போல் ஒரு நிறுவனம் தேவை என்பதை ஐயா அவர்கள் உணர்ந்தார். அதன் பயனாக ''மாணவர் சேவா நிலையம்'' என்ற பெயரில் இந்நிறுவனம் தொடங்கப் பெற்றது. கல்லூரி மாணவர்கள் இவ்விடுதியில் தங்கிப் படித்தார்கள். காந்தி ஆசிரம ஒழுங்குகள் கடைப்பிடிக்கப் பட்டன. காலை, மாலைப் பிரார்த்தனை, சுற்றுப்புற சுத்தம், உடல் உழைப்பு ஆகிய நியமங்கள் உண்டு. இரவு நேரங்களில் விடுதி மாணவர்கள் சேரிகளுக்குச் சென்று முதியோர் கல்வி மையங்கள் நடத்துவர். அவ்வப்போது கல்லூரி பேராசிரியர்களையும் தேசிய தலைவர்களையும் வரவழைத்து கருத்தரங்கம் நடத்தவும் இந்நிலையம் கருவியாக இருந்தது. மதுரை நகரத்திலுள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் உள்ள மாண

வர்களோடு தொடர்பு கொண்டு தேச பக்திக்குரிய செயல் திட்டங்கள் வகுத்துச் செயல்படவும் அது பெருதவியாக இருந்தது. இதற்குப் பின்னணியில் ஐயா அவர்கள் உற்சாகமளித்து இதற்குத் தலைவராகவும் இருந்தார்.

1946இல் வேதாரண்யத்தில் கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலம் தொடங்கிய காலத்தில் இருந்தே திரு. என். எம். ஆர். ஐயா அவர்களும், திரு. டி. எஸ். அவிஞசிலிங்கம் செட்டியார் அவர்களும் இதன் தர்ம கர்த்தா குழுவில் பொறுப்பேற்று வந்திருக்கின்றார்கள். மதுரை ஐயா திரு. என். எம். ஆர். அவர்களுடைய துணைவியார் திருமதி. பர்வதவர்த்தனி அம்மாள் அவர்களும் தொடக்ககாலத்திலிருந்து தர்மகர்த்தா குழுவில் பணியாற்றி கடைசியில் தனது உடல் நலம் பாதித்த காலத்தில் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள்.

ஆண்டுக்கு ஒரு முறையாவது குருகுலத்திற்கு வந்து தர்மகர்த்தாக் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதோடு குருகுலப் பணிகள் சிறப்பாக அமைவதற்கு நல்ல ஆலோசனை வழங்கி வருவார்கள்.

குருகுலம் தொடங்கிய காலத்தில் முதல் சில ஆண்டுகள் வரையில் அரசு மான்யம் எதுவும் இல்லாமல் பலவித சிரமமான சூழ்நிலையில் குருகுலத்தை நடத்த வேண்டியிருந்தது. அப்போதெல்லாம் பெண்களுக்கான தனி உணவு விடுதிகள் அதிகம் வெளியில் இல்லை. எனவே அதிக அளவில் பெண்கள் குருகுலத்தில் சேர வருவார்கள். இலவச உணவு விடுதி ஆகையால் பராமரிப்புச் செலவு மிகவும் கடுமையாக இருந்தது. அந்த மாதிரி சமயங்களில் தர்மகர்த்தாக் குழுக் கூட்டத்தில் மாணக்கியர்களை அதிகம் எடுக்கக் கூடாது என்பதில்

காரசாரமான விவாதங்கள் நடக்கும். திரு அவினாசி லிங்கம் செட்டியார் அவர்கள் பிள்ளைகள் அதிகம் சேர்க்கக்கூடாது என்பதை அதிகம் வலியுறுத்திக் கூறுவார் கள். "எனது தந்தை சர்தார் வேதரத்தினம் அவர்கள் எல்லாவற்றிற்கும் சிரித்துக் கொண்டே இருந்துவிடுவார் கள். பிறகு "மரம் வைத்தவன் தண்ணீர் விடுவான், நாம் ஏன் கவலைப்படவேண்டும்'' என்று சொல்லி முடிப்பார் கள். இந்த மாதிரி சமயங்களில் எல்லாம் மதுரை ஐயா என்று நாங்கள் அழைக்கும் திரு. என். எம். ஆர். சுப்ப ராமன் அவர்களும் தந்தையவர்களுக்கு ஆதரவாக எடுத்து விவாதித்து பிரச்சினையை தந்தையவர்கள் போக்கிற்கு ஒரு முடிவிற்கு கொண்டு வருவார்கள். இம்மாதிரி ஒவ்வொரு முறையும் குருகுல வளர்ச்சியில் பலவிதமான ஆலோசனைகள் கூறி உதவியிருக்கிறார் கள்'' என்று.........

பின்னால் மதுரை ஐயா அவர்கள் தமிழ்நாடு காந்தி நினைவு நிதியின் தலைமை ஏற்று நடத்தி வந்தார்கள் அப்போதும் தந்தையவர்களும், திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும், தமிழ்நாடு காந்தி நினைவு நிதியில் உறுப்பினர்களாக இருந்து வந்திருக்கின்றார் கள். அப்போது தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் காந்தி நிதிப்பணிகள் மிக நன்றாக நடந்தன. சிறிது காலம் மதுரை ஐயா அவர்கள் உடல்நலம் குன்றியிருந்த போது தந்தைசர்தார் அவர்களும் காந்தி நிதி தலைமைப் பொறுப்பை தற்காலிகமாக ஏற்று நடத்தி வந்தார்கள். அந்த சமயங்களில் எல்லாம் பல விஷயங்களில் மிக நெருக்கமாக கலந்து பேசி காந்திய நிர்மாணப் பணி களைத் தமிழ் நாட்டின் பலபகுதிகளிலும் ஆங்காங்கே ஏதாவது ஒரு வகையில் நடக்க ஏற்பாடு செய்தார்கள்.

குருகுலத்தந்தை சர்தார் வேதரத்னம் அவர்கள் 1961 இல் எதிர்பாராது காலமான சமயம் மதுரை ஐயா அவர்களும் அம்மா அவர்களும் வேதாரண்யம் வந்திருந்து எதிர்பாராது ஏற்பட்ட இந்த பெரும் இழப்பை தாங்கிக் கொள்ள எங்களுக்கு போதிய ஊக்கம் கொடுத்தார்கள். தந்தையவர்களின் அஸ்தியை மதுரை ஐயா அவர்களே குருகுலத்தில் இப்போது இருக்கும் சமாதி மேடையில் பிரதிஷ்டை செய்து வைத்தார்கள்.

அரசியலில் எனது தந்தையவர்கள் ராஜாஜி அவர்களிடத்தில் ஈடுபாடு கொண்டவர்கள் என்பதை அனைவரும் அறிந்தது. திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும், திரு. டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களும் இந்த அரசியலில் ராஜாஜியின் கருத்துகளுக்கு மாறுபட்டவர்கள். அந்த மாதிரி சமயங்களில் அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகள் இவர்களின் சொந்த வாழ்க்கையில் நட்பை எந்தவகையிலும் பாதிக்கவில்லை. இவர்கள் எல்லோரும் கூடிப் பிணைந்து தேசத் தொண்டு செய்வதை இக்கருத்து வேறுபாடுகள் எந்தவகையிலும் பாதிக்கவில்லை. இவர்கள் எல்லாம் மாலையின் ஊடே நூல் போல் நின்று பின்னிப் பிணைந்து மகிழ்ச்சியான சேவையை அளித்தார்கள், மதுரை ஐயா அவர்கள் தான். அவர்கள் கடைசி காலம் வரையில் குருகுலத்தின்பால் பேரன்பு பூண்டு எங்கள் குடும்பத்தின்பாலும் பேரன்பு பூண்டு ஒரு பெரிய பாசப்பிணைப்பாக திகழ்ந்து வந்தார்கள்.

மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி என்ற கிராமத்தில் ஆசிரமம் ஒன்று நிறுவப்பெற்று காந்திய நிர்மாணப் பணிகள் அங்கு நடைபெற்றன. திரு.கோ.வெங்கடாசலபதி என்ற ஒரு சிறந்த நிர்மாண ஊழியரின் முயற்சியால் அந்த ஆசிரமம் 1940ஆம் ஆண்டில் நிறுவப்பெற்று

அதற்கு "காந்திநிகேதன்" என்று பெயரிடப்பட்டது. அதனுடன் ஐயா அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். பின்னர் பல ஆண்டுகள் அதன் தலைவராக இருந்து ஆசிரமம் வளர உதவினர். ஆசிரமத்தில் பல கிராமக் கைத்தொழில்கள் நடைபெற்றன. ஆதாரக் கல்விக்கும் அது ஒரு சிறந்த பயிற்சி நிலையமாக இயங்கிற்று. விடுதி வசதிகளோடு கூடிய பள்ளியும் நடைபெற்றது. தமிழ் நாடு ஆதாரக் கல்விச் சங்கமும் அதனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. அதற்கும் ஐயா அவர்கள் தலைவராக இருந்து ஆதாரக் கல்வியை ஊக்குவித்தார். தமிழக அரசு ஆதாரக் கல்வித்திட்டத்தை அமல்படுத்திய காலத்தில் சிறந்த கல்வி நிபுணர்களைக் கொண்டு தமிழகத்திலுள்ள கல்வி இயக்குநர்களுக்கும் முதல்வர் மற்றும் அலுவலர்களுக்கும் ஆசிரமம் ஆதாரக்கல்விபயிற்சி அளித்து உதவிற்று. ஆசிரமத்தின் வளர்ச்சிக்கும் ஆதாரக் கல்விக்கும் ஐயா அவர்கள் அளித்த ஆதரவு குறிப்பிடத் தக்கது. 1980ஆம் ஆண்டு இந்த ஆசிரமத்துக்கு அகில இந்திய அளவில் சிறந்த காந்திய நிர்மாண நிறுவனம் என்று பாராட்டி ஜம்னலால் பஜாஜ் விருதினை ஜனதிபதி வழங்கினர்.

தமிழ்நாட்டில் கோயமுத்தூர் பெரிய நாயக்கன் பாளையம் என்ற கிராமத்தில் நிறுவப்பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷின் வித்யாலயம் என்ற சிறந்த நிர்மாண நிறுவனத்துடன் ஐயா அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அதன் நிறுவனரான கோவை ஐயா திரு. அவினசிலிங்கம் செட்டியார் அவர்களுடன் 1930ஆம் ஆண்டு கடலூர்சிறையில் தொடர்பு கொண்ட நாள் முதல் ஐயா அவர்கள் நெருங்கிய நண்பரானர் என்ற செய்தியை ஏற்கனவே கூறியிருக்கிறோம். அவர்கள் இரு

வரும் சிறையில் இருந்த காலத்தில் அந்த ஆசிரமத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரித்தனர். சிறையிலிருந்து இருவரும் விடுதலை பெற்றவுடன் வித்தியாலயத்தின் வளர்ச்சியில் அவர்கள் கவனம் செலுத்தினர். வித்தியாலயம் ஒரு சிறந்த கல்வி நிறுவனமாக வளர்ந்து கொண்டிருந்தது. 1934ஆம் ஆண்டில் ஐயா அவர்கள் வித்தியாலயத்தின் துணைச்செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். தமது தகப்பனாரின் பெயரில் இயங்கி வந்த அறக்கட்டளையிலிருந்து அவ்வப்போது நிதி உதவி வழங்கி வந்தார். 1965ஆம் ஆண்டு ஐயா அவர்கள் வித்தியாலயத்தின் தலைவரானார். சுமார் 50 ஆண்டுகள் வித்தியாலயத்துடன் தொடர்பு கொண்டு அதன் வளர்ச்சியில் அவர் பங்குபெற்றார்.

மதுரை ஐயா என்று ஊழியர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட ஐயா அவர்களுக்கும் கோவை ஐயா என்று அழைக்கப்பட்ட திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கும் உள்ள நட்பு பிரசித்தம். ஒத்த கருத்தினராய் காந்திய இயக்கத்தில் அவர்கள் இருவரும் இணைந்து செயலாற்றிய பாங்கு சிறந்த நட்புக்கு உதாரணமாக விளங்கிற்று. காந்தியடிகள், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகாநந்தர் ஆகியோரிடம் அவர்கள் இருவருக்கும் ஒத்த மனதும் ஈடுபாடும் இருந்தது அதற்குக் காரணமாகும். இவ்விரு பெரியார்களின் அயராத உழைப்பால் உயர்ந்து நிற்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷின் வித்தியாலயம் தமிழ்நாட்டில் ஐயா அவர்களின் நினைவு ஆலயமாகத் திகழ்கிறது.

காந்தியடிகளை ஐயா அவர்கள் கடைசிமுறையாகத் தரிசித்த ஆண்டு 1946! அப்போது அடிகள் மதுரைக்கு விஜயம் செய்திருந்தார். அடிகளை மதுரை மீனாட்சி

அம்மன் ஆலய தரிசனத்துக்கு ஐயா அவர்கள் அழைத்துச் செல்லும் பாக்கியம் பெற்றார். அதற்கு முன்னரும் பலமுறை அடிகள் மதுரைக்கு வருகை தந்த போதிலும் ஆலயத்துக்கு அவர் சென்றதில்லை. அரிஜனங்களை அனுமதிக்காத ஆலயங்களுக்குச் செல்லுவதில்லை என்று அவர் எடுத்துக்கொண்ட உறுதி காரணமாக அந்த வாய்ப்பு அதுவரை கிடைக்கவில்லை. இப்போது ஆலயம் அரிஜனங்களுக்குத் திறந்துவிடப்பட்டிருந்ததால் அடிகள் ஆலய தரிசனத்துக்குச் சம்மதித்தார். அதற்கான சகல ஏற்பாடுகளையும் ஐயா அவர்கள் சிரத்தையுடன் செய்து உதவினார். இந்த முறையும் அடிகள் ஐயா அவர்கள் தம்பதியரைத் தனியே அழைத்து ஆசீர்வதிக்கத் தவறவில்லை.

1948ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் நாள் நிகழ்ந்த காந்தியடிகளின் மரணச்செய்தி கேட்டு ஐயா அவர்கள் நிலைகுலைந்தார், மனம் கலங்கினார், பெரும் அதிர்ச்சிக்கு ஆளானார். அச்செய்தி கேட்டு உலகமே துக்கத்தில் ஆழ்ந்திருக்க, அடிகளோடு பக்தியாலும் பாசத்தாலும்பிணைந்துள்ள ஐயா அவர்கள் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று விளக்கத் தேவையில்லை. பல நாட்கள் ஊண் உறக்கமின்றிஅடிகளின் பிரிவைத் தாங்கிக் கொள்ள முடியாது தவித்தார். காந்தியடிகள் துப்பாக்கியால் சுடப்பட்டு மண்ணில் வீழ்ந்த இடத்தில் அவரது புனித ரத்தம் தோய்ந்த மண்ணில் சிறிது ஐயா அவர்களுக்கு வந்து சேர்ந்தது. அடிகளோடு நெருங்கிய உறவு வைத்திருந்த ஒரு சிலருக்கே அது அளிக்கப்பட்டது. அம் மண்ணை அவர் பக்தியுடன் ஏற்றுப் பாதுகாத்து வந்தார். ஆண்டுதோறும் காந்தி நினைவு நாளில் அதற்கு மரியாதை செலுத்தும் பாங்கில் பிரார்த்தனையுடன் பூஜித்து வந்தார்.

அடிகளை நினைவுபடுத்துவது இது மாத்திரம் போதாது என்பதை ஐயா அவர்கள் அறிவார். அவரது நினைவாகப் பூஜை செய்தால் மாத்திரம் போதாது. அவரது கோட்பாடுகளைச் செயல்படுத்துவது தான் நாம் அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடன் என்பதை மனதிற் கொண்டு ஐயா அவர்கள் செயல்படத் தொடங்கினார். ''என் வாழ்க்கையே என் செய்தி'' என்று அடிகள் கூறிச் சென்றிருக்கிறார். அவரது நிர்மாணப் பணிகளைச் செயல்படுத்துவதே அச்செய்தி என்பதை மனதிற்கொண்டு தலைவர்கள் காந்தி நினைவு நிதி திரட்ட ஏற்பாடு செய்தனர். தமிழ்நாட்டில் அப்பணியில் ஐயா அவர்கள் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அகில இந்திய அளவில் பாபு ராஜேந்திர பிரசாத் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. தமிழகத்தின் சார்பில் ஐயா அவர்கள் அதில் பங்கு பெற்றார். கோடிக்கணக்கான நிதி திரட்டப் பெற்று ''காந்தி நினைவு நிதி'' என்ற பெயரில் அது நிறுவப்பெற்றது. அடிகளின் கோட்பாடுகளையும் அவற்றுக்குச் செயல் வடிவமான நிர்மாணத் திட்டங்களையும் செயல்படுத்துவது அந்நிதியின் குறிக்கோள்.

தமிழகத்தின் காந்தி நிதிப் பொறுப்பாளராக (சஞ்சாலக்) ஐயா அவர்கள் நியமிக்கப்பட்டார். தீண்டாமை விலக்கு, ஆதாரக் கல்வி, ஊழியர் பயிற்சி, காந்தி இலக்கிய வெளியீடு போன்ற பணிகளில் இந்நிதி முறையாகப் பயன்படுத்தப்பட்டது. காந்திநிகேதன் ஆசிரமம், வேதாரண்யம் கஸ்தூரிபா கன்னியா குருகுலம், பெரிய நாயக்கன்பாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம் போன்ற நிர்மாண நிறுவனங்களின் வளர்ச்சிக்காகவும் இந்நிதி பயன்பட்டது. தமிழ்நாட்டில் ஆலத்தம்பாடி, நாயக்கன்பாளையம், மகாராஜபுரம், சத்திரப்பட்டி,

காரடார்ந்தகுடி, உத்திரமேரூர் போன்ற மையங்களில் புதிய நிர்மாண நிறுவனங்கள் உருவாகவும் நிதி பயன் பட்டது. சென்னையில் காந்தி இலக்கியங்களைத் தொகுத்து பல தொகுதிகளாக வெளியிடுவதற்கென திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் 1000 பக்கங்களுக்கும் மேல் பக்கங்கள் கொண்ட 17 தொகுதிகள் வெளியிடப்பட்ட காந்தி இலக்கியம் தமிழகத்திலுள்ள அனைத்து நூல்நிலையங்களிலும் இடம் பெற்றன. இவ்வெளியீடுகள் தொகுத்தளிக்கும் பணியை ஏற்றுத் திறம்பட நடத்தியவர் ஐயா அவர்களுடன் நெருங்கி வளர்ந்த ஆசிரியர் திரு. அ. ராமசாமி ஆவர்.

மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் அப்போதய துணைவேந்தர் டாக்டர் திரு. தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் துணைக்கொண்டு பல்கலைக் கழகத்தில் காந்தியத் தத்துவத்துறை ஒன்று நிறுவவும் காந்தி நிதி பயன்பட்டது. அத்துறை இன்று விரிவாக்கம் பெற்று எம்.எஸ்ஸி. (அமைதிக் கல்வி) மேற்பட்டப் படிப்பு அளிக்கும் துறையாக வளர்ந்திருக்கிறது. காந்தி சிந்தனை நற்சான்றிதழ், டிப்ளமா வழங்கும் தேர்வுகளும், தபால் மூலம் எம்.ஏ. பட்டம் வழங்கவும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் நடத்த முன்வந்துள்ளதற்கு ஐயா அவர்கள் இட்ட விதை காரணமாகும். பல்கலைக் கழகத்தின் இத்துறைக்கு கௌரவத் தலைவராக இன்று காந்தி நினைவு நிதித் தலைவர் திரு. க. அருணாசலம் அவர்கள் இருந்து வருவதை இங்கு குறிப்பிட வேண்டும்.

1954ஆம் ஆண்டு காந்தி நினைவு நிதிக்குழு தில்லியில் கூடி இந்தியாவின் நான்கு முக்கிய மையங்களில் காந்தி நினைவாலயங்கள் நிறுவவேண்டும் என்று ஆலோசனை நடைபெற்றபோது தென் பிராந்தியத்தில் எந்த இடத்தில்

எங்கு நிறுவுவது என்ற கேள்வி எழுந்தது. ஆந்திரம் கன்னடம், கேரளம் ஆகிய மாநிலங்கள் தங்கள் தலை நகரங்களில் அதனை நிறுவ வேண்டும் என்று கோரின. ஐயா அவர்களின் கருத்து கோரப்பட்டபோது இந் நிலையத்தை மதுரையில் நிறுவுவது மிகவும் பொருத்த மாக இருக்கும் என்பதை அவர் தெளிவுபட எடுத்துக் கூறினர். தென்னிந்திய கலாச்சாரத்துக்கு மதுரை முக்கிய நகரமாக இருப்பதாகவும், அதன் சரித்திரம் தொன்மை வாய்ந்ததென்றும், மதுரை ஒரு கோவில் நகரமென்றும், காந்தியடிகள் மதுரையில்தான் தமது ஆடையில் பெரும் மாற்றம் செய்தார். ஆகவே மதுரை பொருத்தமான இடம் என்றும் விளக்கினர். அதனை ஏற்று தென் பிராந்தியத்தின் காந்தி நினைவாலயத்தை மதுரையில் நிறுவ காந்தி நினைவு நிதிக் குழு ஏற்றுக் கொண்டது.

ஐயா அவர்களுக்கு உறுதுணையாக அப்போது தமிழகத்தின் முதல்வராக இருந்த காமராஜ் அவர்கள் மதுரையில் மாவட்ட ஆளுநரின் வாசஸ்தலமாகப் பயன் படுத்தப்பட்டு வந்த தமுக்கம் பங்களாவை காந்தி நினை வாலயத்துக்கு அர்ப்பணித்தார். தமுக்கம் பங்களா திருமலை நாயக்கர் ஆட்சியின் வழிவந்த ராணி மங்கம் மாளின் கோடைவாசஸ்தலமாக இருந்த ஒரு அரண்மனை. அந்த அரண்மனையும் இணைந்த 13 ஏக்கர் நிலமும் இதற்கு வழங்கப்பட்டது. நினைவாலயம் நிறுவுவதற்கு ஏற்ப லட்சக் கணக்கான நிதி செலவு செய்து சீர்திருத்தம் செய்து, அதன் முக்கிய ஊரியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் அமைத்துக் கொடுத்து, அதற்கென ஒரு நிர் வாகக் குழுவும் அமைத்துக் கொடுத்த சாதனை ஐயா அவர்களைச் சேரும். காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும்

தொடர்பான காட்சிகளும் அடிகள் பயன்படுத்திய பொருள்களும், அவர் சேவாகிராமத்தில் வாழ்ந்த குடிசையின் மாதிரியும், காந்தி சிந்தனைப் பற்றி உலகெங்குமுள்ள சிந்தனையாளர்கள் எழுதியுள்ள நூல்களைக்கொண்ட ஒரு சிறந்த நூல்நிலையம் ஒன்றும் இந்நினைவாலயத்தில் இடம் பெற்றுள்ளன. இதனை 1959ஆம் ஆண்டு பாரதப் பிரதமராயிருந்த ஜவஹர்லால் நேரு திறந்து வைத்து வாழ்த்தினார். ஐயா அவர்கள் வாழ்க்கையில் இது ஒரு குறிப்பிடத்தக்க ஒரு மைல் கல்லாகும்.

காந்தி சிந்தனைகளைக் குறித்து ஆராயவும், அவரைப் பற்றிய நூல்களைப் படித்து விவாதிக்கவும், சிந்தித்து அதன்வழி வாழ முயலவும் உதவும் பாங்கில் மதுரையில் காந்தி மன்றம் என்ற பெயரில் ஐயா அவர்கள் ஒரு நிறுவனத்தை உருவாக்கினார். அதன் உறுப்பினர்கள் வாரந் தோறும் சனிக்கிழமையன்று கூடி விவாதித்து வருகின்றனர். 1951ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் நாள் துவங்கப் பெற்ற இம்மன்றம் இன்று வரை தவறாது கூடி காந்திய சிந்தனை பயின்று வருகிறது. மதுரையில் இருந்தபோதெல்லாம் ஐயா அவர்கள் காந்தி மன்றக் கூட்டத்தைத் தவறவிட்டதில்லை: இந்த நிறுவனத்தை நடத்தத் தேவையான நிதி முழுவதையும் அவரே கொடுத்துதவி வந்தார்.

மதுவிலக்குத் திட்டத்தில் ஐயா அவர்கள் எத்தனை ஈடுபாடுடையவராக இருந்தார் என்பதை இந்நூலின் முன்பகுதியில் ஏற்கனவே கூறியிருக்கிறோம். மதுவிலக்கு, தீண்டாமை விலக்குப் பணியுடன் இணைந்ததாகும். ஏனெனில் அக்காலத்தில் அரிஜன மக்கள் பெரும்பாலோர் மதுப் பழக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்தனர். தங்கள் வருவாய் அனைத்தையும் குடிப்பழக்கத்துக்கு இரையாக்கி

வந்தனர். ஆகவே மதுவிலக்குப் பணி அரிஜன மேம் பாட்டுப் பணியுமாகிறது என்பதை ஐயா அவர்கள் கருதி மதுக்கடை மறியல் சத்தியாகிரகத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அதற்கு அவர் தொண்டர்களைத் தயார் செய்து பயிற்சி அளித்து வரிசை வரிசையாக அனுப்பிக் கொண்டிருந்ததையும், இறுதியில் தாமே சிறை சென்றார் என்பதையும் முன்னர் பார்த்தோம்.

மாகாண சுயாட்சிக் காலத்தில் ராஜாஜி சென்னை மாகாண முதல்வராக இருந்தபோது பரிட்சார்த்தமாக சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு திட்டத்தைச் செயல் படுத்தினர். அத்திட்டத்தைத் தமிழகமெங்கும் அமல் படுத்த வேண்டும் என்று சட்ட மன்றத்தில் ஐயா அவர் கள் கோரிக்கை விடுத்தவண்ணமிருந்தார். இதனிடையே 1939-இல் யுத்தம் தொடங்கியபோது ஆங்கில ஆட்சி யுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக ராஜாஜி பதவி விலகினர். பின்னர் சுதந்திரம் பெற்றதும் மீண்டும் ராஜாஜியே முதல்வரானர். அவர் தமது முதல் வேலையாக மதுவிலக்கைத் தமிழகம் முழுதும் அமல்படுத் தினர். அவருக்கு உற்ற துணையாக இருந்தவர்களுள் ஐயா அவர்கள் முக்கியமானவர். மதுவிலக்கு வெற்றி பெற மதுரை மாவட்டம் முழுதும் ஐயா அவர்கள் சுற்றிப் பிரசாரம் செய்தார்.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் தமிழகத்தில் தோல்வியுற்றது. அத்தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் அண்ணுதுரை அவர்கள் முதல்வராக இருக்கும்வரை மதுவிலக்கு அமுலில் இருந்தது. அவரது மறைவிற்குப் பின்னர் தமிழக அரசு மதுவிலக்கைக் கைவிட்டது. அது கண்டு நல்ல உள்ளங்கள் அனைத்தும் வேதனைக்கு உள்ளாயின. குறிப்பாக வாழ்நாள் முழுதும்

மதுவிலக்குக்காகப் பாடுபட்ட ஐயா அவர்கள்போன்றவர்கள் வேதனையால் துடித்தனர். காந்தியடிகள் தலைமையில் அவரது தொண்டர்கள் செய்த தியாகம் பலனற்றுப் போய்விட்டதே என்று மனம் வருந்தினர். தமிழகமெங்கும் கள்ளுக்கடைகள் திறக்கப்பட்டதையும் அதனால் பல இளைஞர்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாகிச் சீரழிந்து கொண்டிருப்பதையும் காண அவரால் சகிக்க இயலவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மதுக்கடை மறியல் செய்ததைப்போல் மீண்டும் செய்ய வேண்டும் என்று அறிக்கை வெளியிட்டார். 1971ஆம் ஆண்டு ஐயா அவர்கள் தலைமையில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன் உண்ணுவிரதம் இருப்பதென முடிவுசெய்யப்பட்டது. அவ்வாண்டு ஜூலை மாதம் 15 ஆம் நாள் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுடன் ஐயா அவர்கள் உண்ணுவிரதமிருந்தார். அப்போது அவருக்கு வயது 65. அவரது உடல் நிலையும் தளர்ந்திருந்தது. அரசு ஐயா அவர்களைக் கைது செய்யத் துணியவில்லை. மீண்டும் தமிழகத்தில் மதுவிலக்கை அமல்படுத்துமாறு செய்ய இயலாமை குறித்து அவர் தமது ஆயுட்காலம் இறுதிவரை மனம் வருந்திய வண்ணமிருந்தார்.

காந்திய நிர்மாணப் பணிகள் ஐயா அவர்களுக்கு மிகவும் பிரியமானவை. நிர்மாணப் பணிகளில் பங்கு பெறும் ஊழியர்களிடம் அவருக்கு அன்பும் வாஞ்சையும் உண்டு. அவர்கள் தம்மைப் பார்க்க வரும்போதெல்லாம் தம்முடன் உணவருந்திச் செல்லுமாறு அழைப்பார். அவர்களைத் தமக்கு அருகில் சமமாக உட்கார வைத்து உணவு பறிமாற ஏற்பாடு செய்வார். அவர்களது குடும்ப இன்ப துன்பங்களில் பங்கு பெறுவார். அவர்களின் துன்பங்களைப் போக்குவதில் சிரத்தை கொள்ளுவார்.

குறிப்பாக மதுரை மாவட்டத்திலுள்ள நிர்மாண ஊழியர்கள் அனைவரையும் தனித்தனியே நன்கு அறிவார். அவர்களது குடும்பங்களையும் அறிவார். ஊழியர்கள் அவரைத் தங்கள் பாதுகாவலராகப் பாவித்து மகிழ்வர். அவரைத் தங்கள் தெய்வமாகவே கருதினர்.

நிர்மாண ஊழியர் பயிற்சியில் ஐயா அவர்கள் சிறப்பான சிரத்தை எடுத்துக் கொண்டார். குறுகிய கால பயிற்சி முகாம்கள் நூற்றுக்கணக்கில் அவர் நடத்தியிருக்கிறார். ஊழியரகத்தில் இரண்டாண்டு பயிற்சி நடத்துமாறு செய்தார். ஆண்டுதோறும் மதுரை மாவட்ட நிர்மாண ஊழியர்கள் மாநாடு நடத்தினர். பின்னர் தமிழ் மாநில மாநாடும் நடத்த உதவினர். மாநாடுகள் மூலம் நிர்மாண ஊழியர்களை உற்சாகமூட்டுவார், அவர்களுக்கு ஊக்கமளிப்பார். இதுபோன்ற மாநாடுகள் கிராமப் புறங்களில் நடைபெற வேண்டும் என்று விரும்புவார். எந்த இயக்கத்துக்கும் தலைவர்களை விட ஊழியர்களே ஆதாரம் என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

அரசியலை அவர் ஒதுக்கினவர் அல்ல. ஆயினும் அவரது மனம் அரசியலைவிட நிர்மாணப் பணிகளில் நாட்டம் கொண்டிருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் அவரது மனம் அரசியலில் உள்ள நாட்டம் தளர்ந்தது. ஆயினும் நிர்மாணப் பணிகளில் அவரது ஈடுபாடு பன்மடங்கு அதிகமாயிற்று. ஒரு காலக்கட்டத்தில் பத்தாண்டுக்காலம் அவர் தீவிர அரசியலிலிருந்து விலகி பின்னர் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் பிரதமர் ஜவஹர்லால்-நேரு அவர்களின் தூண்டுதல் காரணமாக அரசியலுக்கு வேண்டா விருப்புடன் வந்தார் என்ற விபரம் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. ஆனால் ஒரு

போதும் நிர்மாணப் பணிகளிலிருந்து அவர் மனம் தளர்ந்ததில்லை. தமது வாழ்நாள் இறுதிவரை நிர்மாணப் பணிகளோடு தொடர்பு கொண்டிருந்தார். அவர் உடல் தளர்ந்த நிலையில் படுக்கையில் இருந்த காலத்தி லும்கூட நிர்மாண ஊழியர்களைக் கூப்பிட்டழைத்து அவர்களுடன் அவர்களது பணிகளைக் குறித்து கேட்டறி வதில் மகிழ்ச்சி கண்டார். ஏனெனில் நிர்மாணம் அவரது ரத்தத்துடன் கலந்தது என்றே கூறலாம். பகவத்கீதை யின் மொழியில் கூறுவதானால் அது அவரது சுதர்மமாக அமைந்திருந்தது.

அரசியலில் ஆர்ப்பாட்டம் உண்டு. ஆரவாரம் உண்டு. ஆகவே மக்களின் கவனம் அதன்பால் ஈர்க்கப் படுகிறது. அதன் பயனாக அரசியலில் பெயரும் புகழும் கிடைக்கிறது. அரசியல் பணி புரட்சிகரமானதைப் போன்று வெளித் தோற்றத்தில் ஸ்தூலமாகத் தோன்று கிறது. ஆனால் நிர்மாணப் பணி அவ்வாறு தோன்று தில்லை. அது அமைதியாக நடப்பதால் அதில் புரட்சித் தன்மை இல்லாததைப்போல் தோன்றுகிறது. உண்மை யில் நிர்மாணப் பணியில்தான் ஆழ்ந்த புரட்சி இருக் கிறது என்பதை ஐயா அவர்கள் போன்ற அறிஞர்கள் அறிந்திருந்தார்கள். கடல் அலைகள் ஆர்ப்பரித்து அவையே கடல் முழுவதையும் கவர்ந்திருப்பதைப்போல் தோன்றுகின்றன. கடலைப் பார்ப்போர் அனைவரும் கடலை அலைகளாகவே பாவிக்கிறார்கள். உண்மையில் அலைகள் கடலின் ஒரு சிறு பகுதியே. கடலின் பெரும் பகுதி அதன் ஆழப்பகுதி என்பது ஸ்தூலமாகத் தெரிவதில்லை. ஆழக் கடலில்தான் முத்தும் பவளமும் மற்றும் கடற்செல்வம் அனைத்தும் இடம் பெற்றிருக்கின்றன. அலைகளிலோ தூசும் குப்பை கூழங்களும்தான் இருக்கின்றன. அரசியல்

கடல் அலை போன்றது என்றால் நிர்மாணத் திட்டங்கள் ஆழக்கடல் போன்றதாகும். இவையே உண்மையான புரட்சித் தன்மையுடையவை. இவ்வுண்மையை ஐயா அவர்கள் நன்கு அறிந்திருந்தார்.

1947-ஆம் ஆண்டு முதல் சுதந்திர நாளைக் கொண்டாடிய தினத்தன்று மதுரையில் தலைமை வகித்த ஐயா அவர்கள் இக்கருத்தை வலியுறுத்தினார். அரசியல் தொண்டர்களும் தலைவர்களும் காந்தியடிகள் அளித்த நிர்மாணத் திட்டங்களை அந்தரங்க சுத்தியுடன் செயலாற்றியிருப்பார்களானால் இந்த தேசம் பாரதம் என்றும் பாகிஸ்தான் என்றும் பிளவுபட்டிருக்காது என்று கூறினார். காந்தியடிகள் வெறும் அரசியல்வாதியல்ல, அவர் ஆன்மீகவாதி. அதனால் அவர் அரசியல் போராட்டத்தோடு கூடவே நிர்மாணத் திட்டங்களையும் நம் கைகளில் கொடுத்தார். அவற்றை நம்மில் எத்தனை பேர் அந்தரங்க சுத்தியுடன் ஏற்றுச் செயல்பட்டோம்? மிகச் சிலரே.. அதன் காரணமாக நமது தேசம் இரண்டாகப் பிளவுபட்டுப் போயிற்று என்பதை ஐயா அவர்கள் மக்களுக்கு எடுத்துரைத்தார். இந்த அரைகுறையான சுதந்திரத்தையேனும் முழுமைபெறச் செய்ய வேண்டுமானால் இனிமேலாவதுஅரசியல் ஆர்பாட்டங்களில் அதிக நாட்டம் கொள்ளாமல் நிர்மாணப் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். கடந்தகால படிப்பினையை மறந்து மீண்டும் காந்தியடிகளின் சத்தியம், அகிம்சைக் கோட்பாட்டையும் நிர்மாணப்பணிகளையும் உதாசீனப்படுத்துவோமானால் நமது நாடு மற்றும் பல பிரிவினைப் போக்குகளுக்கு இடமளித்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்து உண்டாகும் என்பதை அன்றே ஐயா அவர்கள் தீர்க்கதரிசனம் கூறுவதைப்போல் மக்களுக்கு எச்சரித்தார். இதிலிருந்து

அவர் நிர்மாணப் பணிகளில் எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை நாம் அறியலாம். சுதந்திர தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அந்நாளில் காந்தியடிகள் அதில் கலந்து கொள்ளாமல் தனித்திருந்து உண்ணுநோன்புடனும் பிரார்த்தனையுடனும் மௌனமாயிருந்ததை ஐயா அவர்கள் சுட்டிக்காட்டியது அன்று மதுரை மக்களைச் சிந்திக்கச் செய்தது. நிர்மாணத் திட்டத்தின் முக்கியத்துவத்தை அன்றைய கூட்டத்தில் விளக்கியதை மக்கள் கூர்ந்து கேட்டனர்.

நிர்மாணப் பணிகளை ஸ்தூலமாகவோ அல்லது ஒரு சடங்காகவோ செய்வது ஐயா அவர்கள் மேற்கொண்ட அணுகுமுறையல்ல. அவற்றின் கர்த்தாவான காந்தியடிகள் அவற்றின் மூலம் புரட்சிகரமான மாற்றம் என்ன விரும்பினுர் என்பதை அறிந்து செயல்படுத்த அவர் முயன்றுர். அவற்றிக்கெல்லாம் ஆதார சுருதியான சத்தியம் அன்பு அவற்றில் ஒலிக்கிறதா என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். சாதி, மத, இனபேத மற்ற, பொருளாதார, சமுதாய ஏற்றத்தாழ்வற்ற சர்வோதய சமுதாய அமைப்புக்கு நிர்மாணத் திட்டங்கள் ஆதாரமானவை என்பதை மனதிற்கொண்டு அவர் செயல்பட்டு வந்தார். இவற்றில் ஈடுபடுகிற ஊழியர்களும் தலைவர்களும் தங்கள் வாழ்க்கையில் இது பிரதிபலிக்கிறதா என்பதை உள்முக நோக்கிப் பார்க்குமாறு நிர்மாண ஊழியர் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் கோரிக்கை விடுப்பார். அதுபோல் அவர் தமது வாழ்வை புடமிட்டுப் பார்க்கத்தவறவில்லை. தம்மால் ஆகாததை அவர் ஒருபோதும் பிறருக்கு உபதேசித்ததில்லை. இவ்வாறு ஐயா அவர்கள் தமது அரசியல் வாழ்விலும் நிர்மாணத் தொண்டிலும் நாள்தோறும் சத்திய சோதனை செய்த வண்ணமிருந்தார். □

9. இறுதி நாட்கள்

இளமைப் பருவ முதலே ஐயா அவர்கள் தம்மைக் கடுமையான தவத்துக்கு ஆளாக்கி வந்தார் என்னலாம். அக்கரு அவரது பிள்ளைப் பிராயத்திலேயே தெரிய வருகிறது. எத்தனை சுவையுடைய உணவாயினும் அதை சுவைக்காக உண்ணமாட்டார். பசி ஆற்ற அது தேவை என்ற அளவில் உண்ணுவது அவரது இயல்பாக இருந்தது. விழாக் காலங்களில் பிள்ளைகள் தங்களுக்கு விருப்பமான தின்பண்டங்கள் வாங்கிப் புசிப்பதும், தங்களைக் கவரும் விளையாட்டுச் சாமான்களை வாங்குவதும் இயற்கை. இதற்கு மாறுபட்டவர் ஐயா அவர்கள். அவருடைய பெற்றோர் அவருக்கும் அவருடைய சகோதரர்களுக்கும் விழாக்காலச் செலவுகளுக்காகப் பணம் கொடுப்பதுண்டு. செல்வந்தர் வீட்டுக் குழந்தைகளாதலால் கைநிறையக் காசு கிடைக்கும். ஆயினும் ஐயா அவர்கள் அதைச் செலவு செய்யத் தெரியாதிருப்பார். கஞ்சத்தனம் அல்ல காரணம். தெருவில் விற்கும் பண்டங்களை வாங்க அவருக்கு மனமிருப்பதில்லை. பிற்காலத்தில் அவர் தமது பொருள்களை நலிந்தோருக்கு வாரி வழங்கியிருக்கிறார். அவர் சிக்கனம் என்ற தெய்வீகமான குணத்தை தமது பிறவிலேயே பெற்றிருக்கிறார். ஆகவே விழாக்காலம் முடிந்ததும் பெற்றோர் கொடுத்த பணத்தை அவர் களிடமே திரும்பக் கொடுத்துவிடுவார் என்று முதல் அத்தியாயத்தில் கூறியிருக்கிறோம்.

ஆகவே விரதம் மேற்கொள்ளுவது அவருக்கு இயல்பாகவே இருந்து வந்திருக்கிறது. சில வேளைகளில் தமது தகுதிக்கும் வயதுக்கும் அதிகக் கடுமையாகவே விரதம் மேற்கொள்ளுவதுண்டு. திருமணமாகி பல ஆண்டுகள்

கடுமையான பிரமச்சரியம் மேற்கொண்டிருந்த விபரம் கூறப்பட்டுள்ளது. பிரமச்சரியத்தை உபதேசித்து வந்த காந்தியடிகளே அவரை இல்லறத்தில் பிரவேசிக்குமாறு பரிந்துரை செய்ய வேண்டியிருந்தது என்று பார்த்தோம். அதுவும் ஒரே ஒரு குழந்தை பெறும் அளவிற்கே ஐயா அவர்கள் இணங்கினுர். காந்தி அடிகள் குறுக்கிட்டிரா விட்டால் அவர் ஆயுள் பரியந்தம் பிரமச்சரியாகவே இருந்திருப்பார் போலும்! இதன் விளைவு அவர் கடுமை யான தவத்துக்கு ஆளானுர். தமது உடம்பைப் பேணிக் காப்பதில் தவறிவிட்டார் என்று நமக்குத் தோன்றுகிறது. உடம்பை அதிகம் பாராட்டி அதற்குப் பூஜை செய்து வளர்த்து அதன் அடிமையாகிக் கிடப்பவர் பலர். ஐயா அவர்கள் அதற்கு எதிரிடை. உடம்பைப் பட்டினி போட்டுத் தவத்துக்கு ஆளாக்கி சோதனைக்குள்ளானுர். அதன் தகுதிக்கும் அதிகமாக அதனிடம் வேலை வாங்கினுர். அவர் பொதுஜன சேவையில் புகுந்தபின் ஊண், உறக்க மின்றி இயங்கிய வண்ணமிருந்தார். அவர் தமது இளமைப் பிராயத்திலேயே சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டவர். தமது 18ஆம் வயதில் மதுரை காங்கிரஸ் குழுவின் தலைவராகிவிட்டார். அவரது கடின உழைப்புக்கு வரையரை இல்லாமற் போயிற்று. இதற் கிடையில் அவர் இரண்டு முறை கடுங்காவல் தண்டனை அனுபவிக்க நேரிட்டது. சிறையில் தமக்கென சிறப்புச் சலுகை எதுவும் கோர அவர் மறுத்தார். இத்தியாதி காரணங்களால் அவரது உடல்நிலை நாளுக்கு நாள் குன்றிக்கொண்டிருந்தது.

சிறையிலிருந்து விடுதலை பெற்று ஊர் திரும்பும் போதெல்லாம் அவரது உடல்நிலை கவலைக்குரியதாகவே இருக்கும். குடும்பத்திலுள்ளவர்களும் நண்பர்களும்

சிறிது நாட்கள் ஓய்வெடுத்தபின்னர் பொதுப் பணியைத் துவங்குமாறு மன்றுடுவதுண்டு. ஆயினும் அதற்கு அவர் இணங்குவதில்லை. இரண்டாம் முறை அவர் சிறையிலிருந்து விடுதலை பெற்று மதுரை திரும்பும்போது அவரது நண்பர்கள் அவரைத் திண்டுக்கல்லில் வழி மறித்து உடல் நிலை தேறும்வரை மதுரை திரும்பக் கூடாது என்று தடுத்து நிறுத்தினர். அந்த சமயம் மதுரை நகரில் இந்து முஸ்லிம் கலகம் உருவாகும் நிலைபற்றிக் கேள்விப்பட்டதும் திண்டுக்கல்லைவிட்டு மதுரை திரும்பி தெருத் தெருவாக வகுப்பு ஒற்றுமை கோரி கூட்டங்கள் போடுவதில் ஆழ்ந்து தமது உடல் ஓய்வைப் பலியிட்டார். இவ்வாறு அவரது உடல் நலம் நலிந்து கொண்டிருந்தது.

1975க்குப் பின்னர் அவரது உடல் மிகவும் தளர்வுற்றது. அப்போது அவருக்கு வயது 70. 1977ஆம் ஆண்டில் திருமதி பார்வதவர்த்தினி அம்மையார் இறைவனடி சேர்ந்தார். அதற்கு முன்னரே அவரது ஒரே மகள் சீதாபாய் தவறிவிட்டார். இப்போது குடும்ப அளவில் அவர் தனிமைக்கு ஆளானுர். அவரைச்சுற்றி ஏராளமான பொது மக்களும் ஊழியர்களும் இருந்த போதிலும் அவருக்குத் தனிமை உணர்வு இருக்கவே செய்தது. அவரால் இனிமேல் அதிகமாக வெளியில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. ஆகவே தாம் வகித்து வந்த அனைத்துப் பொறுப்புக்களையும் துறந்துவிடத் தீர்மானித்தார். தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, காந்தி நினைவாலயம், காந்திநிகேதன் ஆசிரமம், தமிழ்நாடு ஆதாரக் கல்விச் சங்கம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலயம், தமிழ்நாடு நிர்மாண ஊழியர் சங்கம், ஊழியரகம் இன்னோரன்ன நிறுவனங்களில் தாம் வகித்து வந்த பொறுப்புக்களை ராஜினுமாச் செய்தார். எனினும்

சில நிறுவனங்கள் ஐயா அவர்கள் பெயர் மாத்திரமே தங்களைக் கண்காணித்து வழிநடத்தப் போதுமானது என்று அவரது ராஜினமாவை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டன. அந்நிறுவனங்கள் நிர்வாகக் குழுக் கூட்டங்களை ஐயா அவர்கள் தங்கியிருக்கும் பங்களாவில் கூட்டி அவரது ஆலோசனைகளைப் பெற்றுவந்தன. பிற நிறுவனங்களில் நிர்வாகத்தினர் அவ்வப்போது தங்கள் வேலைத் திட்டங்களைக்குறித்தும் அவற்றின் வளர்ச்சி குறித்தும் கூறினுல் அதைக்கேட்டு அவர் மகிழ்வதுண்டு.

1980க்குப் பின்னர் அவர் படுக்கையிலேயே இருக்க நேரிட்டது. அவருடனிருந்த ஊழியர்கள் அவரை அன்புடன் பராமரித்தனர். உடல் நலிவைத் தவிர அவரது உள்ளம் நிறைவு பெற்றிருந்தது. நாள்தோறும் நண்பர்களும் ஊழியர்களும் வந்து அவரைப்பார்த்து ஆசி பெற்றுச்சென்று கொண்டிருந்தனர். புன்முறுவல் பூத்த முகத்துடன் அனைவரையும் வரவேற்ருர். தமது படுக்கைக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த ஆசனங்களில் உட்காருமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுவார். அவரைப் பராமரிக்கும் ஊழியர்களுக்கு அவர் விதித்திருந்த ஒழுங்குப் பிரகாரம் வந்திருக்கும் அனைவருக்கும் இனிய பிஸ்கட்டுகள் வழங்கப் பெறும். அவரால் எதுவும் புசிக்க முடியாத போதிலும் பிறர் புசிக்கப் பார்ப்பதில் அவருக்கு அத்தனை மகிழ்ச்சி. அந்த வேளையிலும் நன்கொடை கோரிவருவோர் உண்டு. நிதி உதவி வேண்டி வருவோர் உண்டு. தம்மை நாடி வருவோர் அனைவருக்கும் இல்லையெனது கொடுத்துக் கொண்டே இருந்தார். தம்மைப் பார்க்க வருகிற அனைவரையும் புன்முறுவலோடு வழியனுப்பி வைப்பார்.

அவரது உடல்நிலை மோசமாகிக் கொண்டிருந்தாலும் அவரது முகம் புன்முறுவல் பூத்தவண்ணம்

தெளிவாகவும் பிரகாசமாகவும் இருந்தது. அவரது உடல் வலியை பிறருக்குக் காட்டிக் கொள்ளவில்லை. அதனால் தம்மைப் பார்க்க வருகிறவர்களின் மனம் வருந்துமே என்ற எண்ணத்தால் அதை அவர் வெளிப் படுத்திக் கொள்ளுவதில்லை. அத்தனை மனவலிமை அவரது இறுதிநாள்வரை இருந்து வந்தது ஆச்சரியமே. நீண்ட காலமாக, இளமைப்பிராய முதலே அவர் பயின்று வந்த ஆன்ம பலம் அவருக்கு இறுதிவரை கைகொடுத்தது.

''தங்கள் உடல் நலிவையும் வலியையும் இத்தனை அடக்கமாக எவ்வாறு தாங்கிக் கொள்ளுகிறீர்கள்'' என்று அவரிடம் கேட்டபோது முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக்கொண்டு, ''எனது இளமைப் பிராய முதலே பகவத் கீதையில் மனனம் செய்து வந்தவற்றுள் ஆத்ம விவேகம் பற்றிய சுலோகங்கள் எனக்கு உதவிவருகின்றன. அந்த சுலோகங்களை நான் என் மனதுக்குள் கூறிக்கொள்ளும் போது நான் எனது உடல் வேதனையை உணர்வதில்லை'' என்று சுருக்கமாகக் கூறினார். அவர் அப்போது அதிகமாகப் பேசுவதற் கில்லை. சுருக்கமாகக் கூறிய போதிலும் நமக்கு அந்த அனுபவபூர்வமான அவரது சொற்கள் சிறந்த விலைமதிக்க முடியாத அறிவுரையாகும். பீஷ்மாச்சாரி யார் தமது இறுதிக் காலத்தில் அம்புப்படுக்கையில் படுத்தவண்ணம் பஞ்ச பாண்டவர்களுக்கு உபதேசம் செய்ததாக மகாபாரதத்தில் ஒரு நிகழ்ச்சி வருணிக்கப் பட்டுள்ளது. நூல்களைப்படித்து நீண்ட வசனங்களுடன் செய்யப்படும் உபதேசத்தை விட அனுபவபூர்வமான எதார்த்த நிலையில் உபதேசிக்கப்படும் வசனங் களுக்கு ஆயிரம் மடங்கு வலிமை உண்டு. ஐயா அவர்கள் தமக்கு விபரம் தெரிந்த நாள் முதலே

அனுபவபூர்வமாகத் தெரிந்தவற்றையே பிறருக்குக் கூறுவார். புகழுக்காகவோ பிறர் தம்மைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவோ அவர் எதையும் மிகைப் படுத்திக்கூறி அறியார். உபதேசத்தைவிட உண்மை அனுபவமே சிறந்தது என்ற கோட்பாட்டை அனுசரிப்பவர் அவர். காந்தியடிகளோடு தொடர்பு கொள்ளக் கிடைத்த நாள் முதல் இப்பாங்கு அவரிடம் மேலும் உறுதிப்பட்டது. இதனை மனதிற் கொண்டு பார்க்குமிடத்து அவர் கூறிய இவ்வார்த்தைகள் அனுப்வபூர்வமான வேத வசனங்களாகும்.

கீதையில் ஆத்ம அனாத்ம விவேகம் பற்றிக் கூறப் பட்டுள்ளது. அதன் இரண்டாம் அத்தியாயத்தில் உடல் மற்றும் ஆன்மா பற்றிய சாங்கிய யோகம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. உடல் வேறு, ஆன்மா வேறு. உடல் நானல்ல, நான் ஆன்மா. உடல் இந்தப் பிறவியில் எனக்குப் போர்த்தப்பட்ட ஒரு சட்டை. இன்னும் நான் எத்தனையோ சட்டைகளை அணிய வேண்டியவனாக இருக்கிறேன். இந்த உடல் அழியக் கூடியது. அதை இந்தப் பிறவியின் இறுதியில் விட்டுவிடவேண்டியவன் நான். ஆன்மா அழியாதது. ஆன்ம சொரூபியான நான் இந்த சட்டை போன்ற உடலை விட்டுவிட்டு இன்னொரு புதிய சட்டையை அணியவேண்டியவனாவேன். இக்கிழிந்துபோன பழைய சட்டைக்காக நான் ஏன் வருந்தவேண்டும்? எப்படி முற்றிய கொட்டை அதன் தோல் பருப்புடன் தொடர்பற்றுப் போகிறதோ அது போல் இவ்வுடலை ஆன்மாவுடன் தொடர்பற்றதாய் பார்க்கிறவன் ஞானி. உடல் வேறு ஆன்மா வேறு என்று உணரும் ஆத்ம அனாத்ம விவேகம் இது. இக் கருத்தைக் கூறுவது கீதையின் மையமான கருத்து.

இதை பல்வேறு கோணங்களில் விளக்குவதற்காக கூறப்பட்டவை கீதையின் இதர அத்தியாயங்கள். ஆகவே இந்த விவேகமும் நிலைத்த மதியைப் புலனடக்கத்தோடு கர்மம் புரியும் வல்லமையும் பயிற்சியும் பெறவேண்டும் என்பதற்காகவே கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில் வரும் ஸ்திதப்பிரக்ஞனின் லட்சணங்களைக் கூறும் 18 சுலோகங்களை காந்தி வழி ஆசிரமங்கள் அனைத்திலும் காலை மாலைப் பிரார்த்தனைகளில் தவறாது ஓதிவருகிறார்கள் அவ்வழி பயின்ற ஐயா அவர்களுக்கு இந்த சுலோகங்கள் துணைபுரிந்தது அவர் ஆற்றிய தவத்தின் பலனே ஆகும். ஏனெனில் பலர் அந்த சுலோகங்களைக் கூறி வந்தபோதிலும் தக்க சமயத்தில் அவை கைகொடுப்பதில்லை. தவமும் தவமுடையாருக்கே கிட்டும் என்பது மறைமொழி. இத்தவத்தைப் பெற்ற ஐயா அவர்கள் முற்பிறவியிலும் தவம் செய்திருக்க வேண்டும் என்பது இதன் உட்பொருள்.

ஐயா அவர்கள் ஆத்ம அனாத்ம விவேகம் பற்றிக் கூறிய வார்த்தைகள் நமக்கு விநோபா அடிகளை நினைவுபடுத்துகிறது. அவர் தமது இறுதி நாட்களில் இவ்வுலகத்துக்கு அற்புதமான இந்த உபதேசத்தை வியக்கத்தக்க வண்ணம் செயல்படுத்திக் காட்டினார். தமது நைந்து போன இவ்வுடல் கிழிந்து போன சட்டையைக் கழற்றிப் போடவேண்டிய தருணம் வந்துவிட்டதெனக் கண்ட அடிகள் நம் கண்முன்னே இனிமையாக அதை நழுவவிட்டுப் போன சாகசத்தைப் பார்த்தோம் அல்லவா? அது போன்ற அனுபவத்தையே ஐயா அவர்கள் நமக்கு அளித்துச் சென்றுள்ளார் என்பதை அவரது அந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. இதனைக் கூறுவது ஒருவருக்கு இலகு. அதனை ஆற்றுவது எத்தனை கடினமானது என்பதை விளக்கத் தேவை இல்லை. அதனை

ஐயா அவர்கள் பீஷ்மர் அம்புப் படுக்கையிலிருந்து உபதேசித்ததைப் போல் நமக்குக் கூறினர் என்றே இதனை மதிக்க வேண்டும். அவர் தம் உடலைத் தனித்து வைத்துப் பார்த்துப் பெற்ற அனுபவத்தைக் கூறினர். அதனின்றும் நாம் கற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதனைக் கேட்ட நாம், ஐயா அவர்கள் தமது பூதவுடலை 1983ம் ஆண்டு ஜனவரி 25ம் நாள் விட்டுப் புகளுடம்பு எய்திய செய்தி கேட்டு வருந்துவதற்கில்லை. எனினும் நமது பந்த பாசம் நம்மை இலகுவில் விடுவதற்குமில்லை. அவரது பிரிவு அவரோடு தொடர்புடைய அனைவரையும் வருத்திற்று. ஈடுசெய்ய முடியாத அவரது இடத்தை எவரால் நிரப்ப முடியும்? அவரது பிரிவு மதுரை மக்களையும் அகில இந்தியாவிலும் பரவிக்கிடக்கும் நண்பர்களையும் துக்கத்தில் ஆழ்த்திற்று. மதுரை மக்கள் திரண்டு வந்து அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர் அந்த இறுதி ஊர்வலத்துக்கு அவரது இணைபிரியாத ஆத்ம நண்பரான திரு அவிநாசிலிங்கம் செட்டியார் தலைமை தாங்கினர்.

ஐயா அவர்கள் தமது பங்களாவையும், தம்மிடம் மீந்திருந்த சொத்துக்களையும் ஏழை எளிய மக்களின் சேவைக்காக ஒரு அறக்கட்டளை நிறுவி அதனிடம் ஒப்படைக்கும் வண்ணம் உயில் எழுதி வைத்துள்ளார். நிறைந்த மனதுடன் தமது பூதவுடலையும் அதனுடன் தொடர்புடைய தமது சொத்துக்களையும் பிறருக்குப் பயன்தரத் தக்கவண்ணம் விட்டு இனிமை உணர்வுடன் இறைவனுடன் இரண்டறக் கலந்தார். அவரது ஆன்மா சாந்தி பெற்றது. ஓம், சாந்தி. ▢

10. மதுரை காந்தி

அமரர் ஐயா அவர்களை மக்கள் ''மதுரை காந்தி'' என்று அன்புடன் பாராட்டி அழைத்தார்கள். இது அவருக்கு அளிக்கப்பட்ட ஒரு விருது அல்ல. மக்கள் இயல்பாகவே அவ்வாறு பாராட்டினார்கள். காந்தியடிகளுக்குப் பிரியமானவர் என்பதற்கு மாத்திரமல்ல. காந்திய இயக்கத்தில் பங்கு பெற்றவர் என்ற காரணத்தினால் மாத்திரமுமல்ல. அவரது பொதுவாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் அவர் காந்தியடிகளைப்போல் வாழ்ந்தார் என்பதைக் குறிக்கும் பாங்கில் அவ்வாறு அழைத்தார்கள்.

அமரர் ஐயா அவர்கள் தம்மை அவ்வாறு அழைப்பதை விரும்பியதில்லை. ஒருமுறை பொதுக்கூட்டம் ஒன்றில் ஒருவர் ஐயா அவர்களை அவ்வாறு கூறிப்பிட்டுப் பாராட்டியபோது கடிந்து கொண்டார். பொதுவாகவே தம்மைப் பாராட்டுவது ஐயா அவர்களுக்குப் பிடிக்காது. பாராட்டை அவர் விரும்பியதில்லை. அவ்வப்போது அவரைப் பாராட்டும் போதெல்லாம் அவர் அதை ரசிக்கவில்லை என்பதை அவரது முகம் பளிச்சிட்டுக் காட்டும். ஆயினும் அவர் பாராட்டுக்கு முற்றிலும் உரியவர். மக்கள் அவரை என்றும் பாராட்டிக் கொண்டு தான் இருப்பார்கள். அவருக்கு எதிர்க் கட்சி வரிசையில் இருப்பவர்கள்கூட அவரது கட்சியைக் குறைகூறி விமர்சனம் செய்வதுண்டே தவிர அவரைக் குறை கூறக் கூசுவார்கள். அப்பழுக்கற்றது அவரது வாழ்க்கை.

காந்தி தமது இளமைப் பிராயத்தில் பல சோதனைகளுக்கு ஆளாகியவர். அது போன்ற சோதனைகளும்கூட ஐயா அவர்கள் வாழ்வில் குறுக்கிட்டதில்லை. அந்த

வகையில் ஐயா அவர்களின் வாழ்க்கை விநோபா அடி களின் வாழ்க்கை போலவே அமைந்திருந்தது. செல்வம் செழிக்கும் குடும்பத்தில் பிறந்தவராயினும் அவரது வாழ்க்கை துறவற வாழ்க்கை போன்று அமைந் திருந்தது. காந்தியைப் போல் ஐயா அவர்களும் பால்ய விவாகத்துக்கு ஆளானவர். ஆயினும்தாம்பத்திய உறவில் காந்தியடிகளுக்கு ஏற்பட்ட சோதனைகள் ஐயா அவர் களுக்கு ஏற்படவில்லை. புலனடக்கம் ஐயா அவர்களுக்கு இயல்பாக வாய்க்கப் பெற்றிருந்தது அதற்குக் காரணம். பிரமச்சரியத்தைக் காக்க காந்தி எத்தனை பாடுகள் பட்டார்? அதில் பலமுறை அவர் தவறினர். தமது 36ஆம் வயதில்தான் அவர் அதனை ஒரு விதமாக ஏற்கும் மனோபலத்தை உறுதி செய்ய அவரால் முடிந்தது. ஐயா அவர்களுக்கும் அது போன்ற சோதனைகள் எழும் போது அதை வெற்றி கொள்ளும் மன உறுதி இயல் பாகவே அமைந்திருந்தது. இதற்கு முன் பிறவியின் சம்ஸ்காரம் என்றுதான் காரணம் கூறமுடியும். விநோபா அடிகளுக்கு 'பிரமச்சரியம் பிறவிக் கூறுகவே அமைந்திருந் தது. இதற்கும் அதுவே காரணம்.

ஆயினும் பிரமச்சரியத்தை விரதமாக ஏற்பதற்குத் துணிவு வேண்டும். விரதம் எடுத்துக்கொள்ளுவதன் அவசியத்தை காந்தியடிகள் விளக்கமாகக் கூறியுள்ளார். "முடிந்தவரை உண்மையாயிருப்பேன்" என்பது சரி யாகாது. "முடிந்தவரை" என்ற சொல்லில் பலவீனம் தொக்கி நிற்கிறது. விரதம் ஏற்பது மனோபலத்துக்குக் கேடயம் போன்றது. ஆகவே எத்தனை பெரியவராயினும் தாம் பலவீனர் என்பதைப் பணிவுடன் ஒப்புக்கொண்டு அப்பலவீனத்தைத் தவிர்க்க விரதம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அது ஒருவரை உயர்த்தும் என்றும்

அடிகள் கூறுகிறார். ஐயா அவர்கள் தமது வாழ்க்கையில் பல விரதங்களைத் தமக்குத் தாமே ஏற்றுக்கொண்டு புடம்போட்டு உயர்ந்தவர்.

விரதம் ஏற்பதுதான் தவம் என்று அழைக்கப்படுகிறது. அத்தவ வாழ்க்கையின் களை ஐயா அவர்களின் முகத்தில் எப்போதும் படிந்தவண்ணமிருந்தது. உயர்ந்த சிந்தனையின் ரேகை அதில் படிந்திருக்கும். பொழுது-போக்கு சிந்தனையோ-செயலோ-அவரை அணுகியதில்லை. லட்சியப் பார்வை அவரது கண்களில் பிரகாசித்தது. அவரது முகத்தைக் காணுந்தோறும் ஜோதி ராமலிங்க அடிகளின் நினைவு வரும். லட்சியத்தை நோக்கிய ஏக்கம் அவரிடம் சதாகாலமும் இருந்து வந்தது. சமுத்திரத்தை நோக்கிப் பாய்ந்தோடிக்கொண்டிருக்கும் கங்கையைப் போல் அவரது பயணம் லட்சியத்தை நோக்கிய வண்ணமிருந்த காரணத்தால் விளைந்த ஏக்கம் அது. முடிவான லட்சியம் என்பது உண்மையில் தொடுவானத்தைப் போன்றது. ஆயினும் அதை நோக்கி விரைவது உயிரினங்களின் கடமை. புலனுகர்ச்சிக்கு ஆளாகும் போது இவ்வியக்கம் தடைபடுகிறது. தேங்கி நிற்கிறது. இது போன்ற தேக்கம் ஐயா அவர்களின் இயக்கத்தில் காணப்படவில்லை. இயக்கம் என்றவுடன் துலமான அசைவையோ ஆரவாரத்தையோ குறிக்காது. அது ஆன்ம நாட்டத்தின் இயக்கம். அது சூக்குமமானது. ஐயா அவர்களின் ஆளுமை அந்தப் பாங்குடையது என்பது அவரை நெருங்கித் தரிசிப்பவர்களுக்கு நிதர்சனம்.

காந்தியைப் போல் ஐயா அவர்களும் அடித்தளத்தில் கூச்ச சுபாவமுள்ளவர். அடிகளின் ''சத்தியசோதனை'' படித்தவர்களுக்குத் தெரியும். அவர் தமது கூச்சத்தால்

எவ்வாறு பல சமயம் கேலிக்கு ஆளானர் என்பதைப் பார்க்கலாம். ஆயினும் அதே கூச்சம் பல கேடுகளி லிருந்து தம்மைக்காத்தது என்று அடிகள் கூறுகிருர். "கூச்சம் என் பாதுகாப்பு" என்று தலைப்பிட்டு அதனை உறுதிப்படுத்துகிருர். அதே நிலை ஐயாவுக்கும் பொருந் தும். கூச்சம் பெரியவர்களை மதித்துப்போற்றும் பாங்கினை அவருக்கு அளித்தது. கூச்சம் அவரது வேடிக்கைக்குரிய பொழுது போக்குகளிலிருந்து விலக்கியது. இவற்றைக் காட்டிலும் தமது பேச்சை சத்திய வரம்புக்குள் சுருக்கி யது. பொதுவாக மனிதர்கள் பேச்சில் மிகைப்படுத்தும் குற்றத்துக்கு ஆளாவது சகஜம். சிறந்த பேச்சாளர்கள் என்று மக்கள் மதிக்கும் அனைவருமே இந்தக் குற்றத்துக்கு ஆளானவர்களே. உண்மையில், கூசாமல் மிகைப்படுத்தி வாய்ஜாலமாகப் பேசுகிறவர்களையே உலகம் சிறந்த பேச்சாளர் என்று போற்றுகிறது. அதன் காரணமாக பேச்சாளர்கள் நாளுக்கு நாள் அதிகமாக மிகைப் படுத்துவதில் முனையவும், அவர்களது பேச்சு அசத்தியம் நிறைந்து வழியத் தொடங்குகிறது.

காந்தியடிகளைக் காத்த கூச்சம் ஐயாவுக்கும் பாது காப்பாக அமைந்தது. வார்த்தைகளை அவர் அளந்து பேசுவார். எதனையும் மிகைப்படுத்திக்கூற அவர் கூசு வார். தாம் கூறுவது ஒவ்வொரு வார்த்தையும் சத்திய பாவனை பொதிந்ததா என்பதைக் கண்காணிப்பார். ஆத்திரத்துக்கு ஆளாகமாட்டார். அவரிடம் அறிக்கை சமர்ப்பிப்பவர்கள் எச்சரிக்கையுடன் கூறுவர். ஏனெனில் மிகைப்படுத்திக் கூறுவது அவருக்குப் பிடிக்காது என்று அவர்களுக்குத் தெரியும். சத்திய நாட்டமுள்ள அவரது கண்கள் அதை இலகுவில் இனம் காணும். கூச்சத்தால் பயன்பெற்ற ஐயா அவர்கள் தம்மோடு தொடர்புள்ள

வர்களையும் சத்திய நாட்டமுறச் செய்வார். ஐயாவைப் போன்றவர்கள் பெரிய பேச்சாளராகிவிட முடியாது. ஆனால் அவரது ஒவ்வொரு வார்த்தையையும் மக்கள் ஊன்றிக் கவனிப்பார்கள். அதில் பொழுதுபோக்கு ரசனை இல்லா விட்டாலும் நிச்சயம் சத்தியத்தின் ரசனை இருக்கவே செய்யும். காந்தியடிகளின் "கூச்சம் என் பாதுகாப்பு" என்ற சத்திய சோதனைக்கு ஐயா அவர்கள் ஒரு கண் கண்ட சாட்சி.

ஒருமுறை காந்தியடிகள் ஆசிரமத்தில் குளித்துக் கொண்டிருந்தார். ஒரு வாளி தண்ணீரில் குளித்துத் தமது துணிகளையும் அலசிப் பிழிந்துகொண்டிருந்ததை, அச்சமயம் அவரைக் காண வந்திருந்த நேருஜி ஆச்சரியத்துடன், "பாபுஜி, கங்கை நதி பாயும் இந்த தேசத்தில் தாங்கள் இன்னொரு வாளி தண்ணீரும் பயன்படுத்தலாமே"? என்று வேடிக்கையாகக் கேட்டார். அதற்கு அடிகள், "கங்கை உனக்கும் எனக்கும்தான் பாய்கின்றது என்ற நினைப்பா? அது இந்த தேசத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் சொந்தம் என்பதை அறியாயா? எனக்குரிய பங்கை மாத்திரம் பயன்படுத்தவே எனக்கு உரிமையுண்டு" என்று பதில் கூறினார். இது சிறு விஷயமல்ல. தர்மகர்த்தாத் தத்துவத்தின் ஆழ்ந்த கருத்தை இது விளக்குகிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

ஐயா சுப்பராமன் அவர்கள் இத்தத்துவத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். நிறைந்து கிடக்கும் செல்வத்துக்கு மத்தியில் எளிமையும் சிக்கனமும் பொதிந்த வாழ்க்கை வாழ்ந்தவர் அவர். தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள செல்வம் தம்முடையதல்ல என்பதை மனதில் கொண்டு வாழ்ந்தார். அச் செல்வத்துக்குத் தம்மை தர்மகர்த்தாவாகப் பாவித்துக்கொண்டு எளிய வாழ்க்கை பயின்றார்.

ஆடம்பரச் செலவுகள் எதையும் அவர் அனுமதிக்க மாட்டார், தாமும் அதற்கு இலக்காக மாட்டார். ஒவ்வொரு செலவுக்கும் அவர் விபரமான கணக்கு வைத்திருப்பார், ஒரே வரியில் அளிக்கப் பெறும் செலவு ரசீதை அவர் அனுமதிக்க மாட்டார். ஒவ்வொரு பைசாவுக்கும் செலவு விபரம் காட்டியிருக்க வேண்டும். இதனுல் ஒருவரை அவர் நம்பவில்லை என்று பொருளாகாது. அவ்வாறு செய்வதன்மூலம் பல தவருன செலவுக்கு ஆளாகாதிருக்க இது பாதுகாப்பு. இத்தனை கண்டிப்பாக இருப்பதற்காக அவரைச் சிலர் குறை கூறுவதுண்டு. ஆயினும் அதை அவர் பொருட்படுத்த மாட்டார். இதன் மூலம் தம்மை அவர் தர்மகர்த்தாவாக உயர்த்திக் கொண்ட பெருமை மிஞ்சுகிறது. அவர் காந்தியடிகளிடமிருந்து கற்றுக் கொண்ட படிப்பினைகளில் இது முக்கியமானதாகும். தமது வாழ்நாள் இறுதி மட்டும் அவர் ஒரு உதாரண தர்மகர்த்தாவாக வாழ்ந்து காட்டினுர். இறுதியாகத் தம்மிடம் மீந்திருந்த வீட்டையும் பிற சொத்துக்களையும் அறக்கட்டளையாக்கி ஏழை எளிய மக்களின் சேவைக்கு விட்டுச் சென்றுர்.

சத்தியம் என்பது வாயால் செய்யப்படும் ''வாய்மை'' யை மாத்திரம் குறிக்காது, உடலால் செய்யப்படும் ''மெய்மையையும், உள்ளத்தால் ஒழுகும் ''உண்மையை'' யும் தம்முள் அடக்கியதாகும். இதனைத் திரிகரண சுத்தி என்று சாத்திரங்கள் கூறுகின்றன. இம்மூன்றும் இணைந்த சொல் சத்தியம். இதனை மனதிற்கொண்டு பார்க்குமிடத்து ஐயா சுப்பராமன் அவர்கள் சத்திய வாழ்க்கை வாழ்ந்தார் என்னலாம். மேற் கூறப்பட்ட மூன்றினுள் உள்ளத்தில் இயக்கம் மிகவும் முக்கியம். திருவள்ளுவர் இதனை, உள்ளத்தால் பொய்யாதொழுகுதல்'' என்றுர்

இதில் ஐயா அவர்கள் மிக எச்சரிக்கையுடன் இருந்தார் என்பதை அவரது அருகிருந்து பார்த்தவர்கள் நன்கு அறிவார்கள். இது உயர்ந்த உள்ளத்தின் பாங்கு. தாம் மேற்கொண்ட கர்மங்களில் அவர் உள்ளந்தரங்க பூர்த்தியாகத் தம்மை அதில் ஈடுபடுத்திக் கொண்டார்.

இப்பண்பினை விநோபா அடிகள் "உள்ளத்தின் இணைப்பு" என்கிறார். பகவத்கீதையின் மொழியில் இதனை "விகர்ம இணைப்பு" என்று கூறலாம். நாம் செய்யும் காரியத்தில் நமது மனம் இணையாதபோது அக்காரியம் வெறும் கூடே. இதனை விளக்க விநோபா அடிகள் பல உதாரணங்கள் கூறுகிறார். அவற்றுள் ஒன்றை மாத்திரம் கூறுவது பொருந்தும். ஒருவர் மற்றொருவரைப் பார்த்து வணங்குகிறார் என்றால், அங்கு திரிகரணங்களும் செயல்படுகின்றன. வாய் "வணக்கம்" என்று கூறுவதால் "வாய்மை" பிறக்கிறது. அவரது கைகள் மேலே உயர்ந்து குவிந்து தொழுகிறதால் "மெய்மை" நடைபெறுகிறது. இவ்விரண்டும் செயல்பட்டால் போதாது. அவரது உள்ளமும் சேர்ந்து பணிதல் வேண்டும். இல்லையேல் முந்திய இரண்டும் வீணே. அது மாத்திரமல்ல, உள்ளம் இணையாதபோது அவ்விரண்டும் மாய்மாலமாகிவிடும் ஆபத்தும் இருக்கிறது. இதற்கு மாறாக, முந்திய இரண்டும் இயங்காது போயினும் மூன்றாவதாகிய உள்ளம் இணையுமானால் ஒருவரை வணங்குவதற்கு அது போதுமானதாகிறது. உள்ளத்தின் பாங்கான, "விகர்ம இணைப்பு" இருக்கிறதே, இதுவே கர்மயோகத்திற்கு உயிர் நாடி. கர்மத்துடன் விகர்மம் சேர்ந்தால் அது அகர்மமாகிறது என்று விநோபா அடிகள் தமது "கீதைப் பேருரைகள்" என்ற நூலில் அற்புதமாக விளக்கியுள்ளார்.

இதற்கு இலக்கணமாக விளங்கியவர் ஐயா சுப்பராமன் அவர்கள். தாம் ஏற்றுக்கொண்ட பணிகள் அனைத்திலும் உள்ளம் படிந்து முழுமையாகச் செயல்படுவார். உள்ளம் படியாதபோது அதில் தலையிட மாட்டார். பெயரளவில் செயல்படுவது அவரால் முடியாது. அவரது காரியங்கள் அனைத்திலும் அவரது உள்ளம் இணைந்திருந்த காரணத்தால் அவை வெற்றி பெற்றன. காங்கிரஸ் தலைவராயினும், நகராட்சித் தலைவராயினும், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினராயினும், காந்தி நினைவு நிதித் தலைவராயினும் அவர் தம்மை அவற்றுடன் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார். பெருமைக்காகவோ வற்புறுத்தலுக்காகவோ அவர் தலைமைதாங்க மாட்டார். இது அவரது சத்திய பாவனைக்கு உதாரணமாக விளங்குகிறது.

காந்தியடிகளை அத்வைதி என்று கூறுவதுண்டு. ஏனெனில் அவர் இக வாழ்க்கை வேறு, பர வாழ்க்கை வேறு என்று அவர் கருதுவதில்லை. அதனை மேலும் தெளிவாகக் கூறுவதானால், ஆன்மீக வாழ்க்கை வேறு, அல்ல. உலகாயத வாழ்க்கையிலும், அரசியல், பொருளாதாரம், சமுதாயம் என்று வேறுபடுத்திப் பார்ப்பதையும் அவர் ஒப்பவில்லை. அதுபோல் சொந்த வாழ்க்கை வேறு, பொது வாழ்க்கை வேறு என்பதும் அவருக்கு உடன்பாடல்ல. அனைத்தும் ஒரே வாழ்க்கைதான். அதனை நாம் வெவ்வேறு கூறுபடுத்துவதால்தான் வாழ்க்கை சிக்கல் பலவற்றுக்கு ஆளாகிறது. பூஜை அறையில் இருக்கும்போது ஒரு மனிதராகவும் கடையில் கல்லாப்பெட்டிக்கு அருகில் அமரும்போது வேறு மாதிரியான மனிதராகவும் மனிதன் இரட்டை வாழ்க்கை வாழ்வதை அவர் ஏற்கவில்லை. ஆகவே அவர் அத்வைதி

யாகிறார். அதனால் மனிதருக்கு உகந்த அனைத்துத் துறைகளிலும் அவர் பங்கு பெற்றார். அரசியலிலும் ஆன்மீகம், பொருளாதாரத்திலும் ஆன்மீகம் அவரது பார்வை. ஆன்மீக அரசியல், ஆன்மீகப் பொருளாதாரம் என்று அனைத்தையும் அவர் ஆன்மீக பாவனையால் இணைத்து வாழ்க்கையை ஒருமைப்படுத்தினார்.

இதனை அளவுகோலாகக் கொண்டு ஐயா அவர்களின் வாழ்க்கையை அளக்கப் புகுவோமானால் அவர்களும் அடிகளைப்போல் அத்வைதிஎன்பதை உறுதிப்படுத்தலாம். அவர் ஆன்மீக பாவனைக்குப் புறம்பானது எதையும் ஏற்க அவர் மனம் இடமளிக்கவில்லை. நடைமுறையில் நிகழும் வியாபாரம் அவரால் ஏற்கத்தக்கதாக இல்லை. வியாபாரத்திலும் ஒரு தர்மம் இருக்கவேண்டும் என்று அவர் கருதினார். பொருள்ஈட்டுவது ஒன்றையேகுறிக்கோளாகக் கொண்ட வியாபாரத்தை அவர் ஏற்க மறுத்துவிட்டார். வியாபாரத்துறையில் அவரைப் புகுத்த முனைந்தபோது அவரது இயல்பு அதற்கு இடமளிக்கவில்லை. உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுதல் அவரால் ஆகாது. அகமும் புறமும் ஒரே தரமான பாங்குடையவர் அவர். சொந்த வாழ்க்கையில் ஆடம்பரமாகவும் பொது வாழ்வில் சிக்கனமாகவும் இருக்கவில்லை. தம்மைப் போலவே பிறரையும் அவர் நேசித்தார். அரசியலை அவர் புறக் கணிக்கவில்லை. அதில் ஒழுங்கீனம் அதிகரித்தபோது அதனின்றும் அவர் விலகி இருந்ததுண்டு. ஆனால் மனித வாழ்வில் அரசியல் தவிர்க்க முடியாதது என்பதை அவர் அறிந்திருந்தார். அரசியலில் சீர்கேடுகள் புகுந்தபோது அதை அவர் கண்டிக்கத் தவறவில்லை. அரசியலிலும் நேர்மை வேண்டும் என்பதை அவர் வலியுறுத்தினார். அரசியலிலும் காந்தி அடிகளே அவருக்கு குரு.

காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் சுதந்திரப் போராட்டத்துக்கு மதுரை நகரில் அவர் தலைமை தாங்கிய காலத்தில் காங்கிரஸ் தொண்டர்கள் அகிம்சை வழியினின்றும் பிறழ்தல் கூடாது என்பதை அடிக்கடி எச்சரித்தவண்ணமிருந்தார். சத்தியம், அன்பு பற்றி தொண்டர்களுக்கு அறிவுறுத்தும் நோக்கத்துடன் போராட்டம் துவங்குமுன்னர் அவர்களை முகாமில் வைத்து பயிற்சி கொடுக்கத் தவறியதில்லை. உணர்ச்சி வேகம் இருந்தால் மாத்திரம் போதாது. ஒழுங்கும் கட்டுப்பாடும் தேவை என்று அவர்களுக்கு அறிவுறுத்து வார். எதிரியை வெறுக்காமல் போராடும் கலையை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பார். அதுபோல் சட்ட மன்றங்களில் உள்ள சக அங்கத்தினர்களிடம் ஆன்மீக பாவனையை வலியுறுத்துவார். மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு நடைபெறும் சட்டமன்றத்தில் வீண் பொழுது போக்குப் பேச்சுக்கு இடமில்லை என்பார். சட்டமன்ற நடவடிக்கைகளில் தவறாது கலந்துகொண்டு அதில் அக்கறை செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு வார். அதுபோல் அமைச்சர்கள் தேவையில்லாத பயணங் களைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவார். ஏனெனில் அதற்கு மக்கள்தாம் படியளக்கிறார்கள் என் பதைச் சுட்டிக்காட்டுவார். அரசு ஆடம்பரச் செலவு களைத் தவிர்க்கவேண்டும் என்று அவர் கூறத் தவறவில்லை. இவ்வாறு தம்மோடு தொடர்புடைய அனைவருக்கும் ஆன் மீக ஒழுக்கத்தை அவர் அறிவுறுத்திய வண்ணமிருந்தார்.

காந்தியடிகளின் மதம் பற்றிய கோட்பாடும் அணுகு முறையும் ஐயா அவர்களுக்கு உடன்பாடானதாகும். காந்தி தம்மை ஒரு ஆழ்ந்த பக்தியுடைய இந்து என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமையுற்றார். சுதேசி

தர்மத்தின் அடிப்படையில் தாம் பிறந்த மதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். தாம் பிறந்த மதத்தை ஆராய்ந்து பாராமலே வேறு மதம் மாறுதல் கூடாது என்பது அவரது கொள்கை. அவ்வாறு மாறுவது தமது பூர்வீக மதத்துக்கு மாத்திரமல்ல, புதிதாக மாறியுள்ள மதத்துக்கும் நல்லது செய்ததாகாது. மதமாற்றம் உண்மையாக இருக்க வேண்டும். அவரவர் பிறந்த மதத்தை உண்மையாகக் கடைப்பிடிப்பாராளுல் ஒருவர் மதம் மாற வேண்டிய அவசியம் ஏற்படாது என்பது அவரது நம்பிக்கை. அதே சமயம் பிற மதங்களை அவமதிப்பது தவறு. ஆழ்ந்த ஆன்மீகக் கண்கொண்டு ஆராயப் புகுவோமாளுல் அனைத்து மதங்களும் அதனதன் அணுகுமுறையில் ஒரே இடத்தில் சந்திப்பவை என்பது தெரியவரும். ஆகவே அனைத்து மதங்களும் சமம் என்றும் அவற்றிடையே ஏற்றத்தாழ்வு கற்பிப்பது அறியாமை என்றும் காந்தியடிகள் கூறினர். ஆகவே அவர் தமது ஆசிரம விரதங்களில் ‘‘சர்வதர்ம சமத்துவ பாவனை’’ என்பதையும் சேர்த்துக் கொண்டார். தமது ஆசிரம பஜனவளியில் அனைத்து மதப் பாடல்களும் இடம் பெற்றிருந்தன. இந்த சர்வ தர்ம சமரச நோக்கு இந்து மதத்தில் இடம் பெற்றிருக்கிறது. பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சர் ஒரு சிறந்த காளி பக்தர். காளி தேவியுடன் நேரில் பேசும் அனுபூதி பெற்றவர். எனினும் அவர் புனித இஸ்லாமிய வேத நூலான குர்ரானையும், புனித கிறிஸ்தவ வேத நூலான பைபிளையும் பக்தி பாவனையுடன் கற்ருர். அக்காலத்தில் காளி பூஜை செய்வதைத் தவிர்த்தார். அந்தந்த மதத்துக்குரிய அனுஷ்டானத்துடனும் முறைப்படியும் அவற்றை ஆராய்ந்து அவற்றிடையே மத ஒருமைப்பாட்டைக் கண்டு ஆனந்தித்தார் என்று கூறப்பட்டுள்ளது.

ஐயா அவர்களின் அணுகுமுறை இதற்கு முற்றிலும் உடன்பாடு. அவர் ஒரு சிறந்த இந்து. மதமாற்றத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. எனினும் சர்வ சமயப் பிரார்த்தனையில் அவருக்கு ஈடுபாடும் உடன்பாடும் உண்டு. சமயங்களின் ஒற்றுமைக்காகப் பாடுபட்டார். மதுரையில் இந்து முஸ்லிம் கலகம் ஏற்பட்டபோது அதைத் தவிர்க்க இரவு பகல் பாராது உழைத்தார். அவர் முஸ்லிம் மக்களை நேசித்தார். அவர்களுக்குப் பாதுகாப்டளிக்க அவர் சகல ஏற்பாடுகளும் செய்தார். முஸ்லிம்கள் அவரைத் தங்களவர் என்று மதித்தனர். ஜாதி மத பேதத்தை அவர் ஏற்கவில்லை, ஒரு சிறந்த இந்துவுக்கும் ஒரு சிறந்த முஸ்லீமுக்கும் பிணக்கு இருக்க முடியாது. அரைகுறையான மதவாதிகளே தங்கள் அறியாமையால் சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள் என்று அவர் அடிக்கடி கூறுவார். ஆழ்ந்த ஆன்மீக நோக்குள்ளவர்கள் மத பேதம் கற்பிக்க மாட்டார்கள் என்பதற்கு ஐயா அவர்கள் சாட்சியாகிறார். நாள் தோறும் தவறாது பிரார்த்தனைசெய்தார். இதில் அவர் ஆறுதல் பெற்றார். தாம் சோதனைக்கு ஆளாகும் போதெல்லாம் அவர் தனித்து பிரார்த்தனையில் இருப்பார். பல சமயங்களில் பங்களாவின் மேல்தளத்தில் தனித்து உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்திருப்பதுண்டு. தாம் நடத்திவந்த ஆசிரமங்களிலும் மாணவர் விடுதிகளிலும் காலையிலும் மாலையிலும் சர்வ சமயப் பிரார்த்தனை நடைபெறுகிறதா என்று கண்காணிப்பார். காந்தியடிகளின் மதக்கோட்பாடு ஐயா அவர்களுக்கு எவ்வாறு உடன்பாடானவை என்று நிரூபிக்க இவை போதுமானவை.

காந்தியடிகள் கிராமிய நாகரீகத்தை ஆதரிப்பவர். அவரது இயக்கம் கிராமிய நாகரீகப் போக்குடையது. அவரது நிர்மாணத் திட்டங்கள் அதன் வழி பயிலுபவை. கிராமிய நாகரீகம் என்றால் கிராமங்களில் வாழ்வதை மாத்திரம் குறிக்காது. கிராமிய சூழ்நிலை அதற்கு உகந்தது என்பதில் ஐயமில்லை. ஆயினும் அது கிராமங் களில் வாழ்வது என்பதைவிட கிராமிய மனோபாவனையை அது குறிக்கிறது என்பதுதான் பொருந்தும். கிராமம் எளிமையான வாழ்க்கைக்கு உகந்தது என்பது உண்மை. ஆயினும் கிராமத்தில் வாழ்கிற ஒருவர் வலிந்தேற்று எளிமையாக வாழ்கிறாரா என்று அறுதியிட்டுக் கூற முடியாது. அவர் ஆடம்பரமாக வாழ வாய்ப்பில்லாத காரணத்தால் எளிமையாக ஒருவேளை வாழக்கூடும். இது கிராமிய நாகரீக வாழ்க்கை ஆகாது. எளிமையில் மகிழ்ச்சி கொள்ளும் பாவனையே இங்கு முக்கியம். இதனை வலிந்தேற்ற வறுமை என்பார் காந்தியடிகள். கிராமிய நாகரீகத்தின் இந்த எளிமை வாய்க்கப் பெறுமானால் அதனுடன் கூடவே வழி முறை தவறி பொருள் திரட்ட வேண்டும் என்ற ஆவல் இல்லாத அடக்கம் மற்றும் திருப்தியும் வரும். இவ்வாறு கூறுவதால் எளிமை என்பது வறுமை வாழ்க்கை என்று பொருள்படாது. ஆவலும் ஆடம்பரமும் இல்லாத எளிமையை அது குறிக்கும். கிராமிய நாகரீகத்தின் உயர்வையும் அதற்குப் புறம் பான நகர நார்கரீகத்தின் சிறுமையையும் குறித்து காந்தியடிகள் தமது "இந்திய சுயராஜ்யம்" என்ற நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

ஐயா அவர்கள் மதுரையில் வாழ்ந்த போதிலும் அவர் கிராமிய நாகரீக பாவனையுடையவர் என்பதை மக்கள் அறிவார்கள். ஏனெனில் அவர் எளிமை

யாக வாழ்ந்தார், காந்தியடிகள் கூறிய ''வலிந்தேற்ற வறுமைக்கு அவர் இலக்காக வாழ்ந்தார். அவருடைய தேவைகள் எளிமையானவை. ஆவல் இல்லாத உள்ளம் தமக்கென்று தேக்கி வைத்துக் கொள்ளும் ஆசை அவருக் கில்லை. தம் கையில் அதிகாரம் குவிந்திருக்க வேண்டும் என்ற நாட்டமில்லாதவர். குவியல் பொருளாதாரத்தில் பற்றில்லாதவர். இத்தியாதி குணங்கள் கிராமிய நாகரீ கத்துக்கு உரியனவாதலின் அவரது பிறவிக் கூறு கிராமிய பாவனைக்குரியதாகும்.

பிறவிக்கூறு என்பதை இன்னும் ஆழமாக பகவத் கீதை ''சுதர்மம்'' என்ற கலைச்சொல்லால் விளக்கு கிறது. ஆகவே 'கிராமியம் ஐயா அவர்களுக்கு சுதர்ம மாக அமைந்தது என்று கூறலாம். ஒருவருக்கு சுதர்மம் அவருக்கு இப்பிறவி வாய்க்கு முன்னரே காத்திருக்கிறது என்கிறார் விநோபா அடிகள் தமது கீதைப் பேருரை களில். எப்படி ஒருவருடைய பிறவிக்கு அவரது தாய் காத்திருக்கிறாளோ அதுபோல் சென்ற பிறவியின் சம்ஸ் காரத்தின் விளைவாக அவரது சுதர்மம் காத்திருக்கிறது. ஒருவர் தமது தாயைத் தீர்மானிக்கவில்லை. அவருக் காக அவனை தெய்வம் தீர்மானிக்கிறது. அதுபோலவே சுதர்மமும். தாயை எப்படி ஒருவர் தவிர்க்க முடியாதோ அதுபோல் சுதர்மத்தையும் தவிர்க்க முடியாது. அவ் வாறு தவிர்க்க முயன்றால் அவரது அழிவில்தான் அது முடியும், ஆகவே ஒவ்வொருவரும் அவரவர் சுதர்மத்தில் நின்று அதனை மலர்ச்சி பெறச் செய்து உயர்த்த வேண்டும்என்கிறது கீதோபதேசம். அதன்படி ஐயா அவர்கள் அவருக்கே உரிய சுதர்மத்தை ஆதாரமாகக் கொண்டு உயர்ந்தார். அவரது சுதர்மம் காந்தியம் என்ற பெயரால் நாம் வழங்கும் பண்பு. தமது சுதர்மத்தை

அவர் தமது இளமைப் பிராயத்திலேயே கண்டு கொண்டார். ''தன்னையறிந்து இன்பமுறும் தந்திரம்'' அவருக்குக் கைவல்யமாயிற்று. அதில் அவர் வெற்றி பெற்றார்.

அவரது சுதர்மம் காந்தியம் என்பது வெளிப்படை. அதை மக்கள் பார்த்து மகிழ்ந்தனர். அவரது நடையுடை பாவனை, எண்ணம், சிந்தனை அனைத்தும் காந்தியத்துக்கு ஒப்புதலாக இருந்ததை மக்கள் பார்த்தனர். ஆகவே அவரை **''மதுரை காந்தி''** என்று வாய் மணக்க மனம் மணக்கக் கூவி அழைத்தனர். நாமும் அவரை **''மதுரை காந்தி''** என்றே அழைப்போம். மதுரை காந்தி ஐயா நா.ம.ரா. சுப்பராமன் நாமம் வாழ்க.

1936-ஆம் ஆண்டில் மதுரைக்கு வந்த ஜவஹர்லால் நேருவுடன்
சுப்பராமன் அவர்களும் குடும்பத்தினரும்

வேதாரண்யம் கன்யா குருகுலத்தில் சர்தார் வேதரத்தினம், அவிநாசிலிங்கம் ஆகியோருடன் அய்யாவும், அன்னாரின் மனைவி பர்வதவர்த்தனி அம்மாளும்

1959-மதுரை காந்தி அருங்காட்சியகம் திறப்பு விழாவின் போது ஜவஹர்லால் நேருவிற்கு வரவேற்பு.
சி. சுப்ரமணியம், ஜி. ராமச்சந்திரன் உடன் இருக்கின்றனர்.

மதுரை காந்தி அருங்காட்சியகத்தில் ஆர். ஆர். திவாகர், சி. சுப்ரமணியம், ஜி. ராமச்சந்திரன் ஆகியோருடன்-1959



மதுரை காந்தி மன்றம் சிறப்புக் கூட்டம் திருவாளர்கள் மு. மாரியப்பன்,
சந்தானம், ரா. குருசாமி ஆகியோருடன்



காந்தி ஜெயந்தி விழாவில்
திரு. K. அருணாசலம் T.P. மீனாட்சிசுந்தரனார்
ஆகியோருடன்

தீண்டாமை விலக்கு கருத்தரங்கு பழனி - 1973
மாண்புமிகு N.V. நடராசன், தவத்திரு சோமசுந்தர
தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சுவாமி ஆனந்ததீர்த்
ஆகியோருடன்

அய்யா அவர்களின் 70வது பிறந்தநாள் விழா
ஸ்ரீ ஸ்ரீமன் நாராயணன், திரு. T. S. அவினாசிலிங்கம், திரு. K. அருணாசலம் ஆகியோருடன்

ஐயா அவர்களின் 70-வது பிறந்த தினவிழாவில் அவரது மனைவியார்
திருமதி பர்வதவர்த்தனி அம்மையார் பொன்னாடை போர்த்துகிறார்.

முன்னாள் தமிழக ஆளுநர் K. K. ஷா
அவர்களை வரவேற்றல்

தே. கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆஸ்ரமம்
ஆண்டு விழாவில் சான்றிதழ் வழங்குகிறார்

Saurashtra Vidya Vallari

மதுரை காந்தி ஜெயந்தி விழாவில்
சிறப்புரை நிகழ்த்துதல்
திரு. கக்கன் அவர்கள் உடன் இருக்கின்றார்.

காந்தி ஜெயந்தி விழாவில்
T. P. மீனாட்சி சுந்தரனார்
P. K. ராமாச்சாரியுடன்

பழனி சண்முகநதியில் 27-2-83ல்
மதுரை காந்தி அமரர் சுப்பராமன் அஸ்தி கரைத்தல்.

திருவாளர்கள். வை. சங்கரன், லெட்சுமிபதிராஜு, பி.ஏ. பழனிசாமி, வீ. சின்னச்சாமி, ஆர். எஸ். மணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

த்தியாகிரகி எனப்படுபவன்......

தீமையை நன்மையாலும், கோபத்தை அன்பினாலும், பொய்யை உண்மையாலும், வன்முறையை அஹிம்சை வழியிலும் வெற்றி கொள்ள இடைவிடாது முயற்சி செய்வான். சினம் கொள்ளும் நிலை வந்தாலும் ஒரு சத்தியாகிரகி அமைதியோடு இருப்பான். அதற்காகத் துன்பத்தையும் ஏற்பான்.

— மகாத்மாகாந்தி

சுப்பராமன் :

"கடமையைச் செய் பயனை எதிர்பார்க்காதே" என்ற கீதையின் தத்துவத்திற்கேற்ப வாழ்ந்து வழிகாட்டிய கர்மயோகி, தியாகச் செம்மல்தான் அய்யா சுப்பராமன்.

நாட்டின் விடுதலைக்காக-எளிய மக்களின் நல்வாழ்விற்காக தன் வாழ்வை அர்ப்பணித்த பெருந்தகையாளர்

அநீதிகளுக்குப் பணியாத, நெஞ்சுரம் மிக்க நேர்மையாளர் - தாழ்த்தப்பட்ட மக்களின் காவலர்.

காந்திய நெறிகளைப் பின்பற்றி பல்வேறு நிர்மாணப் பணிகளைத் தொடங்கி ஆக்கமும் ஊக்கமும் தந்த செயல் வீரர், தம் சொத்துக்களை எல்லாம் பொதுப்பணிக்கே அர்ப்பணம் செய்த தர்மகர்த்தா-நன்னெறியாளர்.

சமுதாயச் சேவை செய்ய விழைவோருக்கு இவரின் வாழ்க்கையே வழிகாட்டியாகும் என்பது உறுதி.

காந்திய இலக்கிய சங்கம்

மதுரை 20